www.padippakam.com




எழுச்சி

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
மார்ச் 2002 ■ ரூ.6

கிருத்துதாசு காந்தி

மானக் கேட்டைக் கண்டு
சீற்றம் வர வேண்டும்

# காதல் ஜாதி பார்க்குமா?

படிப்பகம்

www.padippakam.com



தலித் முரசு

# தேர்தல் ஆணையத்தின் செயல்பாடும் தனி மனித உரிமையும்



அரசியல் அமைப்புக் குழுவின் ஒவ்வொரு வளர் தருணத்திலும் 'அடிப்படை உரிமைகள்' என்ன என்பதையும், அவற்றிற்கான அவசியத்தையும் நான் வலியுறுத்தியுள்ளேன். தேர்தல் என்பது எவ்வாறு நடக்கிறது; அரசின் நிர்பந்தமின்றி வெளிப்படையாக நடக்கின்றதா என்று அறிந்து கொள்வதை 'ஒரு தனி மனிதனின் அடிப்படை உரிமையாக' நான் வரையறை செய்துள்ளேன். ஆனால், நாட்டில் நடக்கும் தேர்தலுக்கும் ஒரு தனி மனிதனின் அடிப்படை உரிமைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை எனவும், இதை தனிமனிதனின் அடிப்படை உரிமையாகக் கொள்ளக்கூடாது எனவும் இங்கு வாதிடப்படுகிறது.

தேர்தல் பற்றிய கண்காணிப்பு, வரையறை செய்தல், நெறிப்படுத்துதல், கட்டுப்பாடு விதித்தல் ஆகிய அதிகாரங்களை மய்ய அரசே தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. தேர்தல் காலங்களில், அந்த அதிகாரங்களை தேர்தல் ஆணையத்திடம் அளித்து விடுகிறது. இந்த தேர்தல் ஆணையம் நிரந்தர அமைப்பாக இருக்க வேண்டுமா? அல்லது தற்காலிக அமைப்பாக இருக்க வேண்டுமா? என்ற கேள்வியும் நம்முன் எழுகிறது.

நான் சொல்கிறேன்: ஒரு மாநிலத்தின் சட்டப் பேரவை அய்ந்து ஆண்டுகள் நிறைவடையும் முன்னரே நீக்கப்படலாம். அந்த நேரத்தில் மீண்டும் புதிதாக வாக்காளர் சேர்க்கை, தேர்தல் அறிவிப்பு, கண்காணிப்பு போன்றவற்றின் அவசியம் கண்டிப்பாக ஏற்படும். இது இன்றைக்கு உங்களுக்கு சரியென படாமல் இருக்கலாம். ஆனால், பின் வரும் காலங்களில் இத்தகைய சூழல் வெகு சாதாரணமாக உருவாகும்.

எனவே, தேர்தல் ஆணையர் என்பவர் ஒரு நிரந்தர அமைப்பை உடையவராக இருக்க வேண்டியது மிகுந்த அவசியமாகிறது. இதைத் தவிர, மேலும் சிறப்பு அலுவலர்கள் தேவைப்பட்டால், தேர்தல் காலங்களில் நமது குடியரசுத் தலைவரின் ஆலோசனையின் பேரில், சம்மந்தப்பட்ட மாநில அரசின் அலுவலர்களையும், உயர் அதிகாரிகளையும் தேர்தல் ஆணையம் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம்.

நமது நாட்டின் மக்கள் ஒரே தன்மை வாய்ந்தவர்களாக நாடு முழுவதும் இல்லை. மக்கள் மனதில் மாநிலம் சார்ந்த உணர்வு பெரும்பாலும் மேலோங்கியுள்ளது. சில மாநிலங்களில், பல மொழி பேசுபவர்கள், அருகில் உள்ள மாநிலத்தில் உள்ளவர்கள் என பல பிரிவினர் சேர்ந்து வாழ்கின்றனர். இத்தகைய மக்களை தேர்தல் ஆணையம் என்னும் 'மத்திய அமைப்பு' தன்னுடைய கட்டுப்பாட்டில் முழுமையாகக் கொண்டுவருவது என்பது நடைமுறைக்குச் சற்றும் சாத்தியமற்ற ஒன்றாகும். இங்கு, தேர்தல் ஆணையம் என்பது மத்திய அமைப்பாக இருப்பினும், ஒவ்வொரு மாநிலத்திலும் 'இணை தேர்தல் ஆணையங்கள்' உருவாக்கப்பட்டு, இவ்வமைப்புகள் மய்ய அமைப்பின் தொடர்பிலும், அதனுடைய கட்டுபபாட்டிலும் செயல்பட வேண்டும்.

மிகுந்த பொறுப்பும், கடமையும், தடங்கலற்ற அதிகாரமும் கொண்ட அமைப்பாக தேர்தல் ஆணையம் அமைய வேண்டும். தேர்தல் ஆணையத்தின் தலைவர், நமது நாட்டின் உச்ச நீதி மன்ற நீதிபதிக்கு உள்ளது போல மிகுந்த சுயேச்சையான அதிகாரத்தையும் தனக்குக் கீழ் அலுவலர்களையும் பெற்றிருத்தல் மிகுந்த அவசியம். இந்நிலை ஏற்பட்டால்தான், தேர்தல் ஆணையம், ஆளும் மய்ய மாநில அரசுகளின் அதிகார குறுக்கீடு இன்றி தன்னுடைய கடமையை ஆற்ற முடியும்.

அதே நேரத்தில், இந்தப் பதவிக்கு, ஒரு முட்டாளோ, குரூர சிந்தனை கொண்டவரோ, சனநாயகத்திற்கு எதிரான கருத்துகளைக் கொண்டவரோ வருவாரேயானால் - அங்கு தனிமனிதனின் அடிப்படை உரிமை கேலிக்குரியதாகிவிடும். இதைத்தவிர்க்க, நமது நாட்டின் குடியரசுத் தலைவர், சில உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அந்தக் குழு, தேர்தல் ஆணையத் தலைவர் பதவிக்குத் தகுதியானவர்களாக சிலரின் பெயர்களைப் பரிந்துரை செய்ய வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட பெயர்கள் மீண்டும் ஒரு குழுவிடம் தரப்பட்டு அதிலிருந்து சிலரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு இறுதியாக தரப்பட்ட தொகுதியில் இருந்து ஒருவரை நமது குடியரசுத் தலைவர் முடிவு செய்ய வேண்டும். இந்த நடைமுறையில் நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் ஈடுபடுவதால், தவறுக்கு இடமின்றி மிகச் சரியான நபர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அங்கீகாரம் பெற வேண்டும். இதனால் மிக உயர்ந்த பதவிக்குத் தகுதியானவர் சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார். ◇

*'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு' : 13 பக்கம் : 722*

> "'வாக்குரிமை' ஒவ்வொரு தனிமனிதனின் அடிப்படை உரிமையாக உள்ள போது, தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டை அடிப்படை உரிமைகள் என்ற பிரிவில் வகைப்படுத்துவதே சரியானதாக இருக்கும்.
>
> ஒரு மனிதன் ஏதோ ஒரு காரணத்திற்காக, தன்னுடைய வாக்குரிமையை இழக்கிறான் என்ற நிலை - ஒரு பகுதியில் அல்லது மாநிலத்தில் ஏற்படுமானால், அங்கு அந்த மனிதனின் 'அடிப்படை உரிமைகள்' மறுக்கப்படுவதாக நமது அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது."

படிப்பகம்

www.padippakam.com

புகைப்படம் : மீனா மயில்



அப்பாவுக்காக இல்லை
அம்மாவுக்காகவும் இல்லை
எலும்பில் தோல் ஒட்டி
வறண்டு கிடக்கும்
என் தங்கச்சி வயிறுக்கு
கொஞ்சமாய் கிடைக்கப் போகும்
பாலுக்காக,
உயிரின் கூறுகளை
பூமியில் இறக்கிவிட்டு
கொட்டுச் சத்தம் முழங்க
ஏறுகிறேன் கயிறில்.

இப்போது
எல்லாம் எனக்குக் கீழ்

நீண்ட அழகிய காரில்
பொம்மையை
கட்டிக் கொண்டு பயணிக்கும்,
புது சொக்கா போட்டு
அய்ஸ்கிரீம் தின்னும்
அழகுக் குழந்தைகள்
கண்ணில் பட்டுப் போகின்றன
என் கனவுகளைச் சீண்டி.

என்றாலும்
நான் மட்டும்
இறைந்து நிற்கிறேன்
சிதறி விழும் சில்லறைகளுக்காய்...

வானம் தொட்டு
கீழே வந்தால் கூட
வித்தைக்காரிக்கு
மதிப்பென்ன
இருந்துவிடப் போகிறது?

காற்றில் மிதந்து
கவனமாக
ஆசைகளைத் தேக்குகிறேன்.
இந்தக் கயிறும் அறியாது
என்னுள் கனக்கும்
அந்த பாரத்தை.



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்




8


7 **நிகழ்வு**

திசை முகம்

8 **சில குறிப்புகள்...**

காதல் ஜாதி பார்க்குமா?
**செவ்வந்தி**

12 **பெண்கள் நாள்**

''ஆதிக்கத்தை ஜெயிக்கணும்னா அதிகாரம் நம்ம கையில இருக்கணும்''
**காளியம்மாள் பேட்டி**

14 **வஞ்சகம்**

பொதுச் சொத்துகளும் - தலித்துகளின் பங்கும்
**ப்ரதிபா ஜெயச்சந்திரன்**

17 **அறிவாயுதம்**

அம்பேத்கரின் பொருளாதார தொலைநோக்கு
**சங்கமித்திரை**

18 **மீறல்**

கொடிய துயரங்களின் வெளிப்பாடு
**கோ. சுகுமாரன்**

21 **அறிமுகம்**

தேவை ஒரு செயல்
**சன்னா**

22 **பேட்டி**

''மானக்கேட்டைக் கண்டு சீற்றம் வரவேண்டும்''
**கிருத்துதாசு காந்தி**

26 **மால்கம் எக்ஸ்**

''அமெரிக்கா வெறுக்கப்படுவது ஏன்?''
**ரவிக்குமார்**

30 **பதிவு**

குடியரசு - அலைவுற்ற ''அமைதியான வெற்றிடம்''
**கவுதம சன்னா**

34 **அலசல்**

இந்துத்துவ காவலர்களின் இலக்கியச் சந்தை
**யாக்கன்**

42 **கவிதை**

பெயரற்றவர்கள்
**ஜோதி லஞ்செவர்**


12





18

- முன் அட்டைப் புகைப்படம் : 'காஞ்சனை' மணி
- பின் அட்டை ஓவியமும் வடிவமைப்பும் : யாக்கன்
- இதழ் வடிவமைப்பு : ஜெமிமா ஆலிஸ், பிரேமா



படிப்பகம்

www.padippakam.com

# தடுத்து நிறுத்துங்கள்

குஜராத்தில் நூற்றுக்கணக்கான மக்கள், மதக் கலவரத்திற்கு இரையாகின்ற கொடுமை, நம் நெஞ்சை அடைக்கிறது. ஒவ்வொரு முறையும் சாதி, மதக் கலவரங்கள் நிகழ்ந்த பிறகுதான் - கடுமையான கண்டனங்கள் எதிரொலிக்கின்றன. ஆனால், இக்கண்டனங்கள், இழந்த உயிர்களை ஒருபோதும் மீட்டுத் தராது. இதுபோன்ற கலவரங்கள் வருவதைத் தடுப்பதற்கு பெரிய அளவில் யாரும் முயற்சி மேற் கொள்வதில்லை.

கடவுள் இல்லை என்பவர்கள் கோயிலை இடித்ததாகவோ, மசூதியை இடித்த தாகவோ, மத நம்பிக்கையாளர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்ததாகவோ வரலாறு இல்லை. கடவுள் இருக்கிறது என்பவர்கள்தான் - கடவுளின் பெயரால் வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். கடவுள்களும் கோயில்களும் மனிதர்கள் மீது வெறுப்பைத் திணித்து, பகைமையை வளர்க்கும் கருவியாகவே பயன்படுகின்றன என்பதற்கு அண்மையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலவரங்களே சான்று.

இந்து மதவாதக் கட்சியான பாரதீய ஜனதா ஆட்சியில் இருக்கும் தைரியத்தில் விசுவ இந்து பரிஷத், அடாவடித்தனமாக 'ராமன் கோயிலைக் கட்டியே தீருவோம்' என பிரச்சாரம் செய்ததே கலவரம் வித்திடக் காரணமாக அமைந்து விட்டது. அண்மையில் வாரணாசியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில், 'பா.ஜ.க. வெற்றிக்கு முஸ்லிம்களின் வாக்குகள் தேவையில்லை' என்று பிரதமர் வாஜ்பேயி உறுதிபடப் பேசியிருப்பது அவரின் ஒரு சார்புப் போக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

மேலும், 'தான் அடிப்படையில் ஒரு ஆர்.எஸ்.எஸ். காரர்' என்று ஒரு பிரதமர் சொல்வதும் 'ராம ஜென்ம பூமி இயக்கம் ஒரு தேசிய இயக்கம்' என்று அவர் குறிப் பிடுவதும், நாட்டின் ஒற்றுமைக்கும் - மத சார்பின்மைக்கும் - பன்முகத் தன்மைக்கும் ஊறுவிளைப்பதாகவே இருக்கிறது. பிரதமரின் இது போன்ற பேச்சுகளும் செயல் பாடுகளும் தான், இந்து வெறியர்களை மென்மேலும் ஊக்கப்படுத்துகின்றன. இவ்வளவு உயிர்கள் பலியான பிறகும் மத்திய அரசு, மதவெறி அமைப்புகளிடம் மண்டியிட்டு மனுபோட்டுக் கொண்டிருப்பது வெட்கக் கேடானது.

ஒவ்வொரு மதக்கலவரங்களும் 'இந்து ஒற்றுமை'யைப் பலப்படுத்துகின்றன. எனவேதான், கலவரங்களுக்கு பலவிதங்களிலும் விதை தூவப்படுகிறது. 'இந்த ஒற்றுமை'யைப் பயன்படுத்தி கோயில் கட்டுவதை விரைவுபடுத்துகின்றன மதவெறி அமைப்புகள். 'இந்து ஒற்றுமை'யைத் தூண்டும் முயற்சியை நாம் முளையிலேயே கெல்லி எறிய வேண்டும். அதற்கு நாம் ஒரு அடிப்படை உண்மையை சரிவர விளங்கிக் கொள்ள வேண்டும்.

அந்த உண்மை என்ன? இந்த நாட்டில் உள்ள 25 சதவிகித தலித்துகள் இந்துக் கள் அல்ல; 20 சதவிகிதமுள்ள சிறுபான்மையின மக்கள் இந்துக்கள் அல்ல. இன்றளவும் இந்து மதத்தாலும் சட்டப்பூர்வமாகவும் 'சூத்திரர்'களாக (விபச்சாரி மக்கள்) கருதப்பட்டு பல வழிகளிலும் உரிமைகளின்றி ஆதிக்க சாதியினருக்கு சேவகம் புரியும் 50 சதவிகித பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் இந்துக்கள் அல்ல.

எஞ்சியிருக்கக்கூடிய 5 சதவிகித (முதல் மூன்று வர்ண) மக்களே இந்துக்கள். இந்த அய்ந்து சதவிகித ஆதிக்க சாதியினரின் நலன்களுக்காகவே பெரும்பான்மை மக்கள் அடிமை வேலை செய்து கொண்டிருக்கின்றனர். இதற்காகவே இவர்கள் 'இந்துக்கள்' என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆனால், இந்துக்களுக்குரிய எந்த உரிமையும் இந்த பெரும்பான்மை மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. இந்திய சாதிய சமூகத்தின் இந்த அடிப்படை உண்மையை நாம் முதலில் புரிந்து கொண்டு பிரச்சாரம் செய்தாலே, இங்கு மதக்கலவரங்கள் வருவதைத் தடுத்து விடலாம்.

மதவெறி அமைப்புகள் மார்ச் 15 அன்று ராமன் கோயில் கட்ட எத்தனிக்கும் வன் செயல்களை அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். அது மட்டுமல்ல, எல்லா துறைகளும் காவிமயமாக்கப்படுவதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தேசிய ஜன நாயகக் கூட்டணியில் உள்ள மத சார்பற்ற கொள்கையில் நம்பிக்கை கொண்ட கட்சிகள் இனியாவது, பா.ஜ.க.விற்கு அளிக்கும் ஆதரவை திரும்பப்பெற வேண்டும். இல்லையெனில், காவி மயமாக்கப்படும் ஒவ்வொரு செயல் திட்டங்களும் எதிர் வினையையே உண்டாக்கும்.

எழுச்சி
தலித் முரசு

Volume : 5 Issue : 9

மார்ச், 2002
ஆண்டு : 6 - இதழ் : 2

ஆசிரியர், வெளியிடுபவர்
பெ. சந்திரசேகசன்

பொறுப்பாசிரியர்
புனித பாண்டியன்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 100/-
நூலகக் கட்டணம் : ரூ. 200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

முகவரி
ஈ-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை கே.கே. நகர், சென்னை - 600 078

தொலைபேசி : 371 66 88
தொலைநகல் : 474 11 88

E-mail : ambedkar@md4.vsnl.net.in



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்

சேரியிலே பிறக்கும் குழந்தைகளுக்கு காமராஜ், அண்ணா, கருணாநிதி என்றும் இந்திரா காந்தி, ஜெயலலிதா என்றும் பெயர் வைக்கிறார்கள். ஆனால், ஊர்த் தெருவில் பிறக்கிற எந்தக் குழந்தைக்காவது அம்பேத்கர் என்று பெயர் சூட்டப்படுகிறதா? தாழ்த்தப் பட்டவன் ஒரு போதும் சாதி பார்ப்பதில்லை. ஆனால், தலித் அல்லாத சாதியில் பிறக்கும் குழந்தைகளுக்கு அம்பேத்கர் என்று பெயர் வைப்பதில்லையே அது ஏன்?

திருமாவளவன், அமைப்பாளர் 'விடுதலைச் சிறுத்தைகள்' தேனியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில்.

பல ஆண்டு காலமாக இருந்து வரும் பெண்ணடிமைத் தனத்துக்கு சாதிகளும் அந்த சாதிகள் ஏற்படுத்திய சடங்குகளும்தான் முக்கிய காரணம். பெண்ணடிமைத்தனம் நீங்க போராடுவதற்கு முன்பு சாதிகள் ஒழியப் போராட வேண்டும். சாதிகள் ஒழியும் போதுதான் பெண்ணடிமைத் தனமும் ஒழியும்.

சிவகாமி, செயலாளர், தமிழக ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில்.

சிந்து சமவெளி நாகரிகம் ஆரியருடையது, திராவிடருடையது அன்று என்பது, அறிவியல் பார்வையற்ற, கற்பனையான ஒரு கோட்பாடு ஆகும். நடுநிலையாளர்கள் வரலாற்றாசிரியர்கள் மற்றும் அகழ்வாய்வாளர்கள் முடிவு செய்து நன்கு நிறுவிய கோட்பாட்டிற்கு அது முரண்பட்டது. ஆகையால், சிந்து சமவெளி நாகரீகம் ஆரியரது என்பதைப் பாடத்திட்டத்தில் நுழைக்க முயலும் போக்கை மத்திய அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்.

பிப்ரவரி 10-12 ஆகிய நாட்களில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற திராவிட மொழியியல் 29ஆவது மாநாட்டுத் தீர்மானங்கள்.

புகைப்படம் : 'இந்து'



அகமதாபாத் நகரின் தெருக்களில் முஸ்லிம்களுக்கு எதிராக வாளை சுழற்றும் இந்து வெறியர்கள்



தன் குடும்பத்தைத் தாக்க வரும் கலவரக் காரர்களை நோக்கி கெஞ்சும் ஒரு முஸ்லிம்

## மதங்களின் பெயரால் மனித வேட்டை வேடிக்கை பார்க்கிறது ஒரு தேசம்



படிப்பகம்

www.padippakam.com

# திசை முகம்









ஓவியர் கு. புகழேந்தியின் 'திசை முகம்' - ஓவியக் கண்காட்சி, சென்னை தியாகராயர் நகரில் நடைபெற்றது. 12.2.2002 முதல் அய்ந்து நாட்கள் நடைபெற்ற இந்த ஓவியக் கண்காட்சியை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் திறந்து வைத்தார். இறுதி நாளன்று தி.க. பொதுச் செயலாளர் கி. வீரமணி கண்காட்சியைப் பார்வையிட்டு சிறப்புரையாற்றினார். மேலும், சுப. வீரபாண்டியன், வழக்கறிஞர் அருள்மொழி, மருத்துவர் செ. நெ. தெய்வநாயகம், கவிஞர் இன்குலாப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.



''கடவுளின் பேரால் நிலவும் மூடநம்பிக்கைகளை எதிர்த்தும், சாதியின் பேரால் நிலவும் அடிமைத் தனத்தை எதிர்த்தும், மனிதர்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை சாடி - தன்மான உணர்வை ஊட்டியும், பெண் விடுதலை, இன விடுதலைக் காக இயங்கியும் வாழ்ந்த மாபெரும் புரட்சி யாளராக, தமிழர்களின் திசைமுகமாகத் திகழ்பவர் பெரியார். அம்முகத்தை ஓவியத்தில் பதிவு செய்வது எனது வரலாற்றுக் கடமை'' என்றார் புகழேந்தி.






படிப்பகம்

www.padippakam.com

# காதல் ஜாதி



■ செவ்வந்தி

## சில குறிப்புகள்

“ பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் அந்த ஆதி மனிதர்கள் எதைத் திரித்து தாலியாகக் கட்டிக் கொண்டார்கள்? ”

உணர்வதற்கு, அனுபவிப்பதற்கு, எழுதுவதற்கு என எல்லாவற்றுக்குமே காதல் சுகமானது. நெடிது பரவிக்கிடக்கும் பாலைவனத்தில் சிலிர்த்து விழுகின்ற ஒரு துளி மழையாகவும், குளிர் நடுங்கும் பனிக் குகையில் சுள்ளென இறங்கும் ஒளிவெயிலாகவும் காதல், மனித வாழ்க்கையின் அவசியமாகிறது. மிகத் தெளிவாக எல்லா உயிரையும் கடக்கும் காதலுக்கும் நம்பிக்கைக்கும் அப்படியொன்றும் பெரிய வித்தியாசம் இருந்துவிட முடியாது என்பதும் உயிர் வாழ்வது சிரமமாகிப் போன இவ்வுலகில், இன்னும் இயக்கமிருக்கிறது என்றால் அது எல்லோருமே யாரையோ நேசிப்பதால் மட்டுமே என்பதும் என் நம்பிக்கை.

பூமியின் அந்த முதல் மனிதர்களை நினைத்துப் பாருங்கள். என்ன பேசியிருப்பார்கள்? அசைவற்றுக் கிடக்கும் காடுகள், மலைகள், அசைந்து திரியும் விலங்குகள், பறவைகள். எப்படி இருந்திருக்கும்? பதட்டமும், புரியாமையும் ஏற்படுத்திய அந்த நெருக்கமும் காதலும் தான் இன்று சாதி, மதம், பணம், போன்றவற்றால் சிதறுண்டு கிடக்கும் மனித குலம் மொத்தமும் உருவானதற்கான காரணமாக இருந்திருக்க வேண்டும். அப்படி உருவான ஒரு 'ஆத்மார்த்'தத்தை - இன்று சாதியும் மதமும் பணமும் தீர்மானிக்கிறதைப் பார்க்கும்போது, பூமியே அழுக்கடைந்து கிடக்கிறது என்பதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை.

## சில கதைகள்

சமீபத்தில் அவ்வளவாக பழக்கமில்லாத நண்பர் என்னை சந்திக்க வந்தார்.

அட! என்ன இந்த பக்கம்?

ஒன்றுமில்லை சும்மாதான்.

சும்மாவெல்லாம் பார்க்க முடியாது, போயிட்டு வாங்கன்னா சொல்ல முடியும்?

என்ன வேலை செய்றீங்க என்பதில் தொடங்கி பேச்சு எங்கெல்லாமோ சென்றது.

ஆனாலும் எதையோ சொல்ல வருவதும், பின் தயங்கி விட்டு விடுவதுமாகவே இருந்தார்.

நானாகவே மீண்டும் கேட்டேன்.

ஏதாவது பிரச்சனையா?

அதெல்லாம் இல்ல. நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணனும்.

சரி சொல்லுங்க. என்னால முடியும்னா கட்டாயம் செய்றேன்.

அது வந்து, நான் ஒரு பொண்ண காதலிக்கிறேன்.

நல்ல விஷயம்தான? இத சொல்றதுல என்ன தயக்கம்? பொண்ணு கிட்ட செல்லிட்டீங்களா?

இல்ல அங்க தான் பிரச்சனையே, உங்க உதவி அதுக்கு தான் தேவைப்படுது.

என்னடா இது நம்ம உதவியா? அப்படீன்னா நமக்குத் தெரிஞ்ச பொண்ணாத்தான் இருக்கணும். எனக்குள் பரபரப்பு.

பொண்ணு யாருங்க என்ற கேள்விக்கு அவர் சொன்ன பெயரை கேட்டு ஆச்சர்யமோ ஆச்சர்யம்.

என் நெருங்கிய தோழி என்பதால் எனக்கும் ஆர்வம் கூடியது.

எப்படி அவங்கள தேர்ந்தெடுத்தீங்க?

பெரிய காரணமெல்லாம் இல்லை. அவங்களும் சைவப் பிள்ளை, நானும் சைவப்பிள்ளை கல்யாணத்துக்குப் பிரச்சனை வராதுல்ல அதனால தான் என்றார் சிரிக்காமல்.

அடப்பாவி!!!

(வாயடைத்துப் போனேன் நான்)

**இங்கு காதலுக்குக் காரணமே சாதிதான். ஆனால்...**



படிப்பகம்

www.padippakam.com



மிக நெருக்கமான இன்னொரு தோழியின் காதல் செத்துப் போனதற்கு இதே சாதி எப்படி தடையாயிருக்கிறது பாருங்கள். அவள் ஒரு இசை நேசகி. எப்போதும் பூக்கள், மழை, மலைகள் பற்றி இயற்கையின் நேரடிக் குழந்தை மாதிரி பேசிப் பேசி மாய்வாள். மலைக்காடுகளின் குளிரை குடைந்து பட்டாம்பூச்சி தேடிக் கொண்டிருந்த அவளையும் காதல் தொட்டது மிக மெல்லியதாய்... எதையும் உணர்வு சொட்டச் சொட்ட நிரப்பிப் பார்ப்பவளுக்கு காதல் எப்படியொரு அனுபவமாய் உள் நுழைந்திருக்கும்? தான் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்தவள், காதலிப்பதோ வேறு சாதிப் பையனை என்றெல்லாம் அவள் யோசிக்கவில்லை என்று நினைக்காதீர்கள். அவள் நிச்சயமாக யோசித்தாள். ஆனால், தங்களுடைய 'தெய்வீக'க் காதலுக்கு முன் எதுவும் (சாதியும்) நிற்க முடியாது என்று நம்பினாள். நம்பிக்கை வீண் போனது. ஆண்டுக் கணக்கில் வளர்ந்த அந்த காதல் திடீரென முடிவுக்கு வந்தது. திருமணக் காலம் நெருங்க நெருங்க சாதி தனது கூரிய வாளை சுழற்றிச் சுழற்றி அவள் காதல் மேல் வீசியது. ''கீழ் சாதிக்காரங்களை வாசல்கிட்டேயே விடமாட்டோம். நீ எப்படி என் குடும்பத்தில்?'' காதலனின் பெற்றோர்கள் தோழியைக் கேட்ட போது கூட இல்லை, அம்மாவின் பேச்சை மீற முடியாது என நேசித்தவன் சொல்லி ஒதுங்கிய போது அவளின் 'ஆத்மார்த்தம்' செத்துப் போனது. அழுது தீர்த்தாள். இன்று அவளின் காதலன் ஒரு பார்ப்பனப் பெண்ணை மணம் முடித்துக் கொண்டதாகக் கேள்விப்பட்ட போது புரிந்தது, காதல் 'உயர்சாதி' மட்டும் பார்க்காது என்று. காதலுக்கு சாதியை அழிக்கும் சக்தியிருக்கிறது என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், பெரும்பாலும் சாதியிடம் காதல் தோற்றுவிடுகிறது என்பதை இது போன்ற கதைகள் எனக்கு அவ்வப்போது உணர்த்துகின்றன.

## சில பிடிவாதங்கள்

திருமணம் என்பது சாதாரண நிகழ்வு இல்லை. இவ்வளவு காலம் தனியாய் அனுபவித்த வாழ்க்கையைப் பங்கு போட்டுக் கொள்ள ஒருவரை ஏற்றுக் கொள்ளும் அற்புதம். 'அய்யோ' என்று இடிந்து அழுகையில், இதோ நான் இருக்கிறேன் என்ற ஆறுதல். வந்து குவியும் மகிழ்ச்சிகளை சொல்லிக் குதூகலிக்க ஒரு உறவு. இப்படி மனம் ஒத்துப் போனவர்கள் சேர்தலைத்தான் 'திருமணம்' என்ற பெயரில் சடங்காக சாதிச் சமூகம் ஆக்கிவிட்டது.

என்று அது சடங்காக மாறியதோ அன்று ஆரம்பித்தது வினை. பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ, குடும்ப கவுரவத்திற்காக கட்டுத் தாலியை, நீட்டுக் கழுத்தை என்றாகிவிட்டது நிலைமை. இந்த ஏற்பாட்டுத் திருமணங்களால் சுயத்தை இழந்து, விருப்பத்தைத் துறந்து, வலிந்து நேசிக்கும் கட்டாயத்திற்கு ஆளாகி ஊமையாய் அழும் எத்தனை பேரை கண்ணெதிரில் பார்க்கிறோம்.

ஏற்பாட்டுத் திருமணங்களில் எத்தனை பெற்றோர் பிள்ளைகளின் விருப்பத்தைக் கேட்கிறார்கள். வளர்ந்துவிட்ட பிள்ளை, யாரையாவது காதலித்துவிடும் முன்திருமணத்தை முடித்துவிட வேண்டும் என பெற்றோர்கள் தவிப்பது ஏன்? சம்பந்தமே இல்லாத இருவரை பொம்மைகளாக அலங்கரித்து ஊர் கூட்டித் திருமணம் செய்து வைப்பதால்தான், நாளுக்கு நாள் இச்சமூகத்தில் மனிதம் குறைந்து கொண்டே போகிறது. குடும்பம் என்ற சுயவிலங்கு போட்டுக் கொண்டு காதலை கொல்லப் புறப்பட்டவர்கள் மனிதத்தையும் சேர்த்தே அழிக்கிறார்கள். எல்லோராலும் எல்லோரையும் நேசிக்க முடியாது. நேசிப்பவர்கள் இணையட்டுமே என்ற பெருந்தன்மை, சாதியை சுமந்து கொண்டிருப்பவர்களிடம் ஒரு போதும் வருவதில்லை.

தாலியும் கல்யாணமும் பெண்களை அடிமைப்படுத்த கையாண்ட பம்மாத்து வேலை தான்.

நம்முடைய பாரம்பரிய குடும்ப அமைப்பு பெண்களை தலைமையாகக் கொண்டது என்பதை அறிகிறோம். மனிதனை வயிற்றில் சுமந்து, உயிர் பிரித்து உலகிற்குத் தரும் பெண்களின் அசாத்தியத்தைப் பார்த்து ஆண்கள் நிச்சயம் பொறாமைப்பட்டிருக்க வேண்டும். இயற்கையாகவே இப்படியொரு சக்தியை கொண்ட பெண்களை எப்படி வீழ்த்துவது?

> “சாதி பெரிய மலை. காதல் சிறு உளி. இன்று அடிக்கத் தொடங்கினால் காலப் போக்கில் மலை சிதையும், சிதறும் என்பது நிச்சயம்.”

பெண்களுக்கெதிரான சடங்குகளும் சம்பிரதாயங்களும் அப்படித்தான் உருவானது. இல்லாத சாமிகளும் அதற்கு கை கொடுத்தன.

எது பெண்களின் பலமோ அதையே பலவீனமாக்கியது ஆண்வர்க்கம். தீட்டு, கற்பு, தாலி, ஒழுக்கம், பத்தினி போன்ற வார்த்தைகளால் பெண்கள் சிறைப்படுத்தப்பட்டனர். வரும் தலைமுறைப் பெண்கள் அனைவரையும் அதே சிறைக்குள் அடைத்து விட நவீனத்தையும் நாகரீகத்தையும் தனக்கேற்றபடி வளைத்துப் போட்டனர். தாலியற்ற பெண்கள் வேலியற்ற பயிர்களாகப் பார்க்கப்பட்டனர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் அந்த ஆதி மனிதர்கள் எதைத் திரித்து தாலியாகக் கட்டிக் கொண்டார்கள்? இருவர் சேர்ந்து வாழ ஏற்படும் ஒப்பந்தத்தில் பரஸ்பர நம்பிக்கை மட்டுமே மூலதனமாக இருக்க முடியுமே தவிர, தாலி அல்ல என்பதைப் புரிய வைக்க இன்னும் நூற்றாண்டுகள் உருண்டோட வேண்டும். இப்போது ஆங்காங்கே 'தாலிக்கு வேலையே இல்லாத' சில சுயமரியாதைத் திருமணங்கள் நடக்கின்றன. ஆனால், அதன் குரல் ரொம்பவும் பலவீனமாக இருக்கிறது.

சுயமரியாதைத் திருமணம் தான் செய்து கொள்வேன் என்று அடம்பிடிக்கும் என் நண்பர் ஒருவருக்கு பெண் கிடைப்பது பெரும்பாடாக இருக்கிறது. சட்டப்படி குற்றமான வரதட்சணையைக் கூட (தலையை அடமானம் வைத்தாவது என்ற வசனங்கள் வேறு) அதிகமாக கொடுத்துவிடுகிறோம். ஆனால், கட்டாயம் தாலி கட்ட வேண்டும் என்று அடம்பிடிக்கின்றனர் பெண்களும் பெற்றோர்களும். அந்த மஞ்சள் கயிரின் ஈரம் பட, தழையத் தழைய தாலி கட்டிக்க



படிப்பகம்

www.padippakam.com

ணும் என்று என் தோழி ஒருத்தி தன் வாழ்நாள் லட்சியத்தை சொன்ன போது எனக்கு சிரிப்பு தான் வந்தது. தாலிகளுக்கு பேராதரவு கொடுக்கும் தமிழ் திரைப்பட இயக்குனர்களை நாடு கடத்தினால் தான் இது போன்ற வசனங்களில் இருந்தாவது தப்பிக்க முடியும் என்று நினைக்கிறேன்.



காஞ்சனை மணி

தாலி கட்டிக் கொண்டோம் என்பதற்காக எத்தனைப் பெண்கள் வீட்டிற்குள் உதை வாங்கிக் கொண்டிருக்கின்றனர்! குடும்ப கவுரவம் காக்க வேண்டி அவர்கள் படும கொடுமைகளை வெளியில் சொல்வதில்லை. அதோடு பத்து பேருக்கு தாலி கட்டி ஊருக்கு ஊர் பெண்டாட்டிகளை வைத்துக் கொள்பவர்கள், இந்த சமூகத்தின் பார்வையில் கில்லாடிகள், மச்ச முள்ளவர்கள் தானே தவிர மிகப் பெரிய குற்றவாளிகள் இல்லை.

இப்படியாக... இந்த சமூகத்தில் நடந்தேறும் அத்தனை அசிங்கங்களுக்கும் காரணகர்த்தாவாக இருக்கும் சாதியை, பகுத்தறிந்து பார்க்காமல் நம் ரத்தம் சம்பந்தப்பட்டதாக ஆக்கி திரிபவர்கள் ஒரு நிமிடம் அல்ல, ஆற அமர உட்கார்ந்து யோசியுங்கள்.

ஏற்பாட்டுத் திருமண ஆதரவாளர்களே! காதல் திருமணங்கள் தோற்றுப் போகின்றன என்ற வாதத்திற்கு வராதீர்கள். சதவிகிதக் கணக்கெடுத்துப் பார்த்தால் புரியும் - எத்தனை பேர் உங்கள் பிடிவாதத்தால் விருப்பமில்லாத வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றனர் என்று.

காதல் திருமணங்களுக்கு சாதியை அழிக்கும் சக்தியிருக்கிறது; ஒரு சமூகம் சீர்திருந்தவும், அதன் அழுக்குகளைக் களையவும் நீங்கள் யாரும் கத்தியெடுத்துக் கொண்டு போரிட வேண்டாம். உங்கள் பிள்ளை சாதி மாறி காதலித்தால் அதை வரவேற்க வேண்டியது அனைவரின் சமூகக் கடமை.

சாதி பெரிய மலை. காதல் சிறு உளி. இன்று அடிக்கத் தொடங்கினால் காலப் போக்கில் மலை சிதையும், சிதறும் என்பது நிச்சயம்.


## சில நிகழ்வுகள்

காதலர் தினம் பரவலாக எல்லோர் மத்தியிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றாலும் காதலை பெருங்குற்றமாகக் கருதும் இங்கு அதை வெளிப்படுத்த வழியில்லை. இந்த சமூகம் எல்லாவற்றையும் மறைமுகமாக செய்ய அனுமதிக்கிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற பாரம்பரிய சமூகத்தில் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது கள்ளத் தொடர்பு. செக்ஸ் பற்றி பேசினால் அபத்தம், ஆனால் எய்ட்ஸ் எப்படித்தான் பெருகுகிறதோ தெரியவில்லை. 'தீண்டத்தகாத' தலித் பெண்கள் உயர் சாதியினரால் பாலியல் வன்முறைக்கு ஆளாவது எப்படி? அப்படித்தான் ஆகிவிட்டது காதலும்.

'ஒளிந்து ஒளிந்து காதலிச்சுக்கோ யாரை வேணாலும், ஆனா கல்யாணத்திற்கு நாங்க காட்டுற பொண்ணு தான். இல்ல சொத்துல ஒரு பைசா கிடையாது' என்று பூச்சாண்டிகளுக்கு பயந்து நிறைய சொங்கிக் காதல்கள் காணாமல் போய்விடுகின்றன. காதலுக்கு தமிழ் சினிமாவை தவிர இங்கு யார் பகிரங்க ஆதரவு தந்துவிட்டார்கள் சொல்லுங்கள். சாதாரண நட்பிற்கே பயந்து பதுங்கி சாக வேண்டிக் கிடக்கிறது. பின் எப்படி சாதி ஒழிய காதல் செய்வது?...

......இப்படியெல்லாம் உணர்ச்சிவசப் படாதீர்கள், நாங்கள் இருக்கிறோம் ஆதரவு தர என்று சுயமரியாதை இயக்கம் கை நீட்டியிருப்பது உண்மையிலேயே அப்பாடா என்று நிம்மதி அளிக்கிறது. இப்படியொரு ஈடு இணையில்லாத சமூக சேவையில் இறங்கியிருக்கும் **'சுய மரியாதை இயக்கம்'** குறித்து இங்கு சொல்ல வேண்டும்.

சாதி ஒழிப்பிற்கான சட்ட எரிப்புப் போராட்டத்தை 1957இல் பெரியார் நடத்தினார். அதில் கலந்து கொண்டு தமிழகம் முழுவதிலிருந்தும் மூவாயிரம் பேர் சிறை சென்றனர். 20 பேர் உயிரிழந்தனர். அதை நினைவுபடுத்தும் வகையில் கடந்த ஆண்டு நவம்பர் 26இல் நீலகண்டன், அயன்புரம் ராஜேந்திரன், ரஜினி, பேரா. மார்க்ஸ், ஆகியோர் சேர்ந்து சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினர். கலப்புத் திருமணங்கள் சாதி ஒழிப்பிற்கான தொடக்கமாக இருக்கும். கலப்புத் திருமணக் குழந்தைகளுக்கு இட ஒதுக்கீட்டில் முன்னுரிமை கொடுத்தால், நிறைய பேர் சாதியை மறந்து முன் வருவார்கள். எப்படியாவது சாதியை ஒழிப்பதையும், கலாச்சாரத்தை மீட்பதையும் சுயமரியாதை இயக்கம் தனது குறிக்கோளாக ஏற்றுக் கொண்டுள்ளது. இயக்கத்தின் முதல் வேலையாக **'ஆதலினால் காதல் செய்வீர், இல்லையில்லை சாதி ஒழிய காதல் செய்வீர்'** என்ற முழக்கத்துடனும் கே.ஏ. குணசேகரனின் கலக்கலான நாட்டுப்புற இசைக் கொண்டாட்டத்துடன் காதலர் தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தனர்.




சாதியை மீறிய திருமண உறவை இந்த சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை. பெற்றோர்கள் செய்து வைக்கும் ஏற்பாட்டுத் திருமணங்களில் முதலில் பார்ப்பது சாதியைத் தான். குடும்ப அமைப்பும், மதம் சார்ந்த திருமணமும் தான் சாதியைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. இதை உடைப்பது யாரால் முடியும்? சமூகத் தலைவர்களாலும் அரசியலாலும் நிச்சயம் இதை மாற்ற முடியாது. காதலால் சாதியை ஒழிக்க முடியும் என்பதால் தான் இளைஞர்களிடம் பேச வந்துள்ளோம் என்று



படிப்பகம்

www.padippakam.com

"காதலர்கள் பெருகி ஒருவேளை மதமும் அதனால் சாதியும் அழிந்து விட்டால், எப்படி அடி மைத்தனத்தை கட்டிக் காப்பது? அடிமைகள் இல்லாத உலகில் வாழ்ந்து அவர்களுக்குப் பழக்க மில்லையே!"

விழாவிற்கான காரணத்தை விளக்கி பேரா. மார்க்ஸ் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

வழக்கம் போலவே, கே.ஏ. குணசேகரனின் இசையும் பாடலும் கூட்டம் மொத்தத்தையும் சிலிர்ப்படையச் செய்தது. ''நாட்டுப்புற இசைக்கு இருக்கும் கம்பீரம் வேறெதற்கும் வராது போங்கடா என்ற கர்வம் தெறித்தது கலைஞர்களின் கருவிகளில். கிராமிய காதல் பாடல்களும் ஆடலும் அரங்கை ஒரு குட்டி கிராமமாக்கின. தங்கள் சாதியில் காதலிப்பவர்கள் வரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டதாலோ என்னவோ அவ்வளவாக கூட்டம் இல்லை. அப்படி வந்திருந்தவர்களுக்குக் கூட காதலிகளை காணவில்லை. மேற்கத்திய இசை நிகழ்ச்சிகளில் பாருங்கள் நம்ம ஆட்கள் கூட்டம் கூட்டமாய் கட்டிப் புரண்டு கொண்டிருப்பார்கள். என்ன செய்வது? அது தான் காலத்தின் கோலம். இருந்தாலும், இது தானே தொடக்கம். சாதியை ஒழிக்க காதலர்கள் திரண்டு வருவார்கள் என்று நம்புவோம். அதற்காக களமிறங்கியிருக்கும் சுயமரியாதை இயக்கத்தை வாழ்த்துவோம்!

## சில வெங்காயங்கள்



சிவ சேனாவிற்கும், விசுவ இந்து பரிசத்திற்கும் வேறு வேலைவெட்டியே இல்லை போல. கொஞ்ச நாளாக மதக் கலவரங்கள் எதையும் காணோம், எப்படா எதுடா சிக்கும், கலகம் பண்ணலாம் என்று கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றி காத்திருந்தவர்களுக்கு கிடைத்தது காதலர் தினம். அது நம் நாட்டுக் கலாச்சாரமில்லை, அதனால் கொண்டாடக் கூடாது என்று சிறுபிள்ளைத் தனமாக - ஆயுதங்களை வைத்து சண்டை போட்டிருக்கிறார்கள். காதலர் தினத்தன்று டெல்லியில் வாழ்த்து அட்டைகளையும் பரிசுப் பொருள்களையும் விற்கும் கடைகளை அடித்து நொறுக்கியிருக்கின்றனர். பாதிக்கப்பட்ட Archives நிறுவனம் உயர்நீதிமன்றத்தில் சிவ சேனாவின் அடாவடித்தனத்தை எதிர்த்து வழக்குத் தொடர்ந்துள்ளது.

இந்த இந்து மதவாத அமைப்பினர் யாரும் அந்நியப் பொருள்கள் எதையும் தொடவே மாட்டார்களா என்ன? நாடு மொத்தத்தையும் தனியார் நிறுவனங்களுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் எழுதிக் கொடுப்பது இவர்களுக்கு உறைப்பதில்லை. தனியார் மயமாக்கல், தாராளமயமாக்கல் என்ற பெயரில் அரசுத் துறைகள் விலை பேசப்படும் போது இந்த தேச அக்கறைவாதிகள் எங்கு போவார்கள்? கடுகு போன இடம் ஆராயும் 'கலாச்சார காவலர்கள்', காணாமல் போய்க் கொண்டிருக்கும் பூசணிக்காய்களை மீட்க போராட்டம் நடத்தட்டுமே பார்க்கலாம். மாட்டார்கள். அன்னியர்களுக்கு நாட்டை விற்பதில் கிடைக்கும் பங்கு வேண்டும்; சொகுசு வாழ்க்கை வேண்டும். ஆனால் காதலர் தினம் மட்டும் வேண்டாம். ஏன்? காதலர்கள் பெருகி ஒருவேளை மதமும் அதனால் சாதியும் அழிந்துவிட்டால், எப்படி அடிமைத்தனத்தை கட்டிக் காப்பது? அடிமைகள் இல்லாத உலகில் வாழ்ந்து அவர்களுக்குப் பழக்கமில்லையே! சாதி ஒழிந்துவிட்டால் அப்படியொரு சமத்துவ உலகில் வாழ முடியாமல் இவர்களெல்லாம் தற்கொலை செய்து கொண்டாலும் வியப்படைவதற்கில்லை. கலாச்சாரம் கலாச்சாரம் என்று வாய் கிழியக் கத்துபவர்கள், நவீனம் எதையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள், கிராமங்களுக்கு ஓடிப் போங்கள். அழிந்து வரும் விவசாயத்தையும் நாட்டுப்புற கலைகளையும் காப்பாற்ற வழிபாருங்கள். அதைவிடுத்து, சும்மா கலகம் செய்து நிம்மதியைக் கெடுக்காதீர்கள்.

## சில முடிவுகள்

காதலில் சாதி பார்க்காதவர்கள் தலித் மக்கள் மட்டும்தான் என்று சிறுபிள்ளைத்தனமாக நான் நம்பியிருந்த காலங்களும் உண்டு. தலித் மக்கள் கூட 'உயர்சாதி' என்றால் தான் காதலை ஆதரிக்கின்றனர். பள்ளர்கள் அருந்ததியின மக்களையோ, வண்ணார்கள் பறையர்களையோ காதலித்துத் திருமணம் செய்து கொள்வதில்லை. அப்படி செய்ததற்காக அபராதம் கட்டி, ஊர்காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு பிரிந்தவர்களை நான் பார்த்திருக்கிறேன்.



ஆதிக்க சாதியினர் செய்யும் அதே தவறுகளையும், அநியாயங்களையும் காப்பியடிக்கும் வேலையை தலித் மக்கள் விட்டொழித்தாலே போதும். இந்து மதவாதிகளுக்கு பேரடியாக உட்சாதிப் பிரிவுகளை உடைத்து காதல் திருமணங்களை தலித் மக்கள் பெருமளவில் நடத்தி வைக்க வேண்டும். சாதியை அழிப்பதற்கு காதல் மற்றும் சாதி மறுப்புத் திருமணங்களால்தான் முடியும் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வளவு பேசினாலும் சொல்ல வந்ததெல்லாம் இந்த இரண்டு வரிகளைத் தான்:

**...காதல் சாதி பார்க்காது, அப்படிப் பார்த்தால் அது காதலே இல்லை.**

அவ்வளவுதான். •



படிப்பகம்

www.padippakam.com



# "ஆதிக்கத்தை ஜெயிக்கணும்னா அதிகாரம் நம்ம கையில இருக்கணும்"

## தோழர் காளியம்மாளுடன் ஒரு நேர்காணல்

தோழர் சுப்பு, சிவகங்கை மாவட்டப் பகுதியில், தலித் எழுச்சிப் போராட்டங்களில் செம்பதாகையின் கீழ் போராடி, 1994இல் நாடு கட்டமைப்பினால் மரண தண்டனை விதிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். நந்தன் துவங்கி சுப்புவைத் தாண்டி இன்று வரை போராடும் தலித் தலைவர்கள் வீழ்வதும் அதிலிருந்து ஆயிரமாயிரம் 'சுப்புக்கள்' எழுவதும் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால், தலித் மக்களின் அண்மைக் கால அரசியல் எழுச்சிகள் குறிப்பிடத் தகுந்தவையாகவே உள்ளன. சட்டப்பேரவை உறுப்பினர் திருமாவளவன் முதல் ஊராட்சி மன்ற உறுப்பினர் வரை பல தலித் தலைவர்கள் அரசியலில் அறுதியிட்டு நின்றிருக்க, இன்றும் நாடு கட்டமைப்பு கட்டுக் குலையாமல் உள்ளது.

சிவகங்கை மாவட்டத்தின் மாடக்கோட்டையில் ஆதிக்க சாதியைச் சேர்ந்த த.மா.கா. எம்.எல்.ஏ. ராமசாமியின் வேட்பாளரைத் தோற்கடித்து, கண்ணங்குடி ஒன்றியக் கவுன்சிலராக வெற்றி பெற்றுள்ளார் காளியம்மாள் - தோழர் சுப்புவின் மனைவி. தனது பதவியின் பொறுப்பையும், கடமையையும் உணர்ந்துள்ள அதே நேரத்தில், பதவியில் உள்ளோம் என்பதற்குரிய எவ்விதச் செருக்கும் இன்றி மிக எளிமையாக இருந்த அவரிடம் பேசியதிலிருந்து...

**(இந்நேர்காணல் மற்றும் நாடு கட்டமைப்பின் பின்னணி பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவோர் - 'தலித் முரசு' இதழில் வந்துள்ள 'நாடு கட்டமைப்பும் சாதியாதிக்கமும்' தொடரைப் பார்க்கவும்)**

■ **முதல்முறையாக ஒன்றியக் கவுன்சிலர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இதை எப்படி உணருகிறீர்கள்?**

சந்தோஷமா இருக்கு. நம்ம சாதி, சனங்களுக்கு ஏதாவது செய்யணுங்கற வெறி இருக்கு; செய்வேங்கற நம்பிக்கையும் இருக்கு.

■ **தோழர்சுப்பு மறைவுக்குப் பிறகு எதிலேயும் கலந்துக்காம ஒதுங்கியிருந்தீங்க. எப்படி ஒன்றியக் கவுன்சிலருக்கு நிக்கணும்னு தோணுச்சு?**

அவரு போனப்புறம் ஒண்ணும் புரியாம இருந்தது உண்மைதான். அவரைக் கொண்ணவங்களைப் பழிவாங்க முடியலையேங்கற எண்ணம் இருந்தது உண்மைதான். ஊருக்குள்ளாறயும், சுப்புவே இல்லை; இனிமே ராமசாமிக்கிட்டத்தான் பஞ்சாயத்துக்குப் போகணும்னு பேச ஆரம்பிச்சுட்டாங்க. ஆனா, சிம்சனும், பாண்டியனும் விடாம எங்களப் பார்க்க, பேச செய்வாங்க. ஆதிக்கத்தை ஜெயிக்கணும்னா, அதிகாரம் நம்ம கையில இருக்கணும்னு சொல்லுவாங்க. இப்பக்கூட அவங்க முயற்சியிலதான் சி.பி.அய் - எம்.எல். கட்சி சார்பில் ஒன்றியக் கவுன்சில்ல நின்னு ஜெயிச்சிருக்கேன்.



■ **தேர்தல்அனுபவங்கள்பற்றிச்சொல்லுங்களேன்?**

என்னையத் தோற்கடிக்கணுங்கறதுக்காக ராமசாமி கங்கணம் கட்டிக்கிட்டு திரிஞ்சாப்புல. கிராமம் கிராமமா போயி பிரச்சாரமும் செஞ்சாங்க. ஆனா, நானும் வீடு வீடா போயி வோட்டு கேட்டேன். நம்ம பலத்தை நிரூபிக்கணும். நாமளும் நிமிர்ந்து நிக்கணும்னா நான் ஜெயிக்கணும்னு சொன்னேன். ராமசாமி ஆளுங்க முன்னாடி பேசமுடியாத ஜனங்க வாக்குகள் மூலமா பேசிட்டாங்க. தோழர் சுப்பு மேல மக்களுக்கு இருந்த நம்பிக்கை, நாம ஏதாவது செய்வோங்கற எதிர்பார்ப்பு, எம்.எல். கட்சியோட பின்பலம் - இன்னிக்கு என்னை கவுன்சிலரா உக்கார வைச்சிருக்கு.



படிப்பகம்

www.padippakam.com

**■ அரசியல் போராட்டங்களில் எப்போதி லிருந்து இருக்கீங்க?**

சின்னவயசுல நானும் எல்லாப் பொண்ணுங்க மாதிரி சோறாக்க, கழனி வேலை செய்யத்தான் போயிட்டிருந்தேன். தோழரை திருமணம் செஞ்சப்புறம் கூட பெரிசா அரசியல் விவரங்கள் தெரியாது. அவருதான், ரவைக்கு 12 மணிக்கு வருவாங்க; காலைல 5 மணிக்கெல்லாம் போயிடுவாங்க. எப்பப் பார்த்தாலும் வெட்டணும், குத்தணும், எகிறி அடிக்கணும், திருப்பி அடிக்கணும்னு பேசிட்டு இருப்பாங்க. அதெல்லாம் எனக்குப் புரிஞ்சும் புரியாம இருந்தது.

ஆனா, அப்ப ஊர்கூடி அவர் தலைமைல போராடின கண்மாய் ஏலப் போராட்டம், ரோடு கேட்டுப் போராட்டம், சிறுவாச்சி கோவில் நுழைவுப் போராட்டம் எல்லாத்துலயும் கலந்துக்கிட்டு கைதாகியிருக்கேன். அதுக்கப்புறம், என்னோட அரசியல் நுழைவுங்கறது இப்பத்தான்.

**■ இந்த வெற்றியின் மூலம் எதை சாதிக்க முடியும்னு நினைக்கிறீங்க?**

என்ன முடியாதுன்னு நினைக்கிறீங்க?! நம்ம சனங்களுக்கு ரோடு போடறது, முள்வேலி போட்டுத் தர்றது மாதிரி என்ன சலுகை செஞ்சு தர முடியுமோ அதனை முறையா செஞ்சு தரலாம். முடியாட்டி போராடிப் பெற வேண்டியதுதான்.

**■ ஒருஒன்றியக்கவுன்சில்வெற்றிமட்டுமே உங்களுக்கான தீர்வாக இருக்க முடியுமா?**

நிச்சயமா முடியாது. பல ஒன்றியங்களில், பஞ்சாயத்துகளில் நாம ஜெயிக்கணும். அதற்கான வேலைகளை நாம செய்யணும். அதன் மூலமா சட்டமன்றத் தேர்தல்ல நின்னு ஆதிக்க சக்திகளை, குறிப்பாக ராமசாமி போன்ற ஆட்களை தோற்கடிக்கணும். நாங்களும் மனுஷங்கதான். எங்களாலையும் சாதிக்க முடியுங்கற நிலைமை வரணும்.

**■ இன்னிக்குதலித்துகள்விடுதலை பெற்றிருக்காங்கன்னு நினைக்கறீங்களா?**

முழுமையாக இல்லை. ஆனா, நான் சின்னப் பொண்ணா இருந்தபோது கொட்டாங்குச்சியில டீ குடிப்போம். பெண்கள் மாராப்பு மேல போடக்கூடாது; இடுப்பில சொருக்கிக்கணும். தேவர் வீட்டு எடுபிடி வேலைகளுக்கு நாங்க போக, பறையடிக்க, முள்ளுவெட்ட நம்ம வீட்டு ஆண்மக்கள் போவாங்க. இதெல்லாம் மாறி வந்திருக்கு. ஆனா, இன்னும் மாற வேண்டியது நிறைய இருக்கு. நாங்களும் பணம் படைச்சவங்களா மாறணும். பதவியில உக்காரணும்.

**■ ஒன்றியக்கவுன்சிலராநிச்சயமாஜெயிப்போம்னு எதிர்பார்த்தீங்களா?**

அப்படித்தான் நினைச்சேன். சிறுவாச்சி, புத்தூரிணி, தேரளப்பூர், சித்தனூர் என 4 பஞ்சாயத்தை உள்ளடக்கின ஓட்டுகளில் இரண்டு இடம் எண்ணுகிற வரைக்



**“என்னிக்கும் அடங்கியே இருக்க நாங்க பிறக்கலை; உரிமையை எடுத்துக்கவும், தட்டிக் கேட்கவும் பிறந்திருக்கோம்னு தோணுது.”**

கும் நான் பின்னாடித்தான் இருந்தேன். அப்படியே இருட்டிட்டு வந்துருச்சு. நினைச்சத சாதிக்க முடியாதோன்னு தோணுச்சு; ஆனா, நான் ஜெயிச்சுட்டதா அறிவிச்சவுடன் எல்லோரையும் கையெடுத்துக் கும்பிட்டேன். அவரோட நினைவிடத்துக்குப் போயி, நீ விட்டத நான் கைல எடுத்திட்டேய்யான்னு சொன்னேன். அதை நிச்சயமா செய்வேன்.

**■ எத்தனையோ தலித் அமைப்புகள் இருக்க சி.பி.எம்.எல். கட்சியில் இணைந்து செயல்படுவதற்கான காரணம்?**

தோழர் சுப்பு இக்கட்சியிலதான் இணைஞ்சு செயல்பட்டுட்டு இருந்தாங்க. அது மட்டுமில்லாம, இருக்கிற அமைப்புகள் பலவும் ராமசாமி கால்ல போய் விழுந்துடுறாங்க. இந்தக் கட்சி மட்டும்தான் அன்னிக்கும் சரி; இன்னிக்கும் சரி நம்ம சனங்களோட நிக்கறாங்க. நமக்காக செயல்படற ஒரு அமைப்புல செயல்படறதுல என்ன தப்பு?

**■ ஒரு பெண்ணாக, தலித்தாக, ஒன்றியக் கவுன்சிலராக எப்படி உணருகிறீர்கள்?**

பெண்கள் எல்லாக் காலத்துக்கும் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கறது தப்பு. வெளியில வரயிலதான் நாலு விஷயங்கள் தெரியுது. என்னிக்கும் அடங்கியே இருக்க நாங்க பிறக்கலை; உரிமையை எடுத்துக்கவும், தட்டிக் கேட்கவும் பிறந்திருக்கோம்னு தோணுது.

**■ கிராமசபைக் கூட்டங்களுக்குப் போயிருப்பீங்களே - அந்த அனுபவம் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

நான் மழைக்குக்கூட பள்ளிக்கூடம் போகாதவ. மருந்துக்குக்கூட படிப்புன்னா என்னன்னு தெரியாது. இருந்தாலும், இப்ப கையெழுத்து போடக் கத்துக்கிட்டேன். கூட்டத்துக்கு முத ஆளா நான்தான் போவேன். தேர்தல் முடிஞ்சு கொஞ்சநாள் தான ஆயிருக்கு. இன்னும் முழுமையா கூட்டங்கள் நடைபெறலை. நிச்சயமா, வரக்காலங்களில் நம்ம மக்களுக்கான தேவையை நிறைவேத்த முயற்சி செய்வேன். ●

**கேள்விகள் முடிந்தவுடன் நம்மைப் பார்த்து, ‘ஏங்க கஜானா காலி; அதனால் ஊராட்சிகளுக்கு காசு தரமாட்டோம்னு அரசாங்கத்துல சொல்லுறாங்களாமே அது உண்மையா?’ எனக் கேட்க, ‘ஆமாம், அதுக்கு என்ன செய்யப்போறீங்க?’ எனக் கேட்டோம். அம்மா, ஆண்டிப்பட்டிக்கு செலவு செய்ய காசு இருக்கும்; மந்திரிங்க ஹெலிகாப்டர்ல பறக்க காசு இருக்கும்; எங்களுக்கு கொடுக்க காசு இருக்காதா? இந்த அநியாயத்தை நிச்சயமா தட்டிக் கேக்கணும், உரிமை கிடைக்கும்வரை போராடணும்’ என்ற அவரின் கண்களில் உறுதி தெரிந்தது. நிச்சயமாக கண்ணங்குடி ஒன்றியத்தில் ஏதேனும் மாற்றம் நிகழும் என்ற நம்பிக்கை எம் மனதிலும் உதித்தது.**

நேர்காணல் : **விடியல்**



படிப்பகம்

www.padippakam.com

# பொதுச் சொத்துகளும் அதில் தலித்துகளின் பங்கும்

■ ப்ரதிபா ஜெயச்சந்திரன்



கோயில்கள், கிணறுகள் பள்ளிகள்... இப்படி எல்லாமே ஊருக்குப் பொது என்றாலும் - தலித் மக்கள் மட்டும் அதற்கு அப்பாற்பட்டவர்களாகவே நடத்தப்படுகின்றனர். இந்த பொதுச்சொத்துகளை தீண்டாமையின் பெயரால் அனுபவிக்க விடாமல், ஆதிக்க சாதியினர் தலித் மக்களுக்கு இழைத்த அநீதிக்குப் பின்னணியில் இருக்கும் நீண்ட வரலாற்றை ஒவ்வொரு தலித்தும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவற்றை அனுபவிக்க எல்லா இந்தியக் குடிமகனுக்கும் உள்ள உரிமை தான் தலித்துக்கும் உள்ளது. இந்த உரிமை மறுக்கப்படாதவரை, பொது என்ற சொல்லின் பொருள் சரிதான். தலித்துகளுக்கு அந்த உரிமை மறுக்கப்படும்போது அது சொத்தாக, தனி நபருக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ மட்டுமே உரிமையுள்ள சொத்தாக மாறிவிடுகிறது.

'பொது' என்று சொல் சாதியக் கட்டமைப்பின் தொடர்புடைய சொல்லாக அர்த்தப்படுத்தப்படுகிறது. தலித்துகள் பொதுக் குளத்தில் குளிக்க முடியாது; சுடுகாட்டில் தலித்துகளுக்குப் பங்கில்லை; அவர்களுக்குத் தனிச்சுடுகாடு; கிராமங்களில் தனிக் குவளை முறை - இப்படிப் பல்வேறு நிலைகளில் தனிமைப் படுத்தப்பட்டிருப்பதால், பொது விஷயங்கள் அனைத்தும் தலித் அல்லாதாருக்கு மட்டுமே சொந்தம் என்று அர்த்தமாகி விட்டது.

> "தொழில் பூங்காக்களுக்காக அரசு ஒதுக்கியுள்ள நிலம் பல ஆயிரம் ஏக்கர்கள் கொண்டதாகும். இவற்றுள் தலித்துகளுக்கான ஒரு திட்டமும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று."

இந்நாட்டின் சொத்துகளை, அசையும் சொத்து அசையாச் சொத்து என்று இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம். நிலம் - அசையாச் சொத்து. இந்த அசையாச் சொத்து, பொது மக்களுக்கு எவ்வாறு பிரித்தளிக்கப்பட்டது என்று நம் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால், நமக்கு அதிர்ச்சியளிக்கும் நிறைய தகவல்கள் உள்ளன.

ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் இந்தியா வந்த பிறகு, 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் உள்ள நிலம் யாருக்குச் சொந்தம் என்ற கேள்வியும், அது குறித்த சர்ச்சைகளும் எழுந்தன. அப்போது அரசு வரி வாங்குவதால் நிலம் அனைத்தும் அரசுக்குச் சொந்தம் என்று முடிவானது.

அதன் பிறகு, இங்கிலாந்தில் இருந்த எஸ்டேட் முறையை இந்தியாவில் புகுத்தினர். அதன் மூலம் இங்கிலாந்து அரசுக்கு மிகப்பெரிய வருமானம் கிடைத்தது. இங்கிருந்த ஆங்கிலேயே அரசுக்கு மிகவும் நெருக்கமாயிருந்த பார்ப்பனர், வேளாளர் மற்றும் ஆதிக்க சாதி இந்துக்களுக்கு நிலம் அதிக அளவில் பிரித்தளிக்கப்பட்டது. அவர்களே ஜமீன்தார்களாக, மிராசுதாரர்களாக மாறினர்.

இப்படியாக ரயத்துகளின் நிலம் மற்றவர்களுக்கு வழங்கப்பட்டதால் ரயத்துகள் குத்தகைதாரார்களாக மாறினார்கள். புறம்போக்கு நிலத்தையும் இந்தப் புதியவர்களுக்கே அரசு இலவசமாக வழங்கியது. கிராம விவசாயங்களை மிராசுதாரர்களே கவனித்துக் கொண்டனர். இவர்களே அரசுக்கு வரி செலுத்தினார்கள். தரிசு நிலத்தையும் இவர்களே விநியோகித்தனர்.

அதன் பின்னர், ரயத்வாரி முறை நடைமுறைக்கு வந்தது. தரிசு நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள அரசின் அனுமதி தேவைப்பட்டது. அப்போது மிராசுதாரருக்குச் சாதகமான சட்டம் இருந்தது. அதன்படி, ஊரில் உள்ள தரிசு நிலங்களை மிராசுதாரரைத் தவிர அரசு வேறு யாருக்கும் கொடுக்கக் கூடாது; அவர்கள் வேண்டாம் என்று சொன்னால்தான் அரசு வேறு யாருக்கும் கொடுக்கலாம்.

அது தவிர, கொஞ்சமாக நிலம் வைத்திருந்தவர்கள் பட்டாதாரர்கள்



படிப்பகம்

www.padippakam.com

என்று அழைக்கப்பட்டார்கள். இந்த இரு பிரிவினருக்குமிடையே தெளிவான வரையறை இல்லாததால் பட்டாதாரர்கள் கூட, தங்களை மிராசுதாரர்கள் என்று கூறிக்கொண்டு புறம்போக்கு நிலத்திற்கு உரிமை கொண்டாடினர்.

புறம்போக்கு நிலம் தலித்துகளுக்குப் போய்விடக் கூடாது என்பதற்காக மிராசுதாரர்கள் தங்கள் உரிமையைப் பயன்படுத்தி, புறம்போக்கு நிலத்தைப் பெற்றுஅதில் விவசாயம் செய்யாமலேயே வைத்திருக்கின்றனர். மற்ற ஆதிக்க சாதியினர் தங்களது வலிமைக்கேற்ப, அரசு நிலங்களைத் தங்களுக்குள் இலவசமாகப் பங்கிட்டுக் கொண்ட நிலையில் தலித்துகளுக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டது.

மிராசுதாரரும், பட்டாதாரரும் வேண்டாம் என்று கழித்துவிட்ட புறம்போக்கு நிலங்களில் சிறு சிறு பகுதிகள் மட்டுமே தலித்துகளுக்குக் கிடைத்தன. அவ்வாறு கிடைத்த துண்டு நிலத்தை தலித்துகள் செப்பனிட்டு முடித்து விவசாயம் செய்ய ஆரம்பிக்கும்போது, பட்டா மாற்றலில் உள்ள சிக்கலைக் காரணம் காட்டி, வலுக்கட்டாயமாக தலித்துகளிடமிருந்து அந்த நிலமும் பிடுங்கிக் கொள்ளப்பட்டது.

1892ஆம் ஆண்டு தலித் மக்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்ற சட்டம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (அரசாணை 1010 நாள்: 30.9.1892) இதன்படி, இந்தியா முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பஞ்சமி நிலம் என்ற பெயரிலும் டி.சி. நிலம் (Depressed Class Land) என்ற பெயரிலும் நிலம் வழங்கப்பட்டது. தமிழ் நாட்டில் மட்டும் 12 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலம் தலித்துகளுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டன. (வருவாய்த் துறை நிலையான ஆணை எண். 15.9 மற்றும் ஜி.ஓ.எம்.எஸ். 2217 நாள் 1.10.1941)

இவ்வாறு தலித்துகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலம், நீர்வளமற்ற மானாவாரி நிலமாக மட்டுமே இருந்தது. பஞ்சத்தின் போது தலித்துகள் தங்கள் நிலங்களை விட்டுவிட்டு பஞ்சத்திலிருந்து தப்பிக்க வேறு பகுதிகளை நாடிச் சென்றனர். சிலர் குறைந்த விலைக்கு விற்றுவிட்டுப் போய்விட்டனர்; சிலர் நிலத்தைவிட்டுத் துரத்தப்பட்டனர்; ஏமாற்றப்பட்டனர்.

அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்பின் பேரில் போலி ஆவணங்கள் தயாரித்து தலித்துகளின் நிலத்தைப் பறித்துக் கொண்ட சம்பவங்கள் நிறைய உண்டு. இன்றும் கூட இது தொடர்பான வழக்குகள், செங்கல்பட்டு மாவட்ட நகரமன்றங்களில் நிலுவையில் உள்ளன. இவ்வாறு அரசுப் பொதுச் சொத்தான நிலம் தலித்துகளுக்கு முற்றிலும் மறுக்கப்பட்டது.

**“ தாட்கோ பங்கு முதலீட்டுத் தொகையான ரூ. 1,625 லட்சத்தை நீக்கிவிட்டுப் பார்த்தால், தலித்துகளின் பொருளாதார வளர்ச்சிக்காக 5 ஆண்டுகளில் வெறும் 13.80கோடி மட்டுமே ஒதுக்கப்படுகிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பது தெரியாது. ”**

அசையும் சொத்துகள் என்று பார்க்கும் போது அரசு வேலைகள், கல்வி, தொழில் போன்ற துறைகளில் உள்ள வருவாய் ஈட்டித் தரக்கூடிய அல்லது நாணய மதிப்பீட்டளவிலான (Monetary) பயன் தரக்கூடிய விஷயங்களைச் சொல்லலாம். இவற்றிலும் கூட தலித்துகளுக்கு முறையான பகிர்ந்தளிக்கப்படுதல் இல்லாமல் இருந்திருக்கிறது என்பதை வலுவான ஆதாரங்கள், ஆவணங்கள் மூலம் சுட்டிக்காட்ட முடியும்.



ஆங்கிலேய ஆட்சியின் போது, இந்திய ஆட்சியாளர்களாக அரசு வம்சத்தினர் இருந்தவரை, இந்துக்கள் அரசர்களின் படையிலேயே சேர்ந்திருந்தனர். அரசர்களின் படை வலுவிழந்த பிறகு, இந்துக்கள் ஆங்கிலேயரின் ராணுவத்தில் சேர முற்பட்டபோது அங்கே ஏற்கனவே தலித்துகள் நிறையபேர் பணிபுரிந்தபடியால், தீண்டாமைக் கொடுமை எழுந்தது. ராணுவத்தில் புதிதாகச் சேர்ந்த இந்துக்களின் எதிர்ப்பு கிளம்பிய காரணத்தால், மேற்கொண்டு தலித்துகள் ராணுவத்திற்கு எடுப்பது நிறுத்தப்பட்டது. 1868ஆம் ஆண்டில் ராணுவத்தில் 1.24 சதவிகிதம், 1920இல் 0.89 சதவிகிதம் மட்டுமே தலித்துகள் இடம் பெற்றிருந்தனர். 1905இல் உருவாக்கப்பட்ட 'மெட்ராஸ் போலிஸ் சர்வீஸ்' (MPS) மூலம் உருவான பதவிகளில் 1943வரை தலித்துகள் இடம்பெறவில்லை.

இதேபோல், கல்வியும் தலித்துகளுக்கு மறுக்கப்பட்டு வந்தது. ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன் கோவையில் உள்ள கல்லூரிகளில் படித்த மொத்த மாணவர்கள் 400 பேரில் 40 பேர் தவிர மற்ற அனைவரும் பார்ப்பனர்கள். அந்த 40 பேரிலும் ஒருதலித் மாணவர்கூட இடம் பெற்றிருக்கவில்லை என்பது நமக்குக் கிடைக்கும் வரலாற்றுச் செய்தி. கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு வடிகட்டல் முறை (Filtration Method) பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. எண்ணிக்கையில் மிக அதிகமாக பார்ப்பனர்களும் அதற்குக் குறைந்த எண்ணிக்கையில் பிற சாதி இந்துக்களும், அதற்கும் குறைவான எண்ணிக்கையில் பிற்படுத்தப்பட்ட சாதியினரும் இடம் பெற்றனர்.

ராஜாராம் மோகன்ராய் போன்ற சாதி இந்து தலைவர்களும் அரசாங்கத்தில் கொள்கைகளை முடிவெடுப்பவர்களும் ஆதிக்க சாதியினருக்கு மட்டுமே கல்வி என்பதில் தெளிவாக இருந்தார்கள். கீழே செல்லச் செல்ல கல்வியை வடிகட்டிவிட வேண்டும் என்றே அவர்கள் கருதினர்.

ஓய்வுநேரமும், வசதியுமுள்ள ஆதிக்க சாதியினருக்கு மட்டுமே கல்வி கற்றுத் தர வேண்டும். பின் இந்த ஆதிக்க சாதியினர் தங்களுக்குக் கீழுள்ள மக்களுக்கு தங்கள் பொறுப்பில் கல்வி கற்றுத் தரு



படிப்பகம்

வார்கள் என்ற கருத்து, அக்காலத்தில் சாதி இந்துக்களிடையே வலுவாக நிலவி வந்தது. இதைத்தான் கல்வியில் வடிகட்டும் கொள்கை என அழைத்து வந்தார்கள். கல்வியில் இந்தியா தலித்துகளுக்கு தன் துரோக முகத்தையே காட்டி வந்துள்ளது. பூனா கல்லூரியில் அனைத்து இந்துக்களும் சேர்க்கப்பட்ட போதிலும், உதவித் தொகை பார்ப்பன மாணவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது ('பாம்பே கார்டியன்' - 8 அக்டோபர் 1852).

மன்னர்கள் ஆட்சியில், மராட்டியத்தை ஆண்ட பேஷ்வாக்களிடம் ஆண்டுதோறும் அளவற்ற பணத்தையும், பொருளையும் பார்ப்பனர்கள் இலவசமாகப் பெற்று வந்திருக்கின்றனர் என்று வரலாற்று ஆவணங்கள் நமக்குச் சொல்கின்றன. தமிழகத்திலிருந்து வடகும்பகோணம் பார்ப்பனர்கள் அங்கே சென்று முறையாக தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு, பல ஆண்டுகள் அளவற்ற பணத்தை ஆண்டுதோறும் மானியமாகப் பெற்று வந்தனர் என்பதற்கான சான்றுகளும் உண்டு.

இவ்வாறு 'பொது' என்னும் அர்த்தத் தளத்தில், தலித்துகள் தனியே நிறுத்தி வைக்கப்பட்டே வந்துள்ளனர். 'பொது' வானவற்றின் மேல் உரிமை கொண்டாடவரும் தலித்துகளுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டு வருவது, நாம் நாள்தோறும் படிக்கும் செய்திகளில் ஒன்றாக இன்றைக்கும் இருந்து வருகிறது.

இப்போதும் அரசு வேலைகளுக்கான இட ஒதுக்கீட்டில், 22.5 சதவிகிதம் தலித்துகளுக்கு முறையாக ஒதுக்கப்பட்டிருந்தால், 195 லட்சம் உள்ள மத்திய, மாநில அரசுப் பணிகளில் 44 லட்சம் பணியிடங்கள் தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், உண்மையில் 15 சதவிகிதம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்படி பணியிடங்களை ஒதுக்காமல் தலித்துகள் வஞ்சிக்கப்படுகின்றனர்.

தற்போது முடியப் போகும் (1997-2002) ஒன்பதாவது அய்ந்தாண்டுத் திட்டத்தில், தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 612 கோடி மட்டும்தான். அதாவது, ஆண்டொன்றுக்கு சுமார் 120 கோடி. இதில் தலித்துகளின் பொருளாதார மேம்பாட்டுக்கென அய்ந்தாண்டுகளுக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 29.55கோடி மட்டுமே. இந்தத் தொகையும் கீழ்க்கண்டபடி பிரித்தளிக்கப்படுகிறது.

● விவசாயக் கடனுக்கான மானியமாக 5000 பேருக்கு ரூ. 250 லட்சம். ● பால் சொசைட்டிகள் மூலம் ரூ.5,000/- வீதம் 10,000 பேருக்கு ரூ.500 லட்சம். ● தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்றோருக்கு



ஆர்.ஆர். சீனிவாசன்

உதவித் தொகையாக தலா ரூ. 3,000/- வீதம் 16 ஆயிரம் பேருக்கு ரூ. 480 லட்சம் ● சிறு வியாபாரக் கடனுக்கான மானியமாக தலா ரூ. 5,000/- வீதம் 2,000 பேருக்கு ரூ. 100 லட்சம் ● தாட்கோ நிறுவனத்தில் பங்கு முதலீடு ரூ. 1,625 லட்சம்.

இதில் தாட்கோ பங்கு முதலீட்டுத் தொகையான ரூ. 1,625 லட்சத்தை நீக்கிவிட்டுப் பார்த்தால், தலித்துகளின் பொருளாதார வளர்ச்சிக்காக 5 ஆண்டுகளில் வெறும் 13.80கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பது தெரியாது.

பெருந்தொழில் திட்டங்களில், எண்ணெய் சுத்திகரிப்பாலைத் திட்டம் (3,500 கோடி) நாப்தா கிராக்கர், துணைப் பாலிமர்கள் / பெட்ரோலிய ரசாயன வளாகம் (70 கோடி) 100 சதவிகிதம் ஏற்றுமதிக்கான கோழி இறைச்சி பதப்படுத்தும் திட்டம் (15 கோடி) 100 சதவிகிதம் ஏற்றுமதிக்கான உறைநிலை ப்ரெஞ்ச் வருவல் திட்டம் (33 கோடி), நர்மதா டெக்ஸ்டைல் திட்டம் (76.87 கோடி), ஒருங்கிணைந்த உருக்காலைத் திட்டம் (839 கோடி), பெட்ரோலிய ரசாயனப் பூங்கா (600 கோடி), மலர்ச்செடி வகை பூங்கா (24.85 கோடி), ரப்பர் தொழில் பூங்கா (220 கோடி) உயர் தொழில் நுட்பத் தொழில் பூங்கா (700 கோடி) என்று தலித் அல்லாத தொழில் முனைவோருக்கான திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது, தமிழ் நாட்டில் மட்டும் செய்யப்பட்ட செலவுகள். மேமேலே சொல்லப்பட்ட தொழில் பூங்காக்களுக்காக அரசு ஒதுக்கியுள்ள நிலம் பல ஆயிரம் ஏக்கர்கள் கொண்டதாகும். இவற்றுள் தலித்துகளுக்கான ஒரு திட்டமும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

பொது மக்களும், அதிகாரத்தில் இருப்பவர்களும், தலித்துகளுக்கு அளிக்கப்பட்டு வரும் ஒதுக்கீடுகளும், மானியங்களும், சலுகைகளும் மிகவும் அதிகம் என்று எண்ணும் மனப் போக்கில் இருப்பதை அவதானிக்க முடியும்.

ஆனால், சலுகைகளும், மானியங்களும் அரசு உதவிகளும் பிற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கு அளிக்கப்படுவதோடு ஒப்பிடுகையில் - தலித்துகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் குறைவு தான். பெரும் தொழில்களுக்காக வழங்கப்படும் மானியம், அரசு மற்றும் அரசு வங்கிகளின் Equity Participation, National Equity Fund மூலம் தரப்படும் வட்டியில்லாக் கடன் (Soft Loan) அதற்கான மானியங்கள், வரிச்சலுகைகள், மேற்படி பெருந் தொழில்களுக்காக ஒதுக்கப்படும் நிலங்கள், அவற்றுக்கான அடிப்படை கட்டமைப்புக்காக செலவு செய்யப்படும் தொகைகள் என்று நாம் கணக்கிட்டுப் பார்த்தால், தலித்துகளுக்காக ஒதுக்கப்படும் தொகையும், சலுகைகளும் மிகவும் சொற்பம் என்பது சமூக அக்கறை உள்ளவர்களுக்குப் புரியும். ●

www.padippakam.com



# அம்பேத்கரின் பொருளாதார தொலைநோக்கு

■ சங்கமித்திரை

டாக்டர் அம்பேத்கர் தமிழ் நூல் தொகுதி 11, ஆங்கில நூல் தொகுதி ஆறின் முதல் தமிழாக்கம் ஆகும். இந்தத் தொகுதியில், கட்டமைப்பு மற்றும் பொருளாதார அமைப்புகளையும் அவ்வமைப்புகளை கிழக்கிந்திய கம்பெனி எவ்வாறு தங்களுக்குச் சாதகமாக - இந்திய டொமினியனில் நிறுவியிருந்தன என்பதையும் அம்பேத்கர் அலசுகிறார். இந்நூல் தொகுதிக்காகத் தான் அம்பேத்கருக்கு டாக்டர் பட்டத்தை, அமெரிக்க கொலம்பியா பல்கலைக்கழகம் வழங்கியது.

**பிரிட்டிஷ் அரசு, அரசுக்கென நிரந்தரமாக நிலம், நிலம் சார் வளங்களை விரிவு படுத்துவதில் பெருமளவு கவனம் செலுத்தியது. இந்நடவடிக்கைகள் மூலம் அரசுக்கு அதி களவு சொத்து குவிக்கப் படுவதோடு மட்டு மின்றி, தனி நபர் சொத்து சேர்த்தல், பெருமுதலாளிகள் தோன்றி தொழிலாளர் களைச் சுரண்டுதல் பெருமளவில் தடுக்கப்பட்டன.**

இந்நூல் தொகுப்பைப் பற்றி மக்கள் பரவலாகப் பேசியிருந்தாலும் இந்தத் தொகுதியில் அண்ணலின் கருத்துகள், மக்களைச் சென்றடைந்தது 1979ஆம் ஆண்டுதான். அம்பேத்கரின் ஆங்கில நூல் தொகுப்புகள் வெளிவர முதன்மைக் காரணமாக விளங்கும் அதன் தொகுப்பாசிரியர் வசந்த் மூன் அவர்கள், தன்னுடைய பெரும் முயற்சியால் இந்தத் தொகுதியை மக்களிடம் கொண்டு செல்ல அரும்பாடு பட்டார். பொருளாதாரத்தை மய்யமாகக் கொண்ட ஒரு நூல், எப்படி பாமர மக்களின் சராசரி வாசிப்பிற்கு உகந்ததாக இருக்கும் என்ற இயல்பான அய்யத்தினால், இந்த நூல் தமிழில் மொழியாக்கம் செய்யப்படாமல் போய்விடுமோ என்ற அச்சம் அம்பேத்கர் ஆர்வலர்களிடையே இருந்தது.

இந்த அச்சத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் மிகத் திறமையாகச் செயல்பட்டு, நமது போற்றுதலுக்குரிய வசந்த் மூன், ஆங்கிலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மய்யக் கருத்துகள் சிதைவடையாமல், இந்தியில் மொழி பெயர்த்துள்ளார். ஆனால், தமிழில் மொழி பெயர்க்கும் போது அத்தகைய கவனத்தை நமது மொழி பெயர்ப்பாளர்கள் மேற்கொள்ளவில்லையே என்ற அச்சம் மேலிடும் வகையில், சில இடங்களில் கருத்துப் பிழைகள் விரவிக் காணப்படுகின்றன.

**ஸ்டாம்ப் விற்பனை மூலம் பொருளீட்டி, அப்பொருளை மக்களுக்கான அமைப்புகளை நிறுவுவதற்குப் பயன்படுத்துவது, பிரிட்டிஷ் காலத்தில் தான் அறிமுகப்படுத்தப் பட்டது. 1808இல் தான் மெட்ராசில் முத்திரைத்தாள் அறிமுகப் படுத்தப்பட்டது. இதன் மூலம் ஓராண்டில் கிடைத்த வருவாயில் சென்னை - வேலூர் மார்க்கத்திற்கு 81மைல் தூரம் ரயில் விடப்பட்டது.**




கிழக்கிந்திய கம்பெனியார், தங்களது பகுதியில் நீதி என்ற பெயரில் சட்டம் ஒழுங்கை நிர்வாகம் செய்யும் எந்திரத்தையும், பொருளாதாரம் என்ற பெயரில் டாலர்களைக் குவித்து வைத்து ஆட்சி நடத்தும் வகையும் விவரிக்கப்படுகிறது. நீதி மன்றங்களில் நீதியை வழங்கும் பொறுப்பில் பிரிட்டனைச் சேர்ந்த செல்வந்தர்கள் நியமிக்கப்பட்டனர். • இவர்கள் சொந்தமாக எந்த ஒரு தொழிலையும் தங்களுக்கென வைத்துக் கொள்ளக் கூடாது • வேறெந்த நிறுவனங்களில் முதலீடு அல்லது பொருளாதாரப் பங்கீடுகள் வைத்திருக்கக் கூடாது •அரசவையில் எவ்விதப் பொறுப்புகளையும் வகிக்கக் கூடாது என்ற நிர்பந்தம் விதிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் வழங்கப்படும் நீதி என்பது பல நேரங்களில் சரியானதாகவும் வெகு சில நேரங்களில் மட்டும் ஆட்சி செய்பவர்களின் தேவையான நீதியாகவும் இருந்தது.

அண்ணல் அம்பேத்கரின் பொருளாதார தொலைநோக்குத் திட்டங்களைப் புரிந்து கொள்ள விரும்புவோர், அவசியம் படிக்க வேண்டிய நூல் தொகுப்பு இது. •



படிப்பகம்

www.padippakam.com



அவமானச் சின்னம்

சதாசிவம் கமிஷன் விசாரணை

# கொடிய துயரங்களின் வெளிப்பாடு

■ கோ. சுகுமாரன்

வீரப்பனைப் பிடிப்பதற்காக தமிழக, கர்நாடக அரசுகள் கூட்டு அதிரடிப்படை ஒன்றை அமைத்தன. வீரப்பனைப் பிடிக்கிறோம் என்ற பெயரில் மிகப் பெரிய அத்துமீறலில் ஈடுபட்டது அதிரடிப்படை போலிஸ். வீரப்பன் பதுங்கியிருக்கும் காட்டுப் பகுதி கிராமங்களில் கொடிய அடக்குமுறை நடந்தன.

மனித உரிமை அமைப்புகள் மேற்கொண்ட கள ஆய்வின் படி, வீரப்பன் கூட்டாளிகள் என அதிரடிப்படையில் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் 90 பேர்; பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்கள் 60 பேர்; சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்கள் 300-க்கும் மேல். பல குடும்பங்கள் சிதைந்து போயின.

மனித உரிமை அமைப்புகளும், முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் போன்றவர்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு குரல் கொடுத்ததன் விளைவாக, கடந்த 98 ஆம் ஆண்டு தேசிய மனித உரிமைகள் ஆணையம் விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு அமைக்கப்பட்ட இக்கமிஷனின் விசாரணை அதிகாரிகளாக கர்நாடக உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சதாசிவம், சி.பி.அய். முன்னாள் இயக்குநர் நரசிம்மன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இக் கமிஷன் அமைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து கோபிசெட்டிப் பாளையத்தில் 83 பேரிடமும், தொளத்தூரில் 49 பேரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையின் பயனாக, அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்கள் வெளி உலகிற்குத் தெரிய வந்தன. இதனால், கர்நாடக அதிரடிப்படையில் இருந்த அதிகாரிகளான முத்தாய்யா, பாவா ஆகியோர் கர்நாடக உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து கமிஷன் செயல்படத் தடை வாங்கினர்.

கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட போது, வீரப்பன் வைத்த கோரிக்கைகளில் சதாசிவம் கமிஷன் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதும் ஒன்று. மேலும், சதாசிவம் கமிஷன் மீதான தடையை நீக்க மனித உரிமை அமைப்புகளும் முயற்சி செய்தன. இதன் விளைவாக, கடந்த 30.11.2001 அன்று சதாசிவம் கமிஷனுக்குத் தடையை நீக்கி உத்தரவிட்டது கர்நாடக உயர்நீதிமன்றம்.

இதனைத் தொடர்ந்து பிப்ரவரி 6,7,8 ஆகிய தேதிகளில் கர்நாடக மாநிலம் மாதேஸ்வரன் மலையில் சதாசிவம் கமிஷன் விசாரணை நடைபெற்றது. விசாரணைக்கு வருபவர்களை அச்சுறுத்தும் வகையில் மாதேஸ்வரன் மலைப் பகுதியில் வீரப்பன் பதுங்கி இருப்பதாகக் கூறி அதிரடிப்படையினர் ஏராளமானவர்கள் குவிக்கப்பட்டிருந்தனர். விசாரணை நடைபெறுவதை பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியும், துண்டறிக்கை அச்சிட்டு விநியோகித்தும், தண்டோரா போட்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென கமிஷன் உத்தரவிட்டிருந்தது. ஆனால், கர்நாடக அரசு இதை எதுவுமே செய்யவில்லை.

மனித உரிமை அமைப்புகள் சார்பில் துண்டறிக்கை அச்சிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. முதல் நாளன்று இவை அனைத்தும் விசாரணை கமிஷன் முன் தெரிவிக்கப்பட்டது. சாட்சியம் அளிக்க 200-க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் திரண்டிருந்தனர். கர்நாடக அதிரடிப்படை சார்பில் விசாரணையை ஒத்தி வைக்க வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டது. மேலும், தமிழக அதிரடிப்படை அதிகாரிகள் வாக்குமூலம் அளிப்பவர்களிடம் குறுக்கு விசாரணை மேற்கொள்ள வழக்கறிஞர்





படிப்பகம்

www.padippakam.com

அமர்த்திக் கொள்ள அனுமதி கோரி மனு தாக்கல் செய்தனர். இவற்றை நீதிபதி சதாசிவம் நிராகரித்ததோடு விசாரணையை மேற்கொண்டார்.

பாதிக்கப்பட்டவர்களில் 13 பெண்கள் உட்பட 14 பேர் வாக்குமூலம் அளித்தனர். 92-93 ஆம் ஆண்டுகளில் நடந்த கொடிய துயரங்களின் வெளிப்பாடாக அமைந்தன - பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்கள். கர்நாடக மாநிலம் நல்லூர் என்ற ஊரை தீ வைத்துக் கொளுத்தியதோடு ஏராளமானவர்களைக் கைது செய்து மாதேஸ்வரன் மலையிலுள்ள 'ஓர்க்ஷாப்' என்ற கட்டிடத்தில் வைத்து சித்திரவதை செய்துள்ளனர் அதிரடிப்படையினர்.

> **"கர்நாடக மாநிலத்திலுள்ள நல்லூர் என்ற ஊரை தீ வைத்துக் கொளுத்தியதோடு, ஏராளமானவர்களைக் கைது செய்து மாதேஸ்வரன் மலையிலுள்ள 'ஓர்க்ஷாப்' என்ற கட்டிடத்தில் வைத்து சித்திரவதை செய்துள்ளனர் அதிரடிப் படையினர்."**

வீரப்பன் கூட்டாளி எனக் கூறி நல்லூரைச் சேர்ந்த குழந்தை, வெங்கடாசலம், தங்கவேலு, சண்முகம் ஆகியோரை பிடித்துச் சென்று காட்டுப் பகுதியில் சுட்டுக் கொன்றுவிட்டு ஊருக்குள் பிணத்தை வீசிவிட்டுச் சென்றுள்ளனர் அதிரடிப்படையினர். மேலும், கர்நாடகப் பகுதியில் வாழும் தமிழர்களை தமிழ்நாட்டிற்குச் சென்றுவிடும்படி அச்சுறுத்தியுள்ளனர். இதனால், பலர் தமிழ் நாட்டிற்கு குடிபெயர்ந்துள்ளனர். இங்கும் தமிழக அதிரடிப்படையினரால் துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

விசாரணையின் போது வாக்குமூலம் அளித்த பலரும் 'ஓர்க்ஷாப்பில்' அடைத்து துன்புறுத்தப்பட்டதாக புகார் கூறினர். பாதிக்கப்பட்டவர்களிடம் நீதிபதி சதாசிவம் 'ஓர்க்ஷாப்' என்றால் 'மெக்கானிக் ஒர்க்ஷாப்பா' என்று கேட்டார். அதிரடிப்படையினர் 'ஓர்க்ஷாப்' என்று அழைக்கப்படும் இடம் மாதேஸ்வரன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்கும் பழைய கட்டிடம் என்றும், பாதிக்கப்பட்டவர்கள் இது ஒரு கொலைக் கூடம் என்றும் தெரிவித்தனர்.

விசாரணைக்காக அழைத்துவரப்படுபவர்கள் அனைவரையும் மொத்தமாக இந்தக் கட்டிடத்தில் அடைத்து நிர்வாணப்படுத்தி 'எலக்ட்ரிக் ஷாக்' கொடுத்து விசாரிக்கப்படுவர். பல பெண்கள் பாலியல் கொடுமைக்கு ஆளானதும், பலர் சுட்டுக் கொல்லப்பட்டதும் இந்தக் கட்டிடத்தில்தான். ஆண்டுக்கணக்கில் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் அடைத்து கொடுமைப்படுத்தப்பட்ட இந்தக் கட்டிடத்தை 'அவமானச் சின்னமாக' அறிவிக்க வேண்டுமென மனித உரிமை அமைப்புகளால் கோரிக்கை எழுப்பப்பட்டது. தற்போது இந்தக் கட்டிடத்தின் உள்ளே யானையின் தலை மற்றும் எலும்புகள் சிதறிக் கிடக்க துர்நாற்றம் வீசிய நிலையில் காணப்படுகிறது.

விசாரணையின் கடைசி நாளன்று கொளத்தூர் அருகேயுள்ள மேட்டுப்பாளையூர் கிராமத்தைச் சேர்ந்த அறுபது வயது மூதாட்டி செல்லப்பிள்ளை வாக்குமூலம் அளித்தார். அப்போது அவரது வலது கை ஊனமுற்று செயலற்ற நிலையில் இருந்ததைப் பார்த்த

# அதிர்ச்சியூட்டும் வாக்குமூலங்கள்



**ஈஸ்வரி (28),** நல்லூர் : என் கணவர் துரைசாமி. நான் தலித் வகுப்பைச் சேர்ந்தவர். பத்து வருடங்களுக்கு முன் கர்நாடக அதிரடிப்படையினர் எங்கள் ஊரில் முகாமிட்டிருந்தனர். ஊரிலுள்ள ஆண்கள் அனைவரையும் முகாமிற்கு அழைத்துச் சென்று அங்கிருந்த கழிவுகளை சுத்தம் செய்ய சொன்னார்கள். பின்னர், அனைவரையும் 20 பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து வீரப்பனைப் பிடிக்க காட்டுக்குள் அனுப்பி வைத்தனர். ஒவ்வொருவர் கையிலும் கோடாரி, மலையேறும் கொக்கிகள், கயிறு கொடுத்து அனுப்பினர். வீரப்பன் நம்மளைப் பார்த்தால் அவர்கள் மீது மிளகாய்ப் பொடி வீசி பிடித்துவர உத்தரவிட்டனர். இதனால், ஊரில் ஆண்கள் யாரும் வேலைக்குப் போக முடியவில்லை.

நான் அப்போது கர்ப்பமாக இருந்தேன். இதனால், என் வீட்டுக்காரரை இனிமேல் காட்டுக்குப் போக வேண்டாம் என்று கூறி வீட்டிலேயே இருக்கச் சொன்னேன். அவரும் வீட்டிலேயே தங்கிவிட்டார். இதையறிந்த அதிரடிப்படை போலிஸ், என் வீட்டுக்காரரை முகாமிற்கு அழைத்துச் சென்று கடுமையாக சித்திரவதை செய்தனர். என்னையும் அடித்து சித்திரவதை செய்தனர். பிறகு, என் வீட்டுக்காரரை அனுப்பி விட்டனர். அவர் உடல் நிலை மிகவும் மோசமடைந்தது. என்னுடைய நகை, தாலியை விற்று பத்தாயிரம் ரூபாய் செலவு செய்து அவருக்கு வைத்தியம் பார்த்தேன். கடுமையாக அடிவாங்கியதால் என் குழந்தை பிறந்ததும் செத்து விட்டது. பத்து வருடங்கள் ஆன பின்னாலும் என் கணவரால் நிமிர்ந்துகூட நிற்க முடியவில்லை.

**வள்ளி (28),** மேட்டுப்பாளையூர் : என் கணவர் சம்பு. மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தோம். 93 ஆம் வருடம் வீரப்பனுக்கு உதவியதாக கூறி அதிரடிப்படையினர் கைது செய்தனர். பண்ணாரி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு வீரப்பன் இருக்கும் இடத்தைக் காட்டும்படி கூறி துன்புறுத்தினர். அங்கிருந்து மாதேஸ்வரன் மலை 'ஓர்க்ஷாப்'பிற்கு அழைத்துச் சென்றனர். எங்களை நிர்வாணப்படுத்தி மின்சார ஷாக் கொடுத்தனர். பத்து நாட்கள் இப்படி சித்தரவதை செய்தனர்.



பிறகு, என்னையும் என் வீட்டுக்காரரையும் காட்டுப் பகுதிக்கு கூட்டிச் சென்றனர். என் கணவருக்கு வீரப்பன் கும்பல் அணியும் பச்சைநிற சீருடை அணிவித்து அவரை ஓடச் சொன்னார்கள். அவர் ஓட மறுக்கவே துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். என் கண்முன்னே இது நடந்தது. பின்னர் அவர் உடலைப் புகைப்படம் எடுத்தனர். வீரப்பன் குழுவிற்கும் போலிசுக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இறந்ததாக பத்திரிகையில் செய்தி வெளியிட்டனர்.

பிறகு என்னை 'ஓர்க்ஷாப்'பிற்கு கொண்டு வந்து



படிப்பகம்

www.padippakam.com

நீதிபதி சதாசிவம், அவரை மருத்துவப் பரிசோதனை செய்ய உத்தரவிட்டார். அதிரடிப்படையினர் லத்தியால் தாக்கியதால் ஏற்பட்ட இந்த ஊனம் எப்படி ஏற்பட்டது என்றும், எவ்வளவு காலத்திற்கு முன் ஏற்பட்டது என்றும் பரிசோதித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை வெளிப்படுத்தக்கூட தெரியாத நிலையில் இருந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களிடம் குறுக்கு விசாரணை மேற்கொண்டனர் அதிரடிப்படை அதிகாரிகள். நிவாரணம் கிடைக்கும் என்பதற்காக பொய்யாக வாக்குமூலம் அளிப்பதாகக் கேள்வி கேட்ட அதிரடிப்படை அதிகாரிகளின் முகத்தில் உமிழ்வதைப் போல பதிலளித்தனர் பாதிக்கப்பட்ட மக்கள்.

நல்லூரைச் சேர்ந்த 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட போது அய்ந்தாவது நபராக சுட்டுக் கொல்லப்பட இருந்த முனுசாமி, அதிரடிப்படையில் தனக்கு வேண்டியவர் ஒருவர் இருந்ததால் உயிர் தப்பியவர். அவர் கமிஷன் முன் வாக்குமூலம் அளித்து விட்டு மனித உரிமை அமைப்பினரிடம் தான் சித்திரவதை செய்யப்பட்ட இடங்கள், சம்பவங்கள் அனைத்தையும் நினைவு படுத்திக் கூறியது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது.

மக்கள் உரிமைக் கூட்டமைப்பு, தமிழ் நாடு பழங்குடி மக்கள் சங்கம், மக்கள் கண்காணிப்பகம், சோகோ அறக்கட்டளை, மக்கள் சிவில் உரிமைக் கழகம், சிகரம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக செயல்பட்டு உண்மை வெளிவர பாடுபட்டனர். சதாசிவம் கமிஷன் விசாரணை, கடந்த நூற்றாண்டில் நடந்த மிகக் கொடிய துயரங்களின் வெளிப்பாடாக அமைந்தது.

பாதிக்கப்பட்ட மக்களின் 170 பேர் பட்டியல், சதாசிவம் கமிஷன் முன்பு சமர்ப்பிக்கப்பட்டது. இதனை பரிசீலித்த நீதிபதி, மார்ச் மாதம் 19 முதல் 23 தேதி வரை மீண்டும் விசாரணை நடக்கும் என அறிவித்தார்.

மனிதத் தன்மைக்கு எதிரான இதுபோன்றதொரு கொடிய பாதிப்பு வேறெங்காவது நடந்திருந்தால், மிகப் பெரிய சமூகக் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும் என பலரும் கூறியது இன்றும் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது. •

---

நிர்வாணப்படுத்தி கைகளில் விலங்குமாட்டி கெடுத்தனர். அங்கிருந்த உயர் போலிஸ் அதிகாரியான மூடலய்யா என்னை கெடுக்குமாறு போலிசாருக்கு உத்தரவிட்டார். அப்போது பல ஆண்கள், பெண்கள் பிடித்து வந்து அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரையும் சுவர் பக்கம் திரும்பி உட்கார வைத்துவிட்டு என்னைக் கெடுத்தனர். பத்து மாதங்கள், ஒரு நாள் விட்டு ஒரு நாள் இந்த சித்திரவதை நடந்தது.

பிறகு, தடா வழக்கில் மைசூர் சிறையில் இருந்தேன். அய்ந்து மாதங்களுக்கு முன் விடுதலையாகி வீட்டுக்குப் போன போது, 'போலிசாரிடம் கெட்டுப்போன உன்னை வீட்டில் சேர்க்க மாட்டோம்' என என் அம்மா கூறிவிட்டார். மீன்பிடி தொழிலும் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

லட்சுமி (37), ஊஞ்சக்கரை : என் கணவர் அய்யன்துரை. என்னையும், என் கணவரையும் விசாரணைக்காக மாதேஸ்வரன் மலை 'ஒர்க்ஷாப்'பிற்கு அழைத்துச் சென்றனர். ஒன்றரை ஆண்டு காலம் துன்புறுத்தினர். நிர்வாணப்படுத்தி 'எலக்ட்ரிக் ஷாக்' கொடுத்தனர். என் கணவர் மீது வழக்குப் போட்டு கோவை சிறையில் அடைத்தனர். பிறகு விசாரணைக்காக மைசூர் சிறைக்கு அழைத்துச் சென்ற கர்நாடக அதிரடிப் படையினர் அடித்துக்கொன்று விட்டனர். என்னுடைய 2 குழந்தைகளுக்கும் 'எலக்ட்ரிக் ஷாக்' கொடுத்து துன்புறுத்தினார்கள். பிறகு என்னை தடாவில் மைசூர் சிறையில் அடைத்தனர். அய்ந்து மாதத்திற்கு முன் விடுதலையானேன்.



(வீரப்பன் தம்பி அர்ச்சுனனுடன் அய்யன்துரை கர்நாடக அதிரடிப்படையால் 'சயனைடு கொடுத்து' கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது)

பெருமா (50), நல்லூர் : என் கணவர் மேல்வீட்டு மாதையன். ஒன்பது வருடத்திற்கு முன் ஒரு நாள் என் மகன் தங்கவேலுவை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர் கர்நாடக போலிசார். அவனை ராமாபுரம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறினர். அவனை விசாரித்துவிட்டு அனுப்பி விடுவதாகக் கூறினர். 3 மாதத்திற்குப் பிறகு அவனை காட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினர். அவனை விசாரித்து விட்டு அனுப்பி விடுவதாக கூறினர். 3 மாதத்திற்குப் பிறகு அவனை காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று வீரப்பன் கூட்டாளி என சுட்டுக் கொன்று விட்டனர். திடீரென ஒரு நாள் மதியம் 3 மணியளவில் எங்கள் ஊருக்கு வந்த அதிரடிப்படை போலிஸ் 4 சடலங்களை ரோட்டில் வீசியெறிந்தது. அதில் என் மகன் உடலும் ஒன்று. மேலும், குழந்தை, வெங்கடாசலம், சண்முகம் ஆகிய எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களையும் சுட்டுக் கொன்று அவர்களுடைய சடலத்தையும் வீசியெறிந்தனர்.



(27.6.92இல் கர்நாடக நாம்தள்ளி காட்டில் வீரப்பன் கும்பலுக்கும் அதிரடிப் படை போலிசுக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 4 பேரும் இறந்ததாக வழக்கு பதியப்பட்டுள்ளது.)



அம்மாசி (60), நல்லூர் : என் கணவர் அய்யம் பெருமாள். ஒன்பது வருடத்திற்கு முன்பு என் மகன் குழந்தையை அதிரடிப் படை போலிஸ் விசாரணைக்காக அழைத்துச் சென்றது. மேலும், எங்கள் ஊரைச் சேர்ந்த பலரையும் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். நான்கு அல்லது அய்ந்து நாட்களுக்குப் பிறகு என் மகன் மாதேஸ்வரன் மலையிலுள்ள 'ஒர்க்ஷாப்'பில் வைத்திருப்பது தெரிந்தது.

மூன்று மாதத்திற்குப் பிறகு என் மகனுடைய சடலத்தை ஊருக்குள் கொண்டு வந்து போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். என் மகன் மாதேஸ்வரன் மலையிலுள்ள 'ஒர்க்ஷாப்பில்' வைத்திருப்பது தெரிந்தது. இறந்தது எப்படி என்று கூட கேட்க முடியாதபடி பயத்தில் இருந்தோம். என் மகன் இறந்து 6 மாதம் கழித்து என் மூத்த மகன் அய்யன்துரை அதிரடிப்படை போலிசால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டான். விசாரித்துவிட்டு அனுப்பி விடுவதாகக் கூறினார்கள் ஆனால், இதுவரைக்கும் என்ன ஆனான் என்று தெரியவில்லை. எங்கிருக்கிறான் என்றும் தெரியவில்லை. ▪



படிப்பகம்




# தேவை ஒரு செயல்

- நூல் : ஆட்சியில் இந்துத்துவம்
- ஆசிரியர் : அ. மார்க்ஸ்
- வெளியீடு : அடையாளம், எச்.15/193, 2ஆவது மாடி, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் - 621 310
- விலை : ரூ.70 ■ பக்கங்கள் : 160

நீண்ட காலமாக இந்துத்துவ - பார்ப்பன பயங்கரவாதிகள் குறித்த அச்சம் நிலவி வருகிறது. ஆனால், அந்த அச்சமானது, எதிர்வினையாற்றாமல் அதனுடன் சமரசமாகிப் போகத்தான் துணிகிறது. இது, இந்துத்துவத்தை விட பயங்கரமானது.

ஒட்டுமொத்த இந்திய சமூகங்களை ஒரு நச்சு சூழலுக்குள் கொண்டு வருவதற்கு, இந்து பயங்கரவாதிகள் செயல்பட்டு வருவதும், அதன் ஆபத்து நம் வீட்டு அலமாரிகளிலேயே இருப்பதும், எத்தனை கொடியது! மக்களை ராணுவ மயமாக்குவதற்கும், தேசிய உணர்வு என்ற பெயரில் இந்துமயமாக்குவதற்கும் பெரிய வேறுபாடு இல்லை. ஆனால், எந்த விதமான நெறியுமின்றி, மக்களை திசைதிருப்பி காரியம் சாதித்துக் கொள்ளும் இந்து பயங்கரவாதிகளின் வழிமுறைகளை, செயல்களை விரிவாக ஆராயவேண்டிய அவசியம் இன்றைக்கும் இருந்து வருகிறது. தற்போது அதற்கு உடனடி தேவை எழுந்துள்ளது.

அந்த வகையில், அ. மார்க்சின் இந்நூல், ஒரு வரலாற்றுத் தேவையை ஒட்டியே வந்துள்ளது. ஆனால், இந்த ஒரு நூல் மட்டுமே இதை சாதித்து விட முடியாது. கூட்டு முயற்சிகளும், கறாரான, தொலைநோக்கான திட்டங்களும் மிக மிக அவசியம். இதுதான் நம்மிடையே இல்லை. இந்த அவலம் குறித்து எந்த அமைப்புதான் உள்ளார்ந்த ஈடுபாட்டோடு கவலைப்படுகிறது?

இந்த நூல், தீர்வுகளைக் குறித்துப் பேசவில்லை; அதைப் பேசக்கூடிய சூழலும் இதுவல்ல. ஆனால், மக்களுக்கும், நமக்கும் கேள்விகள் அவசியமாக இருக்கிறது. அதை எப்படி கற்றுக் கொள்வது என்பதையும், எப்படி கேள்வி கேட்பது என்பதையும் இப்போது இயக்கங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இந்து பயங்கரவாதிகளை நோக்கி மக்களின் கேள்விகள் எழுப்பப்படுவதற்கு, இது போன்ற நூல்கள் நிறைய தேவை. இந்நூல், இந்து பயங்கரவாதிகளின் சதிச் செயல்களைத் தொகுப்பதுடன், ராமன், கிருஷ்ணன் மோசடிகளை வேகமாக வெளிக்கொண்டு வந்துள்ளது.

அ. மார்க்சின் பழைய மொழி நடையிலிருந்து வேறுபட்டு எளிமையான நடையில் அமைந்துள்ள இந்நூல், சில குறைபாடுகளைக் கொண்டிருக்கிறது. அது, எழுத்தின் வேகத்தில் ஏற்பட்ட குறையாக இருக்கலாம். "இந்துத்துவ சக்திகள் எந்தத் திட்டமும் இல்லாமல் பணிகளை காவிமயப் படுத்துகின்றன." - என்பன போன்ற வரிகள்.

மாக்கியவல்லியின் புகழ் பெற்ற வார்த்தையான 'இலக்குதான் முக்கியம் வழிமுறைகள் அல்ல' என்பது இந்து பயங்கரவாதிகளின் கொள்கைகளில் ஒன்று. அனைத்தும் பாசிச மயமாவது அவர்கள் இலக்கு. நெறிசார்ந்த திட்டங்களைப் பற்றி அவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும். அதனால் தான் அவை அம்பலப்பட்டுப் போனாலும், வெட்கமின்றி அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குப் போய்விடுகின்றார்கள்.

இந்த நெறி சார்ந்த செயல்களில் நம்பிக்கை கொண்ட முற்போக்காளர்கள், இதை ஏற்பதில்லை. அதனால்தான் இந்து பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை முறியடிக்கத் திராணி இல்லாமல் போகிறது. அப்படியானால், முற்போக்காளர்கள் தங்களது போராட்ட வடிவங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆசிரியர் இது போன்ற கவனக்குறைவான வார்த்தைகளை கையாள்வதைத் தவிர்த்திருக்கலாம்.

இந்து பயங்கரவாதிகள் அரசைக் கைப்பற்றி, மக்களுக்கு விரோதமாகக் கட்டவிழ்த்து விடும் பொய் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தும் இந்நூல், அனைவரின் புத்திக்கு மட்டுமல்ல - இனி தேவையான ஒரு செயலையாவது செய்ய ஏற்றது. •

**- சன்னா**

**நூலிலிருந்து...**

*"பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது அதனை முன்னின்று நிகழ்த்தியவர்களாகிய அத்வானி, ஜோஷி, உமா பாரதி முதலான 49 பேர்கள் மீது போடப்பட்டுள்ள சதி வழக்கு முடக்கப்பட்டதிலும் இந்துத்துவ அரசின் பங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வழக்கைப் 'பொய் வழக்கு' என்று கூறிய அருண் ஜெய்ட்லி, இன்று மத்திய அரசின் சட்ட அமைச்சர். இந்த நாற்பத்தொன்பது பேர்களில் ஒருவரின் மகளான வசுந்த ராஜே சிந்தியாதான் இன்று இவ்வழக்கை நடத்துகிற சி.பி. அய்.க்குப் பொறுப்பான அமைச்சர். அப்புறம் பிரதான குற்றவாளிகளில் முதன்மையானவரான அத்வானி உள்துறை அமைச்சர்."*

www.padippakam.com



# “மானக்கேட்டைக் கண்டு சீற்றம் வரவேண்டும்”

வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, இந்திய ஆட்சிப் பணியாளராக அதிகாரப் பீடங்களில் ஏறி அமர்ந்தவர் **கிருத்துதாசு காந்தி**. அதிகாரத்தின் வீச்சை - சுழற்சியை - நுட்பத்தை துல்லியமாகப் புரிந்து கொண்டவர். பெரும் சர்ச்சையைக் கிளப்பிய ‘சமத்துவபுரங்க’ளுக்கு அடித்தளமிட்ட இவர், தலித்துகளின் நலன்களுக்காக நிறுவப்பட்டுள்ள அறங்களை - அதன் வடிவங்களை, அமைப்புகளை - அதன் செயல்திட்டங்களை தனது அழுத்தமான கேள்விகளால் சல்லடையாக்குகிறார். இவர் தனது அனுபவங்களினால் அடைகாத்து வைத்திருக்கும் மாறுபட்ட பாதையை தலித்துகளுக்கு அடையாளம் காட்டுகிறார்.

தற்பொழுது, ‘தமிழ் நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்க’த்தின் திட்ட இயக்குனராகப் பணிபுரியும் இவர், ‘தலித் முரசு’க்காக அளித்த பேட்டியிலிருந்து....

நேர்காணல் : **புனிதன், யாக்கன்**

◇ **தங்களின் இளமைக் காலம் பற்றி...**

நான் தலித் என்ற உணர்வின்றி வளர்ந்ததால், தலித் உரிமைகளைப் பற்றி அறிவுத்தடை, உணர்வுத் தடையின்றி சிந்திக்க முடிகிறது. இன்னொருவரிடம், தலித் அல்லாதவரிடம், குறிப்பாக தலித் மீது ஆதிக்கம் செலுத்துவோரிடம், தலித் தேவை / உரிமை பற்றித் தெம்புடன் பேச முடிகிறது.

தலித் உணர்வின்றி வளர்க்கப்பட்டேன் என்பது மட்டும் இன்றைய என் பக்குவத்திற்கு உரம் தந்திருக்காது. மனிதனை மனிதன் வேறுபடுத்திப் பார்க்காமல் எப்படிப் பழகுவது என்பதை எனது தந்தை திரு. ராமதாசு எனக்குச் சொல்லிக் கொடுத்தார். ‘திருக்குறள்’ மற்றும் ‘அருட்பாவை’ வைத்து இதுபோன்ற கருத்துகளை என் தந்தை எங்களுக்கு ஊட்டினார். அன்புடனும் அருளுடனும் எப்படி இருப்பது என்றும் தன்னாட்சியையும் எங்களுக்குக் கற்பித்தார். ‘ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை’யை எங்களது உணர்வோடு ஊட்டினார். எனது தாயும் அப்படியே. சமூக உணர்வும் என்னுள் இயல்பாக வந்தது.

கல்வியில் நான் சிறந்து விளங்கினேன். நான் எஸ்.எஸ்.எல்.சி. இல் மாவட்டத்தின் முதல் மாணவனாக வெற்றி பெற்றேன். மாநில அளவில் 20 ஆவதாக வந்தேன். தீண்டாமை அனுபவங்களை நான் நேரடியாகச் சந்திக்காவிட்டாலும், நேரடியாக உணர்ந்திருக்காவிட்டாலும் - பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்கு நான் வளர்ந்த சுதந்திரமான சூழல்தான் காரணம். நான் கல்லூரிக்கு வந்த பின்னர்தான் நான் யார், எந்த சாதி என்பதையே மேலோட்டமாக அறிந்து கொண்டேன்; எந்த ஒரு மனத்தளர்வும் எய்தாமல்.

◇ **நீங்கள் நாத்திகராக - பகுத்தறிவாளராக இருந்ததால்தான் இந்தளவுக்கு சுயமாக சிந்தித்து உயர்நிலையைப் பிடிக்க முடிந்தது அல்லவா?**

சடங்கு மயமான கடவுள் உணர்வு எனக்கு எப்போதும் இருந்ததில்லை. உயிர்களை ஒன்றாக மதிப்பது எனும் சீவகாருண்யமே ஆன்மீகத்தில் வளர்ந்ததால், மனித நேயத்துடன் சிந்திக்க முடிந்தது; எந்தச் சூழ்நிலையிலும் தங்கு தடையின்றி செயல்பட முடிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

...வியில் முதல் மதிப்பெண்களைப் பெற ...டிந்தது.

**◇ 'தலித் பார்வை' உங்களுக்கு ...ப்படி, எப்போது வந்தது? தலித் பார்வை ...ந்தபோது எப்படி உணர்ந்தீர்கள்?**

எனது அய்.ஏ.எஸ். பயிற்சிக் காலத்...ல் தருமபுரியில் பாரூர் கிராமம் பற்றிய ...மூகப் பொருளாதார ஆய்வறிக்கை தர ...வண்டியிருந்தது. முதன் முறையாக அவ் ...ரில் பட்டியலின மக்களின் நிலைமை ...ற்றி ஒரு அதிகாரம் படைத்தேன். பின்னர் ...சூரில் துணை ஆட்சியாளராக 1977இல் ...தவி ஏற்றபோது, தலித்துகளுக்கான நிலப் ...ரச்சினை என்பது என்ன? எப்படி நிலத்...தைப் பிரித்துக் கொடுப்பது என்பது போன்ற ...செய்திகளை அறிய நேர்ந்தபோது, சில ...உண்மைகள் எனக்குப் புலப்பட்டன. 'டி.சி. ...ரிஜிஸ்டர்' என்று ஒன்று இருக்கும். கிராமங்...களுக்குச் செல்லும் போதெல்லாம் இந்த ...ஆவணம் குறித்து கவனம் செலுத்த ஆரம்...பித்தேன்.

அதன் பிறகு நிர்வாகத்தில் எப்படியெல்லாம் பட்டியல் இனத்தவர் மீது வேறுபாடு காட்டப்படுகின்றது; இட ஒதுக்கீடு எந்தளவுக்குக் கடைப்பிடிக்கப்படுகிறது; எந்தெந்த சூழலில் இம்மக்கள் புறந்தள்ளப்படுகின்றார்கள் என்ற உண்மைகள் எல்லாம் பிடிபட்டன.

தலைமைச் செயலகத்திற்கு வந்த பிறகு, அரசுப் பணியாளர் நியமனங்களில் எந்த மாதிரியெல்லாம் இந்த மக்கள் மீது வேறுபாடுகள் காட்டப்படுகின்றன; பணியாளர் பதிவேட்டில் (Service Register) எந்த மாதிரியான குறிப்புகள் எழுதப்படுகின்றன என்ற விவரங்கள் எல்லாம் தெரிந்தது. அரசுப் பணிக்கு வந்த பிறகு, பட்டியல் இனப் பணியாளர்களின் மத்தியில் மட்டும் சேர்ந்து பழகுவது என்றில்லாமல், எல்லோரிடமும் இயல்பாகவும் சமமாகவும் - எந்தத் தடையும் தாழ்வு உணர்வுமின்றி நான் பழகியதுதான் எனக்கு மிகவும் நல்ல வாய்ப்பாக அமைந்து விட்டது. எனவே, கருத்துகளைச் செவி மடுக்கிறார்கள். என்னிடம் எந்த வேறுபாடுகளையும் யாரும் காட்டுவதில்லை.

**◇ நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, தலித் பிரச்சினையை எப்படி அணுகினீர்கள்?**

ஒரு நிர்வாகி என்ற அளவில் ஒரு பட்டியலினத்தைச் சேர்ந்தவருக்குப் பாதுகாப்பு அளிப்பது எப்படி, அவர்களுக்கு மன உரம் தருவதெப்படி, அவர்களுக்குத் தேவையானதைச் செய்வது எப்படி, பிறரோடுகூட அவர்களைச் சேர்த்து வளர்த்தெடுப்பது எப்படி, பிறரைவிட இவர்களை முன்னிறுத்துவது எப்படி என்பதை நான் ஈரோட்டில் மாவட்ட ஆட்சியராகப் பொறுப்பேற்ற தருணத்தில் கற்றுக் கொண்டேன்.

**◇ ஒரு எடுத்துக்காட்டைச் சொல்லுங்கள்.**

சட்ட ஒழுங்கு கூட்டத்தில் எஸ்.பி., டி.எஸ்.பி., ஆர்.டி.ஓ. அனைவரும் இருப்பார்கள். நான் ஈரோடு ஆட்சியாளராகப் பொறுப்பேற்ற முதல் நாளே சொன்னேன்: ''ஒரு பட்டியல் இனத்தைச் சார்ந்தவரை தேவையின்றி கைது செய்தீர்கள் என்ற தகவல் எனக்கு வந்தால், நான் இதைப் பொறுத்துக் கொள்ள மாட்டேன்.''



ஒரு ஆட்சியாளரிடமிருந்து இப்படி ஒரு கட்டளை, எச்சரிக்கை வந்து விட்டது என்றால், பிறகு இதுபோன்ற விஷயங்கள் அங்கு நடக்காது. நான் இருந்த வரை இது போன்ற தேவையற்ற கைதுகள் நடைபெறவில்லை. நான் அங்கு பொறுப்பில் இருந்த இரண்டரை ஆண்டுகளும் பட்டியல் இன மக்கள் மீது எந்தவித வன்கொடுமைகளும் நடந்ததாக அங்குப் பதிவு இல்லை.

அதே போல், நெடுஞ்சாலையில் உள்ள சட்டப் புறம்பான ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் நான் கடுமையாக இருப்பேன். அது எந்தமாதிரி ஆக்கிரமிப்பாக இருந்தாலும் சரி, அப்புறப்படுத்தி விடுவேன். அங்கு எஸ்.சி.க்கள் இருந்த போதும் நான் இந்த விஷயத்தில் கடுமையாக நடந்து கொண்டேன். ஆனால், அவர்களுக்கு வேறு இடம் ஒதுக்கிக் கொடுக்கவும் நான் தவறியதில்லை. குடிசைகளை அப்புறப்படுத்தும் போது, அதில் ஒரு எஸ்.சி. குடிசை இருக்கிறது; அவர் பாதிக்கப்படுகிறார் எனில், எனக்கு உடனடியாக தகவல் தெரிவித்துவிட்டுத்தான் அதை அப்புறப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளிடம் கட்டளையிட்டிருந்தேன்.

'இதுபோன்ற விஷயங்களை எல்லாம் வெளிப்படையாக செய்யக்கூடாது; ரகசியமாகத்தான் செய்ய வேண்டும்' என்று சிலர் சொல்வார்கள். ஆனால், இதில் என்ன ரகசியம் இருக்கிறது; இதை நான் ஏன் ரகசியமாக செய்ய வேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை. இதையெல்லாம் வெளிப்படையாகவே செய்தாக வேண்டும். அப்போதுதான் பட்டியல் இனத்தவர்க்கு தமது உரிமையைத் தாமே நிலை நாட்டிக் கொள்வதற்குத் தெம்பு பிறக்கும்.

அதே போல, அங்கு வீரன் என்றொரு அருந்ததியர் செருப்புக் கடை வைத்திருந்தார். அவர் அங்கு கடை வைக்கக்கூடாது என்று ஊரார் பலமுறை அவர் மீது வன்முறை இழைத்தனர். 'வீரன் செருப்புக் கடை வைத்திருக்கும் அதே இடத்தில் தான் கடை இருக்க வேண்டும்; யாரும் அகற்றக் கூடாது' என்று தெளிவாகவும் கண்டிப்பாகவும் என்னிடமிருந்து தெளிவான எச்சரிக்கை வெளிப்படையாகப் போனதால் தான் அவருடைய உரிமை அங்கு பாதுகாக்கப்பட்டது. அவர் ஒரே ஆள்தான் அவருக்கு வேறெந்த ஆதரவும் இல்லை. ஆனால், என்னுடைய எச்சரிக்கைக்குப் பிறகு யாரும் அவரைத் தொட முடியவில்லை.

**“ நூறு பட்டா சேர்ந்து ஒரு ஊர் என்று கணக்குப் போட்டால், இரண்டு லட்சத்திற்கு ஏறக்குறைய இரண்டாயிரம் சேரிகளை உருவாக்குகிறோம் என்றுதானே அர்த்தம். இதை நாம் எப்படி அனுமதிப்பது? ”**



படிப்பகம்

www.padippakam.com

இது போல் எண்ணற்ற எடுத்துக் காட்டு களைக் கூற முடியும்.

இன்னொரு எடுத்துக்காட்டு : சென்னி மலை அருகில் தொகுப்பு வீடு கட்டினார் கள். பள்ளமாகவும் மேடாகவும் இருந்த இடத்தில் மேட்டுப் பகுதியை மயானத் திற்கு ஒதுக்கி பள்ளத்தில்தான் வீடு கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். 'செத்துப் போனவனை மேட்டில் புதைத்துவிட்டு வாழப் போகிறவனை எப்படி பள்ளத்தில் வீடு கட்டச் சொல்கிறாய்' என்று நான் இதில் தலையிட்டு, மேட்டுப் பகுதியில் தான் வீடு கட்டியாக வேண்டும் என்று தெளிவாகச் சொன்னேன். வந்த எதிர்ப்பு களெல்லாம் அடங்கிப் போயின.

இது போன்ற தருணங்களில் ஆட்சிய ரிடமிருந்து வெளிப்படையான நிலைப் பாடும், செயல்பாடும் இல்லாத போதுதான் இவர்கள் மீது வன்முறைகள் ஏவப்படும். சமூகப் புறக்கணிப்பு, வன்கொடுமை என்று நீளும், இதைத் தடுத்தாக வேண்டும்.

அரசு விழாக்களில் எல்லாம் அந்தந்த ஊர்ப் பெரியவர்கள்தான் முன்னணியில் இருப்பார்கள். அரசுத் திட்டங்களில் பயன டைந்த பயனாளிகள் ஒரு மூலையில் நின்று கொண்டிருப்பார்கள். நான் ஆட்சியராக இருந்தவரை, பயனாளிகளைத்தான் சிறப்பு அழைப்பாளராக ஊரில் பெரியவர்களு டன் முதல் வரிசையில் அமர ஏற்பாடு செய் தேன். அவர்தான் இத்திட்டத்தின் திறப்



**"கண்டதேவியில் நான் ஆட்சியாளராக இருந்திருந்தால், கண்டிப் பாக கண்டதேவியில் தேர் ஓடியிருக்கும். அது மட்டு மல்ல, அந்தத் தேர் மேலேயே ஒரு தலித்தை அமர வைத்துத் தேரை ஓட்டியிருப்பேன்."**

பாளராக இருப்பார். மேடையில் அவர்கள் அந்தக் கூட்டங்களில் பேசவும் ஏற்பாடு செய்தேன். எந்த வி.அய்.பி. யாக இருந்தா லும் சரி, இந்தப் பயனாளிகள் அவருடன் ஒரே மேடையில் அமர வேண்டும் என ஏற்பாடு செய்தேன். இதையெல்லாம் வெளிப்படையாகச் செய்தாக வேண்டும்.

**இந்த மாதிரி துணிவுடன் சில விஷயங் களைச் செய்யும் போது, மேலிடத்திலிருந்து எதிர்ப்பு வராதா?**

நாம் இதில் தவறாக எதுவும் செய்ய வில்லையே. நியாயமானவற்றை முறையாக எடுத்துச் செய்தால் எந்தப் பிரச்சினையும் அழுத்தமும் வராது. இந்தப் பிரச்சினையில் மட்டுமல்லாது, பிற பொதுப் பிரச்சி னைகளிலும் ஈடுபாடு கொண்டு நேர்மை யாகச் செயலாற்றினால், யாரும் குற்றம் காண முடியாது.

**அதே போல் நீங்கள் அங்கு இருந்தபோது கோயில் நுழைவுக்கு தலித்துகளை அழைத்துச் சென்று கர்ப்பகிரகம் வரை சென்றதாகக் கேள்விப் பட்டோம். அதைப் பற்றி...?**

நசியனூர் - ஈரோட்டுக்கு அரு கில் உள்ள ஊர். இங்கு பெரிய கோயில் உள்ளது. இதில் பட்டியல் இனத்தவர் நுழைய அனுமதி இல்லை என்று அறிய வந்தேன். ஆனால், அங்குதான் சமபந்தி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று உறுதியாகச் சொல்லி விட்டேன். கோயில் கர்ப் பகிரகத்துக்குள் ஆதிதிராவிடர் நலப்பள்ளி மாணவிகள் பாட வேண்டும் என்றேன். அதேபோல் நடந்தது (1987 - 88) கண்டதேவி யில் நான் ஆட்சியாளராக இருந்தி ருந்தால், கண்டிப்பாக கண்டதேவி யில் தேர் ஓடியிருக்கும். அது மட்டு மல்ல, அந்தத் தேர் மேலேயே ஒரு தலித்தை அமரவைத்துத் தேரை ஓடி யிருப்பேன்.

**◇ ஆதிதிராவிடர் நலத்துறைய் நீங்கள் செயலாற்றிய போது செய்த க னைகளில் குறிப்பாக சிலவற்றைச் செல் லுங்கள்...**

ஏதோ ஒரு ஒப்புக்கு என்று நினைக்ப் பட்ட துறை - பிற துறைகள் சொல்வதை கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய துறை என்றிருந்த நிலையை மாற்றி ஆதி திரா விடர் நலத் துறையிடம் வந்து பிற எல்லா துறைகளும் தமது விளக்கத்தை அளிக் வேண்டிய ஒரு மதிப்புறு துறையாக இத் றையை எனது காலத்தில் மாற்ற முடிந்தது

ஒதுக்கீடு பற்றிய கொள்கைகளை அதுகாறும் பணியாளர் நிர்வாகச் சீர்திரு தத் துறை அல்லது பிற்படுத்தப்பட்டோ நலத்துறையினரே எடுத்து வந்த நிலை மாற்றி, ஒதுக்கீடு விதிக்கு ஆதி திராவிட நலத் துறையே கொள்கை வகுக்கும் என உறுதியோடு வாதாடி வென்றிருக்கிறேன் எனக்குப் பிறகு இந்த அதிகாரம் மீண்டு ஆதி திராவிடர் நலத் துறையைவிட்டுக் கை நழுவிப் போயிற்று.

பட்டியல் இனத்தவர் மீதான தாக் குதல், வன்கொடுமை பற்றி அரசுக்கு உள் துறை மட்டுமே எடுத்துச் சொல்லி வந்த நிலையை மாற்றி, முதல் முறையாகத் தலைமைச் செயலர் நடத்தும் சட்ட ஒழுங் குக் கூட்டத்தில் ஆதி திராவிடர் நலத் துறை செயலரும் பங்கேற்கும் நடைமுறை அக்கா லத்தில் உருவானது. தென் மாவட்டக் கல வரங்கள், குண்டுப்பட்டி வன்கொடுமை ஆகிய நிகழ்வுகளில் உள்துறைச் செயல ரும், காவல் உயர் அதிகாரிகளும் மாற்றுக் கருத்துகளை அரசுக்கு வைத்திருந்தாலும், ஆதி திராவிடர் நலத் துறையின் கருத்தே இறுதியில் அரசால் வைக்கப்பட்டது.

குண்டுப்பட்டிக்குச் சென்ற செயலர்கள் குழு, குண்டுப்பட்டி மக்களே தங்களின் உடைமைகளை உடைத்து நாசமாக்கிக் கொண்டது போன்ற ஒரு கருத்தை உருவாக்க முனைந்தது. இதை நான் கண்கூடாகப் பார்த்தேன். இந்தக் கள ஆய்வுக்குப் பிறகு இக்குழுவில் உள்ள பிற செயலாளர்கள் ஒரு கருத்தை முன்வைத்தனர். இங்கு நடந்த அத்துமீறல்களை இந்த மக்களே செய்து கொண்டார்கள் என்று வரக்கூடாது என்று நான் கண்டிப்புடன் கூறினேன். இத் தகைய ஒரு அநியாயத்திற்கு நான் ஒரு போதும் துணை போக மாட்டேன் என் றேன். அதற்குப் பிறகுதான் அரசு இழப்பீடு தர முன்வந்தது. எனவே, இதுபோன்ற தரு ணங்களில் நாம் உறுதியாக சொல்லக்கூடிய



படிப்பகம்

www.padippakam.com

கருத்துகளை சொல்லாமல் இருக்கக் கூடாது. சொல்லியே தீர வேண்டும்.

ஒதுக்கீடு பற்றிய அரசாணை 44 வெளியிட்டது எனது பணிக்காலத்தின் ஒரு பெரிய வெற்றி எனச் சொல்லுவேன். 109 துறைத் தலைவர்களுடனும், 30 செயலர்களுடனும் பலவாறாக வாதாடி இவ்வரசாணைக்கு வழிவகுக்க வேண்டியிருந்தது. அமைச்சரவையில் என்னைத் தவிர பிற யாவரும் (அமைச்சர்களும், அதிகாரிகளும்) மாற்றுக் கருத்துக் கொண்டிருந்த அல்லது ஒப்புக் கருத்தை எடுத்துச் சொல்ல



வாயில்லாமலிருந்த சூழ்நிலையில் தனியொருவனாக வல்லமையோடு பேசி அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற வேண்டியிருந்தது.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை மக்களிடையே எடுத்துச் செல்வதில் பெரும்பங்காற்றியிருக்கிறேன் என்ற நிறைவு எனக்குண்டு. நான் ஆதி திராவிடர் நலத்துறைச் செயலராக இருந்தவரை, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அதிகம் உணரப்பட்ட துறையும் பேசப்பட்ட துறையுமாக ஆதிதிராவிடர் நலத்துறை விளங்கியது.

இந்தப் பணியில் நான் கற்ற பாடம் : ஆதி திராவிடர் நலத்துறைச் செயலராக இருப்பவர் அறுதியிட்டு முனைந்தால் (Assertive Action) வெற்றி பெறுவது உறுதி.

**◇ சமத்துவபுரத் திட்டம் பற்றி சொல்லுங்கள். அதன் நோக்கம் நிறைவேறியதா?**

நான் ஆதி திராவிடர் நலத்துறைச் செயலராக இருந்து வடித்துத் தந்த இந்தத் திட்டம், யாரெவரது மறுப்போ, எதிர்ப்போ இல்லாமல் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசின் தலைமையில் ஒரு திட்டமாக உருமாறியது. ஆதிதிராவிடரையும் பிறரையும் இணைக்கும் திட்டம் எதுவும் வகுக்க முடியாது என்று எல்லோரும் இத்தகைய முனைப்பை நினைக்கவும் தயங்கிய காலத்தில், தடுமாற்றமின்றி வைக்கப்பட்டது சமத்துவபுரத் திட்டம்.

அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டு பல்வேறு கோணங்களில் படம்பிடிக்கப்பட்ட இத்திட்டத்தில், ஆதி மக்களுக்குச் சாதகமான இரு கூறுகள் உண்டு.

ஒன்று, பொதுச் சமுதாயத்துடன் ஒன்று கலத்தல். எதிர் காலத்தில் இன்னும் வலுவாக உருவாக இந்தச் சூழல் வழிவகுக்கும். இரண்டு, 40 சதவிகிதம் பட்டியல் இனத்தவர் உள்ள இந்த ஊர்த் தொகுப்பில் (எனது திட்ட வடிவில் இது 55 சதவிகிதம் ஆகப் பரிந்துரைக்கப்பட்டது) பட்டியல் இனத்தவர் பெரும்பான்மை அணியாக உருவாகும் வாய்ப்பு அடங்கியுள்ளது. 60 சதவிகிதம் பிறர் எனினும் அவர்கள் வெவ்வேறு வகையினராக அமைவதால், ஒரே வகையினரான ஆதிதிராவிடரே பெரும்பான்மை அணியாக இருக்க முடியும். எதிர் காலத்தில் ஒவ்வொரு சமத்துவபுரமும் ஒரு உள்ளாட்சித் தொகுதியாக (வார்டு) வரும் வேளை, பொதுத் தொகுதியில் ஒரு தலித் வெற்றி பெற முடியும்; அதிகாரம் இவர்கள் கைவரும்.

> **“ ஒரு பட்டியல் இனத்தைச் சார்ந்த வரை தேவையின்றி கைது செய்தீர்கள் என்ற தகவல் எனக்கு வந்தால், நான் இதைப் பொறுத்துக் கொள்ள மாட்டேன். ”**

**◇ ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளைக் கலைத்துவிட்டு பொதுப்பள்ளிகளுடன் இணைக்கின்ற முயற்சிகளையும் சரி என்கிறீர்களா?**

ஆமாம். தனிமைப் படுத்துவதுதான் தீண்டாமை என்றால், மீண்டும் நான் தனியாகத்தான் இருப்பேன் என்றால் விடுதலை ஏது? தனிப்பட்டா கொடுத்து கொடுத்து அரசாலேயே எத்தனை தனிச் சேரிகள் உருவாக்கப்பட்டுள்ளன?

சமுதாயத்தை மீண்டும் மீண்டும் எப்படிப் பிரிக்கிறோம் என்பதைப் பற்றி ஒரு கணக்கு சொல்ல வேண்டும் என்றால், ஓர் ஆண்டில் இரண்டு லட்சம் குடும்பங்களைப் பிரிக்கிறோம். எஸ்.சி.க்கு என்று ஒரு லட்சம் பட்டா கொடுக்கிறார்கள், பி.சி.க்கு ஒரு லட்சம் பட்டா கொடுக்கிறார்கள், பட்டா என்பது ஒரு ஆளுக்கு கொடுப்பதல்ல; ஒரு குடும்பத்துக்கு கொடுப்பது. அதாவது ஒரு ஆண்டில் இரண்டு லட்சம் குடும்பங்களைப் பிரிக்கிறோம்.

நூறு பட்டா சேர்ந்து ஒரு ஊர் என்று கணக்குப் போட்டால், இரண்டு லட்சத்திற்கு ஏறக்குறைய இரண்டாயிரம் சேரிகளை உருவாக்குகிறோம் என்றுதானே அர்த்தம். இதை நாம் எப்படி அனுமதிப்பது?

இந்த இரண்டு லட்சம் பட்டாக்களையும் சமத்துவபுர தத்துவப்படி இணைத்துக் கொடுக்கலாம். இதற்கென முன்னோட்டமாகக் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் சமத்துவபுரத் திட்டம்.

சுதந்திரத்திற்குப் பிறகு அய்ம்பது ஆண்டுகளாக என்ன செய்திருக்கிறோம் என்றால், இரண்டாயிரம் ஆண்டுகளாக உருவானதற்குப் பலமடங்கு சேரிகளை உருவாக்கியிருப்பதுதான். இதை நாமாகவே கேட்டு வாங்கியிருக்கிறோம் என்பது தான் வேதனையானது. இது போன்ற திட்டங்களை நாம் இனிமேல் ஒருக்காலும் கோரலாகாது.

விடுதிகளில் இரு தரப்பு மாணவர்களும் ஒருங்கே சங்கமிக்கும்போது, ஒரே அறையில் தங்குவது, படிப்பது, விளையாடுவது எனும்போதுதான் வேறுபாடுகள் குறையும். ஆதிதிராவிடர் நல விடுதிகளில் இருக்கும் உட்பிரிவு வேறுபாடுகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தனிப் பள்ளிகளை மாற்றுவது குறித்த பொது விவாதம் மிகத் தேவையானது.

---

*ஆதிதிராவிடர் நலத்துறைக்குப் பெயர் மாற்றலாமா, உட்சாதிப் பிரிவுகளை இணைப்பது எப்படி, தலித் அமைப்புகளுக்கான செயல் திட்டங்கள் என்ன ஆகிய கேள்விகளுக்கான பதில்கள் அடுத்த இதழில்...*



படிப்பகம்

www.padippakam.com





# அமெரிக்கா வெறுக்கப்படுவது ஏன்?

■ ரவிக்குமார்

வெள்ளையர்கள் உங்களை வெறுப்பதற்கான உண்மையான காரணம் என்ன தெரியுமா? உங்கள் முகத்தைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் அவர்கள் தங்களது குற்றத்தின் பிம்பத்தை அதில் பார்க்கிறார்கள். அவர்களது குற்ற உணர்வு அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.''

''அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு வெள்ளையனும் கறுப்பினத்தவனின் கண்களை நேருக்கு நேர் பார்க்கும்போது மண்டியிட்டுக் கெஞ்ச வேண்டும். நாங்கள் உங்களுக்கு வரலாற்றில் பெரும் கொடுமைகளை இழைத்து விட்டோம்; நான் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு தரக்கூடாதா என அந்த வெள்ளையன் கேட்க வேண்டும். ஆனால், ஏதாவது ஒரு வெள்ளையன் அப்படிச் செய்தான் என நீங்கள் நினைக்கிறீர்களா? அவன் அப்படிச் செய்யமாட்டான் என்பதற்கான காரணம் உங்களுக்குத் தெரியும். ஏனெனில், வெள்ளையர்கள் ஒரு பிசாசை உருவாக்கியுள்ளனர். இந்த உலகுக்கு பெரும் அழிவை கொண்டு வரும் பிசாசு.''

பேசப் பேச மால்கமின் குரலில் தெளிவு கூடிக் கொண்டே போகும். இரு பக்கமும் கூர் தீட்டப்பட்ட கத்தி போன்றது எலிஜா முகமதுவின் போதனை. அது வெள்ளையர்களிடமிருந்து கறுப்பர்களை விடுவிக்க, அனைத்து திசைகளிலும் பாய்ந்து கொண்டேயிருந்தது. அதன் வீச்சில் மால்கமின் மனம் செதுக்கப்பட்டு அதுவும் அது போலவே வாளாக மாறியது.

''சகோதரர்களே, சகோதரிகளே, அந்த வெள்ளைக் கிறித்தவர்கள் செய்த கொடுமையை நீங்கள் இன்னும் உணரவில்லை என நான் நினைக்கிறேன். பைபிளில்கூட அத்தகைய குற்றத்தை நாம் காண முடியாது. சிறிய குற்றங்களையே கூட பொறுத்துக் கொள்ள முடியாமல் ஆண்டவர் அத்தகையோரை நெருப்பைக் கொண்டு தண்டித்ததாக பைபிள் சொல்கிறது. பத்து கோடி கறுப்பர்கள், உங்களது முன்னோர்கள், இந்த வெள்ளையர்களால் கொல்லப்பட்டார்கள்.

ஒன்றரை கோடி கறுப்பின மக்களை அடிமைகளாக இங்கு கொண்டு வந்து சேர்க்க, வழிநெடுக பத்துகோடி கறுப்பர்களை இந்த வெள்ளையர்கள் கொன்றார்கள். கடலின் ஆழத்துக்குச் சென்று பாருங்கள். கறுப்பு உடல்களை, ரத்தத்தை, உடைத்து நொறுக்கப்பட்ட உமது முன்னோர்களின் எலும்புகளை, உயிரோடு வீசப்பட்ட கர்ப்பிணிப் பெண்களை, அடிமைகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களைப் பின்தொடர்ந்து சென்றால் நல்ல தீனி கிடைக்கும் என்பதை உணர்ந்த சுறா மீன்களிடம் கேட்டுப்பாருங்கள்.''



படிப்பகம்

www.padippakam.com

"நீங்கள் இந்த அரங்கத்தைவிட்டு வெளியேறிச் செல்லும்போது யாரேனும் வெள்ளையனைக் காண நேர்ந்தால் அவனை நன்றாக உற்று நோக்குங்கள். உங்களை எங்கெல்லாம் அவன் பார்க்க விரும்பமாட்டானோ அங்கெல்லாம் சென்று அவனைக் கண்காணியுங்கள்".



"வெள்ளையர்களைப் பார்க்கும் போதெல்லாம் அடிமைகளாக்கப்பட்ட உமது முன்னோர்களின் ரத்தமும், வியர்வையும் கசிந்த முதுகுகளின் மீதுதான் - வெள்ளையர்களின் இந்த சாம்ராஜ்யம் கட்டப்பட்டுள்ளது என்பதை எண்ணிப் பாருங்கள். உலக நாடுகளிலேயே மிகவும் செல்வம் கொழிக்கும் நாடாக உள்ள அமெரிக்கா, அதனால்தான் திசைதோறும் வெறுக்கப்படுகிறது என்பதை மறவாதீர்கள்."

மால்கம் பேசி முடிக்கும்போது அங்கே கூடியிருப்பவர்களைப் பார்த்து, "நான் பேசியவற்றில் நம்பிக்கையுள்ளவர்கள் எழுந்து நில்லுங்கள்" என அழைப்பார். அப்போது அனைவரும் எழுந்து நிற்பார்கள்.

மால்கம் இப்படியான பேச்சின் நுணுக்கத்தை எலிஜா முகமதுவிடமிருந்தே கற்று வளர்ந்தார். தான் வழிகாட்டியாக நினைக்கும் எலிஜா முகமதுவைப் பற்றியும், அவர் இஸ்லாமுக்குள் ஈர்க்கப்பட்டது குறித்தும் தெரிந்து கொள்ள மால்கமுக்கு விருப்பம். எலிஜா முகமது தனது வாழ்வையே வழியாகக் காட்டி உதாரணமாக நடந்து கொள்பவர். நேஷன் ஆப் இஸ்லாமால் நடத்தப்படும் மளிகைக்கடை ஒன்றை கூட்டி சுத்தம் செய்யும் பணியை அவரே செய்வார். அவரது கையிலிருந்து துடைப்பத்தைப் பிடுங்கி அதைச் செய்ய மால்கம் முயல்வார். ஆனால், முகமது அதை அனுமதிக்க மாட்டார்.

"ஏதென்சின் சந்தையில் நின்றபடி தனது அறிவாழம் மிக்க உரையால் கூட்டத்தினரை ஈர்த்த சாக்ரடீசையும், தனது மாணவர்கள் தொடர்ந்துவர செல்லும் அரிஸ்டாட்டிலையும்தான் எலிஜா முகமது எனக்கு நினைவுபடுத்தினார்" என மால்கம் குறிப்பிடுகிறார்.

டெட்ராய்டு நகரில் 1931இல் எலிஜா முகமது டபிள்யூ.டி. பார்டு என்பவரை சந்தித்தார். பொருளாதார நெருக்கடியில் அமெரிக்கா மூச்சுத் திணறிக் கொண்டிருந்த காலம் அது. சிறிய உருவமும் பழுப்பு நிறமும் கொண்ட ஒரு மனிதன் வீடு வீடாக கதவைத் தட்டி துணிகளை விற்றுக் கொண்டு போனான். கிழக்கு திசையிலிருந்து வந்த ஒரு சகோதரன் என அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.



நீக்ரோக்கள் தூர தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்டதை நினைவு கூர்ந்த அந்த மனிதன், நீக்ரோக்கள் பன்றி மாமிசத்தை உண்ணக் கூடாது என நீக்ரோக்களிடம் எடுத்துச் சொன்னான். முகமது அப்துல்லா பிறந்த கொரேஷ் இனத்தில் பிறந்தவனாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த மனிதன் - டபிள்யூ.டி. பார்டு பைபிளில் எந்தவொரு கிறித்தவனை விடவும் தேர்ச்சியும் புலமையும் கொண்டிருந்தான்.

"கடவுளின் உண்மையான பெயர் - அல்லா. கடவுளின் மெய்யான மதம் - இஸ்லாம். அதனைப் பின்பற்றும் மக்களின் பெயர் - முஸ்லிம்கள்" என்றார் டபிள்யூ.டி. பார்டு. "சொர்க்கம் வானத்திலுமில்லை, நரகம் பூமியிலுமில்லை" என எடுத்துக்கூறிய அவர், கறுப்பின மக்களுக்கு அவர்களது பூர்வீக பூமியே சொர்க்கம் என கூறினார்.



எலிஜா பூலே என்ற மனிதர் டபிள்யூ. டி. பார்டின் போதனைகளைக் கேட்டுத்தான் எலிஜா முகமது ஆனார். இருவருமாகச் சேர்ந்து இஸ்லாமின் செய்திகளை பலரிடம் எடுத்துச் சென்றனர். இரண்டு இடங்களில் மசூதிகள் உருவாக்கப்பட்டு அவற்றுக்கான அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர். மூன்றாவது மசூதியை மில்வாக்கியில் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வந்தன. அந்த நிலையில் 1934இல் திடீரென டபிள்யூ.டி. பார்டு காணாமல் போய்விட்டார்.

பார்டு போனதற்குப் பிறகு எலிஜா முகமது பல்வேறு கொலை முயற்சிகளில் தப்பித்தார். தனது உயிரைக் காத்துக் கொள்ள ஊர் ஊராக சென்றார். ராணுவத்தில் பணிபுரியாமல் ஏமாற்றியதற்காக் 1942இல் எலிஜா முகமது கைது செய்யப்பட்டார். அதற்காக அவரை மூன்றரை ஆண்டுகள் சிறையில் அடைத்தது வெள்ளை நிறவெறி அரசாங்கம்.

> **"வெள்ளையர்களைப் பார்க்கும் போதெல்லாம் அடிமைகளாக்கப்பட்ட உமது முன்னோர்களின் ரத்தமும், வியர்வையும் கசிந்த முதுகுகளின் மீதுதான் - வெள்ளையர்களின் இந்த சாம்ராஜ்யம் கட்டப்பட்டுள்ளது என்பதை எண்ணிப் பாருங்கள்."**



படிப்பகம்

www.padippakam.com



எலிஜா முகமதுவின் வாழ்வில் நடந்த ஒவ்வொரு சம்பவமும் மால்கமுக்கு அவர் மீதான மதிப்பை கூட்டியது. ''நான் அவரது விசுவாசமான தொண்டனாக இருந்தேன். அவர் தன் மீது கொண்டிருந்த நம்பிக்கையைவிட நான் அவர்மீது வைத்திருந்த நம்பிக்கை உறுதியானது'' எனக் குறிப்பிட்டுள்ளார் மால்கம்.

மால்கம் மத சம்பந்தமான தனது பணிகளின் போது தன்மீது ஒரு சிறு குறையும் சொல்லப்படக் கூடாது என்பதில் கவனமாயிருந்தார். அதிலும் குறிப்பாக மசூதிக்கு வரும் பெண்களிடம் அவர் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொண்டார். மசூதியில் வழிபாட்டுக் கூட்டம் முடிந்த பிறகு நடைபெறும் சம்பிரதாயமான பேச்சின் போது, யாரேனும் ஒரு சகோதரி மால்கம் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவது வழக்கமாகி விட்டது. ஆனால், மால்கமுக்கு மண வாழ்வில் ஈடுபாடில்லை.

ஒவ்வொரு மாதமும் சிகாகோவுக்குச் செல்லும்போது யாரேனும் ஒரு சகோதரி எலிஜா முகமதுவுக்கு புகார் கடிதம் எழுதியிருப்பார். பெண்கள் விஷயத்தில் மால்கமின் கருத்துகள் மிகக் கடுமையானவையாக இருப்பதாகவே பெரும்பாலும் அந்தப் புகார்கள் இருக்கும். இஸ்லாம் பெண்களை வலிமையற்றவர்களாகவே சித்தரித்துள்ளது. வலிமை ஆணின் இயல்பு, பலவீனம் பெண்களின் இயல்பு என்பதே அதன் கொள்கை.

மால்கமின் பிரச்சனை இஸ்லாமால் ஏற்பட்டதல்ல. எந்தவொரு பெண்ணையும் காதலிக்க முடியுமென்ற நம்பிக்கை அவருக்கில்லை. பெண்கள் ஏமாற்றுக்காரிகளாக, நம்பகத்தன்மையற்றவர்களாக, சூழ்ச்சிக்காரிகளாக இருந்ததை மால்கம் அனுபவபூர்வமாகப் பார்த்திருக்கிறார். பல ஆண்கள் பெண்களால் நாசமாகிப் போனதைப் பார்த்தவர் மால்கம். உலகின் மிக வலிமையான மனிதனான சாம்சன், ஒரு பெண்ணால் பட்ட கஷ்டங்கள் மால்கமுக்குத் தெரியும்.

''மனைவிகளைவிட கணவர்களின் பிரச்சனைகளை விபச்சாரிகளே நன்றாக அறிவார்கள். மனைவிகள் எப்போதும் கணவர்களின் காதுகளை தமது குறைகளைச் சொல்லி நிரப்பிக் கொண்டிருக்க, விபச்சாரிகளோ கணவர்களை பேசச் சொல்ல கேட்கிறார்கள். அங்குதான் ஒரு ஆண் மனம் திறந்து பேசுகிறான்'' என்று குறிப்பிடுகிறார் மால்கம். எலிஜா முகமது கூட மால்கமிடம் திருமணம் செய்து கொள்ள வேண்டாமென்றே அறிவுரை சொல்லி வந்தார்.

மசூதிக்கு வரும் ஆண்களிடம் மால்கம் அதிகம் வற்புறுத்திய விஷயம், பெண்களிடம் விலகி இருக்க வேண்டும் என்பதாகவே இருந்தது.

இதனிடையே 'நேஷன் ஆப் இஸ்லாம்' என்பது ஒரு வலுவான சக்தியாக மற்றவர்களின் அங்கீகாரத்தைப் பெற ஆரம்பித்தது. அதிலும் குறிப்பாக போலிசை அவர்கள் எதிர்கொண்ட விதம், சகல தரப்பிலிருந்தும் அவர்களுக்கு மதிப்பை ஏற்படுத்தித் தந்தது. மால்கம் மாதந்தோறும் ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்து 'நேஷன் ஆப் இஸ்லாம்' இயக்கப் பணிகளில் ஈடுபட்டார். தெருமுனைக் கூட்டங்களில் பேசினார். புதிய உறுப்பினர்களை அடையாளம் கண்டு அவர்களை அமைப்பில் இணைத்தார்.

கறுப்பின மக்களின் தினசரி பிரச்சனைகள் வரை மால்கமிடம் கொண்டு வரப்பட்டன. நேஷன் ஆஃப் இஸ்லாமின் உறுப்பினர்கள் தாங்கள் சந்திக்கும் எல்லாவிதமான பிரச்சனைகளையும் மால்கமின் வழிகாட்டுதலுக்காக அவரிடம் எடுத்துக்கூறுவது வழக்கமாகி விட்டது. அப்படி ஒரு சகோதரியின் பிரச்சனை மால்கமின் கவனத்துக்கு வந்தது.

அந்த சகோதரி நர்ஸ் பயிற்சிக்காகப் படித்து வந்தார். தனது படிப்பு செலவுக்காக இயன்ற வேலைகளையெல்லாம் பார்த்து வந்தார். அவரது படிப்பு செலவின் பெரும் பகுதியை அவரது பெற்றோர் கொடுத்து வந்தனர். தான் முஸ்லிமாகிவிட்டதாக அந்த சகோதரி தன் பெற்றோரிடம் கூறியபோது அவர்கள் கடும் கோபமடைந்தனர். ''இஸ்லாத்திலிருந்து வெளியேற வேண்டும், இல்லாவிட்டால் படிப்புக்கான பண உதவியை நிறுத்தி விடுவோம்'' என அந்தப் பெற்றோர் எச்சரித்தனர்.

**❝ கறுப்பின மக்களின் தினசரி பிரச்சனைகள் வரை மால்கமிடம் கொண்டு வரப்பட்டன. நேஷன் ஆப் இஸ்லாமின் உறுப்பினர்கள் தாங்கள் சந்திக்கும் எல்லா விதமான பிரச்சனைகளையும் மால்கமின் வழிகாட்டுதலுக்காக அவரிடம் எடுத்துக்கூறுவது வழக்கமாகி விட்டது. ❞**

பெட்டி எக்ஸ் என்ற அந்த சகோதரியை மசூதியில் பார்த்தபோது இஸ்லாத்தின் மீதான அவரது பிடிப்பும், அவர் நடந்து கொண்ட விதத்தில் வெளிப்பட்ட மரியாதையும் மால்கமை கவர்ந்தன. அந்தக் கவர்ச்சி காதலாக மாறும் என மால்கம் அப்போது கற்பனை கூட செய்யவில்லை. •

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com



# படியுங்கள் அய்யம்மாவை

இது, நவீன கதை சொல்லிகளின் களம். வாசக மனதைக் கவர்ந்து, தன் புனைவு உலகில், அவனுக்கு உணர்த்தும் அனுபவங்கள், எத்துணை விதமாக இருக்கிறது. ஆனால், இந்தக் கதைச் சொல்லிகள் தம் புது தந்திரங்களை எங்கிருந்து பெறுகிறார்கள் என்பது வாசகர் அறியாத ரகசியமாக இருக்கிறது.




புதிய கதை சொல்லிகளுக்கு சவால்விடும் பழைய கதை சொல்லிகளும் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஈரலித்துப் போய் கிடப்பதாக நவீனங்கள் திட்டித் திரியும் கிராமத்து - சேரியின் மண்வெளிகள், தன் ஒவ்வொரு இடுக்குக்குள்ளும் பொதிந்திருக்கும். கதைவெளியும் மனவெளியும் யாரும் கவனிக்காத காட்டுப் பூவாக இன்னும் இருக்கிறது.

புதிய வாழ்க்கை முறையை நாடி அலையும் நவீனச் சூழலில் சேரிக் கதைச் சொல்லிகள் காணாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் குரல்வழி புனைவு உலகத்தைக் காக்கவேண்டியது யாருடைய கடமை?

'அய்யம்மா' தன் குரலைக் காப்பாற்றத் தேவையற்ற உணர்வு இல்லாமலிருந்தாலும், தன்னைப் போல் யாராவது காப்பாற்றுவார்கள் என்ற மரபு சிந்தனை, அவர் குரலாய் ஒலித்தபடி இருக்கிறது. நவீன சூழல் இதைச் செய்யுமா என்ன?

பதிவு வழியில் இதை சாத்தியமாக்கியிருக்கிறார்கள். ஆனால், மீதமிருக்கும் அய்யம்மாக்கள் போல வாழ்வின் மிச்சத்தோடு, சிதறிக் கிடக்கும் கதைச் சொல்லிகளை மறக்கும் நிலையை நினைக்கும் போது குலை பதறுகிறது. காலங்களைக் கடந்து எதிரொலித்து வரும் 'அய்யம்மாக்'கள் உங்களுக்கு ஆயிரம் கதை சொல்லுவார்கள் - நீங்கள் செவி சாய்த்தால். எனவே, அய்யம்மாவைப் படியுங்கள். ●

■ நூல் : **அய்யம்மா கதைகள்** ■ தொகுப்பாசிரியர்: சைமன் ஜாண் ■ வெளியீடு : கல்லாத்தி, 18-ஏ, முனிசிபல் குடியிருப்பு முதல் தெரு, மகாராஜா நகர் - 627 011 ■ பக்கங்கள் : 66 ■ விலை : 35/-




- நூல் : **கண்டதேவி தேரின் கனவு**
- ஆசிரியர் : **அ. மரிய ஜோ**
- வெளியீடு : முகில் வெளியீடு,
  26 - அ, வாழைத் தோப்பு, சிந்தாமணி சாலை, மதுரை - 625 001
- பக்கங்கள் : 108 ■ விலை : ரூ. 30/-

- நூல் : **ஒரு தமிழ்ப் பாமரனின் பயணம்**
- ஆசிரியர் : **மு. தனராசு**
- வெளியீடு : வைகை பதிப்பகம்,
  முதன்மைத் தெரு, தேவாரம்,
  தேனி மாவட்டம் - 625 530
- பக்கங்கள் : 752 ■ விலை : 200/-




- நூல் : **வரலாறும் மதவாதமும்**
- வெளியீடு : சவுத் விஷன்
  6, தாயார் சாகிப் 2ஆவது தெரு
  சென்னை - 600 002
- பக்கங்கள் : 48 ■ விலை : 5/-

- நூல் : **வேனில் காட்டுப் பறவைகள்** (தலித் கவிதைகள்)
- ஆசிரியர் : கோவேத சுவாமிநாதன்
- வெளியீடு : சுவேதா நிலையம்
  12, பழைய நத்தம் சாலை
  தபால் தந்தி நகர், மதுரை - 17
- பக்கங்கள் : 74 ■ விலை ரூ : 35/-

- நூல் : **ஞெகிழி (பிளாஸ்டிக்)**
- வெளியீடு : பூவுலகின் நண்பர்கள்
  306/6, பெல்லி ஏரியா, அண்ணா நகர்
  சென்னை - 600 040
- பக்கங்கள் : 66 ■ விலை : ரூ. 20/-






படிப்பகம்

www.padippakam.com



## குடியரசு

# அலைவுற்ற "அமைதியான வெற்றிடம்"

■ கவுதம சன்னா

3.3.1930 அன்று பிறந்த ஒரு குழந்தைக்கு பெரியார் அவர்களால் 'ஜனநாயகம்' என்று பெயரிடப்பட்டது. பொப்பிலி அரசர், திருவாங்கூர் அரசர் ஆகியோர் கலந்து கொண்ட 'ஜனநாயகம்' என்ற இதழ் வெளியீட்டு நிகழ்ச்சியில் ஒரு சிறுசம்பவமாய் பெயர்சூட்டல் நிகழ்ச்சி நடந்தது. பின்பு அதே குழந்தை தீவிர எழுத்தாளராய் மாறி 'தங்க ஜனநாயகம்' என்ற பெயரில் எழுதியபோது அண்ணாதுரை அவர்களால் 'குடியரசு' என்று தமிழ்ப்படுத்தப்பட்டது. இப்படி 'குடியரசான'வர் பின்பு கவிஞர் குடியரசு என்றே அறியப்பட்டார்.

ஒற்றைப் பரிமாணத்தோடு அறியப்பட்ட குடியரசு அவர்களின் மறுபக்கம் - நிலவின் மறுபக்கத்தைப் போல காட்சியின்றி இருக்கிறது. ம.தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளர் என்ற நிலையில் அவர் மறைந்த போதும், தன் ஓலை குடிசை குறித்து கவலையற்றவராய் இருந்த இவரின் மறுபக்கம், திராவிட அரசியலுக்கு முற்றிலும் நேர் மறையானது.

தத்துவம், கலை, இலக்கியம், விஞ்ஞானம், உளவியல், மொழியியல், நிறவியல், அரசியல் விவாதம், விசாரணை என்றிருந்த இவரது ஓயாத அலைச்சல், மரணத்தின் கடைசி நொடி வரை இயக்கியிருக்கிறது. 'தத்துவ சிந்தனை', 'நிர்வாணத்தில் நீ' என்று இரண்டு புத்தகங்களைத் தவிர ஏராள மானவை சிதறிக் கிடக்கின்றன. அவரது தேடலின் ஒரு சிறு அறிமுகம், ஒரு முழுமையான அறிமுகமாகக் கூட இருக்காது.

இளமைக் காலங்களில் அரசியலில் ஈடுபட்டுக் கொண்டு கலை குறித்த பயிற்சியும், ஆய்வும் தன் பிள்ளைகளை தேர்ந்த கலைஞர்களாக்க உதவியிருக்கிறது. ''நிறவியலில், நிறங்களின் உரையாடல் நடைபெறும் போது தோன்றும் மூன்றாவது நிறம், நிறம் மட்டுமல்ல, அது உணர்வின் ஆழ்நிலை வெளிப்பாடு'' என்பது இவர் கருத்து. 35 ஆண்டுகளுக்கு முன்னால் நிறம் குறித்த இவரது கருத்துகள் உளவியல் ஆய்வுக்குத் தூண்டியது. கனவுகளை ஆய்ந்தவர் ரகசியங்களின் வெளியேற்றம் என்று அறிவித்தார். ஓவியத்தில் மீமிகைவாதத்தினை (Surrealism) ஆய்ந்தார். இதனால், Surrealism ஓவிய மேதையான 'சல்வடார் டாலி'யும் கனவுகளை ஆய்ந்த சிக்மண்ட் பிராய்டும் இவரது கனவிற்கும் நேசத்திற்கும் உரியவராயினர்.

ஓவியம் பயின்ற காலங்களில் இசையையும் பயின்றதால், இசையில் வண்ணத்தையும், வண்ணத்தில் இசை தேடுவதும் இவருக்கு எளிதாகிப் போனது. புல்லாங்குழல் இசையில் இவருக்கிருந்த ஆர்வம், தன் ஆஸ்துமா நோயால் தொடர முடியவில்லை. மருத்துவர் இசைக் கருவியை மாற்றச் சொல்லி விட்டார். இதனால் முகவீணை, ஷெனாய், பின்பு வயலின், அதுவும் ஒரு கம்பி கொண்ட வயலின் சென்னையில் துரைசாமி என்ற இசை வித்வானிடம் இருந்த வயலின் அது. தமிழிசை மேற்கத்திய இசையில் இவர் பெற்ற பாண்டித்யத்தால், மேற்கத்திய இசைக் குறியீடுகளை (Notation) பகுப்பாய்வு செய்தபடி இருந்திருக்கிறார். 10 ஆண்டுகாலம் தன் மகன்களுக்கு மேற்கிந்திய இசையில் குருவாக இருந்து பயிற்றுவித்திருக்கிறார்.

தமிழிசையில், பிறருக்கு அவர் பயிற்சி அளிக்கத் தொடங்கியது மரபுப்படி 'மாயாமாளவ கவுளவி'யிலிருந்து அல்ல. நினைத்தபடி பைரவி, ரஞ்சனி, தோடி என்று தொடங்கியிருக்கிறார். எதையும் மேலிருந்து - பிரமிப்பிலிருந்து துவங்கி அதை எளிமையாகக் கற்றுத் தருவது அவர் பாணி. நல்ல குரல் வளம் உடைய குடியரசு அவர்களின் உடல் நலக் குறைவுக்கு இசைதான் மருந்து. கலைத்துறையில் அவர் முறைப்படியான ஆசானாக இல்லை, மாணவனாகவும் இல்லை. ஆனால், தேர்ந்த கலைஞர் என்பதுதான் அவரின் தனிச் சிறப்பு.

தற்கால திரைப்பட இசை மீது, அவர்கள் மொழியை சிதைக்கிறார்கள் என்று வருத்தத்தோடு பார்த்திருக்கிறார். இவருக்கு இசையில் இருந்த ஆர்வம் மொழியின் ஒலிக் குறிப்புகளை ஆய்வு செய்யத் தூண்டியிருக்கிறது. எழுத்தின் அடிப்படை ஒலிகள் பிறமொழி எழுத்தோடு எப்படி ஒன்றுகிறது என்பதற்கு ஜப்பான் எழுத்து வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்.

துணைவியார் அமராவதி. பிள்ளைகள் காந்திமதி, இசைவாணன், அண்ணாதுரை, அன்பழகன், தங்கமணி, பாரதிதாசன் ஆகிய அனைவரும் இசைக்கலைஞர்களாக இருக்கிறார்கள்.

இதைத்தொடர்ந்து



படிப்பகம்

www.padippakam.com

அவர் ஒளியைக் குறித்த ஆய்வில் இறங்கியிருக்கிறார். கலைஞர் என்ற நிலையைக் கடந்து, அவர் விஞ்ஞானியாகப் பரிணமித்து எதேச்சையானதல்ல. ஒளி குறித்தறிய அவர் கண்ணாடியியலில் தீவிர கவனம் செலுத்தியிருக்கிறார். கண்ணாடியின் குவிதன்மை, குழிதன்மை குறித்த அறிவு. அது ஒளியை உள்வாங்கி, வெளியேற்றும் ஆய்வுகள், புதிதாக 'சினிமா புரஜெக்டர்' ஒன்றை வடிவமைக்க உதவியது. காயலான் கடைகளில் கிடைத்த உதிரி பாகங்களைக் கொண்டு தானே சில உதிரி பாகங்களை உருவாக்கியும் அந்த புரஜெக்டரை வடிவமைத்திருக்கிறார்.

ஒளியைக் குறித்த அவரின் தாகம் நிறைய புத்தகக் கடனை உருவாக்கியிருக்கிறது. சி.எல்.எஸ். புத்தக நிலையத்தில் 'ஒளி' - (மூன்று தொகுதி) ஆங்கிலப் புத்தகம் கடனாக வாங்கிய போது பணம் கட்ட முடியாமல் அவர்கள் புத்தகத்தைத் திரும்பக் கேட்க, ஒரே இரவில் மூன்று தொகுதியையும் படித்து திருப்பியிருக்கிறார்.

கண்ணாடியியல் பற்றிய அவரின் ஒளி தேடல் வானவியலில் திரும்பியிருக்கிறது. அதற்காக புதிதாக 'டெலஸ்கோப்' ஒன்றை வடிவமைத்திருக்கிறார். இதுவும் காயலான்கடை பொருட்களைக் கொண்டுதான். இந்த டெலஸ்கோப்பில் நிலவின் தட்டைப் பரிமாணத்தைத் காண்பதற்கு பதில் அதன் குவிந்த உருண்டைப் பரிமாணத்தைக் காணமுடியும். அதோடு நிலவின் நிழல் பக்கத்தின் ஓரத்தையும் காணமுடியும். இந்த டெலஸ்கோப் வடிவமைப்பு, நிலவினைக் காண்பதற்கு மட்டுமல்ல; அதையும் தாண்டி இன்னொன்றை பரிசோதித்திருக்கிறார். டெலஸ்கோப் வழியாக நிலவின் அசல் பிரதிபலிப்பை திரையில் கொண்டுவர முயற்சித்து இரண்டு அடி வட்டம் வரையில் அதைப் பிரதிபலிக்க வைத்திருக்கிறார். இது விஞ்ஞானத் துறையில் புதிய முயற்சி.

விஞ்ஞான ஆராய்ச்சியில் அவருக்கு துணையாக இருந்தது அவரது பிள்ளைகள். குறிப்பாக அவரது மூத்த மகன் இசைவாணன் இருந்திருக்கிறார். வானசாஸ்திரத்திற்கு அடிப்படையான கணிதவியலிலும் பரிசோதனைகளை செய்திருக்கிறார். சுழி (0)க்கான மதிப்பை வரையறுப்பதில் அவரது ஆர்வம் சென்றிருக்கிறது. 'சுழி'க்கு 10 மடங்கு மதிப்புயர் தன்மை உண்டு என்பதை பேசியிருக்கிறார். ஆனால், கணிதம் குறித்து அவரோடு பகிர்ந்து கொள்ள பிள்ளைகளுக்கு நேரமின்றிப் போய்விட்டது.

> **“ தத்துவம், கலை, இலக்கியம், விஞ்ஞானம், உளவியல், மொழியியல், நிறவியல், அரசியல் விவாதம், விசாரணை என்று இவரது ஓயாத அலைச்சல், மரணத்தின் கடைசி நொடிவரை இவரை இயக்கியிருக்கிறது.**



> **'தத்துவங்கள் தான் உலகை ஆள்கின்றன' என்று அழுத்தமாக நம்பியவர் பிற்காலத்தில் அதை கடுமையாக மறுத்திருக்கிறார். இந்த மாற்றம் கடுமையான அதிருப்தியின் விளைவு என்று சொல்ல முடியவில்லை. ”**

விஞ்ஞானத்தின் மீதான ஆர்வமானது, விஞ்ஞானிகள் மீதான காதலாகவே குடியரசுக்கு மாறிவிட்டது. தன்னுடைய வீட்டில் பயன்படுத்திய பொருட்கள் மீது அதைக் கண்டுபிடித்தவர்களின் பெயரை அதன் மேல் குறித்து வைப்பார். தன்னுடைய 'விசிட்டிங் கார்டில்' தொலைபேசி என்ற இடத்தில் கிரகாம் பெல் என்றே பயன்படுத்தினார். தன் குடிசை வீட்டில் விஞ்ஞானியின் படமும், இசை மேதைகளின் படமும்தான் வைத்திருந்தார். பண்டிகைகளைக் கொண்டாடுவதைத் தவிர்த்து விஞ்ஞானிகளின் நினைவு நாள், கண்டுபிடிப்புகள் போன்ற வற்றைக் கொண்டாட வேண்டும். குடும்பத்தில் அதைக் கொண்டாடுவதுதான் வழக்கம். குழந்தைகளுக்கு இதை நினைவுபடுத்தி இனிப்புகளை வழங்குவார். ஆனால், 365 நாளும் இதை சொல்ல வேண்டுமென்றால், தனியாக இனிப்பு தொழிற்சாலையே வைக்க வேண்டுமென்று நண்பர்களிடம் ஆதங்கப்பட்டிருக்கிறார்.

இவற்றுடன்கூடவே குடியரசு அலைபாய்ந்து கொண்டிருந்த துறை, தத்துவம். தத்துவத்தின் மீதான அவரின் அளப்பரிய பரிசோதனை, ஆற்றல்களிலேயே தத்துவக் கவிஞர் என்று அழைக்கப்பட்டார்.

இந்திய சிந்தனை மரபில் இவர் தீவிரமான பரிச்சயமும் மதிப்பும் கொண்டிருந்தார். புத்தரில் தொடங்கி தற்கால ஜே. கிருஷ்ணமூர்த்தி வரையில், அதே அளவில் மேற்கத்திய தத்துவத்திலும் தேர்ச்சி பெற்றுள்ளார். ஆனால், எதிலும் திருப்தியுற்றவராக அவர் இல்லை. கருத்து X எதிர் கருத்திற்க்கு 'அப்பால்' என்று தேடல் வேண்டும் என்பதை வாழ்வின் கடைசி வரை தொடர்ந்திருக்கிறார்.

சென்னை எழும்பூர் புத்த துறவிகளிடையே அவர் ஆற்றிய உரையொன்று சிறப்பாகப் பேசப்படுகிறது. 'சிந்தனையும், சிந்தனையற்ற நிலையும்' என்பது அவர் பேசிய தலைப்பு. ஓசோவின் கடவுள் தன்மை கருத்தை குறித்தும், அதன் மத எதிர்ப்பு கூறுகளையும் பாராட்டியிருக்கிறார்.

'தத்துவங்கள் தான் உலகை ஆள்கின்றன' என்று அழுத்தமாக நம்பியவர் பிற்காலத்தில் அதைக் கடுமையாக மறுத்திருக்கிறார். இந்த மாற்றம் கடு



படிப்பகம்

www.padippakam.com

மையான அதிருப்தியின் விளைவு என்று சொல்ல முடியவில்லை. ஆனால், உலகை மாற்றியமைக் கக் கூடிய மார்க்ஸ்-இன் போத னையை அவர் ஏற்றுக் கொண் டார். ஆனால், 'அப்பால்' என்ற நிலைக்கு அதுவும் திருப்தி தர வில்லை.

இறுதிக் காலங்களில், உல கம் புறக்கணித்த தத்துவஞானி யான நீட்சே பற்றி தீவிரமாகப் படித்தார். நீட்சேவின் 'அதிமனி தன்' மீது அவருக்கு ஆர்வம் உண்டாகியிருந்தது. தத்துவத் தில் இசையைத் தேடுவதில் நீட் சேவை தேர்ந்தெடுத்திருந்தார். நீட்சேவின் 'மதமும் காமமும்' என்ற நூலின் தத்துவக் கருத்துகளை இசை வடிவில் ஒலிநாடாவாக வெளியிட்டி ருக்கிறார். இவரது மகன் இசைவா ணன் ஆலிவுட்டின் 'வார்னர் பிரதர்' நிறுவனத்திடமிருந்து வரவழைத்த சிறப்பு சத்தங்கள் இதற்கு பயன்பட்டி ருக்கிறது. மேற்கத்திய இசையில் குடி யரசு அவர்களுக்கு இருந்த ஆழ்ந்த பரிச்சயம், தத்துவத்தை வேறு வடி வில் கொண்டுவர உதவியது.

இன்றைய பின்நவீனத்துவவாதி கள் நீட்சேவை மறுபரிசிலனை செய் யும் இக்காலகட்டத்தில், குடியரசு நீட் சேவிடம் ஆர்வமாக இருந்தது, அவ ரது தத்துவத் தடம் எதுவென அறிவ தற்கு ஆர்வமாயுள்ளது. திராவிட இயக் கங்கள், தத்துவ, இலக்கியத் துறையில் வறண்டு தவிக்கும் நிலையில் இவ ரால் அதில் எப்படி இருக்க முடிந்தது என்பது புரியாத புதிராக இருக்கிறது.

திராவிட இலக்கியங்கள் குறித்து எந்தக் கருத்தையும் அவர் தெரிவிக்க வில்லை. ஆனால், அதை கவனித் திருக்கிறார். இலக்கியங்கள் முகிழ்ந்து வருவது அரிதாக இருக்கும் நிலையில் அதை விமர்சித்து அதன் வருகையைத் தடுக்க அவர் விரும்பவில்லை, ஆனால், இலக்கியத்திலும் மொழி எழுத்து வடி விலும் அவரது பரிசோதனை தொடர்ந் திருக்கிறது. கவிதையில் ஒரு வரி கவி தையில் பெரும் வீச்சை நிகழ்த்தியி ருக்கிறார்.

'துக்ளக்' சோ-வை பற்றி அவரது ஒரு வரிக் கவிதை:

"சோ எழுத்து ஒன்று எனவே துளி விஷம்"

இத்தனை அலைவுகளுக்கு இடை யிலும் ஓயாத அரசியல் பணி. அண் ணல் அம்பேத்கரும், பெரியாரும் அவ ரது நேசத்துக்குரியவர்களாகவும், எல் லா மேடைகளிலும் இவர்களை விளக் குவதற்கு உலக சிந்தனையாளர்கள் துணை வந்திருக்கிறார்கள்.

தன் பெயர் மாற்றிய அண்ணா துரை மீதும் மதிப்பு வைத்திருந்தார். தி.மு.க.வில் இவருக்கென மதிப்பு மறுக்கப்பட்ட போது, வெளியேறி ம.தி.மு.க.வில் இணைந்த போது நிம் மதியாக இருந்ததாக உணர்ந்தாராம். அதனால் வைகோ மீது இவருக்குத் தனி பாசம் இருந்தது.

இதையெல்லாம் மீறி பல கேள்வி கள் எஞ்சியிருக்கிறது. திராவிட இயக்க நபர்களுக்கு முற்றிலும் மாறாக, எல் லோரும் பெரியாரோடு நின்றுவிட அதிலும் திருப்தியில்லாமல் அலைந் தார். 72 வயதில் அவர் இறந்த போதும் தகுந்த அங்கீகாரமின்றி மறைந்த மாய மென்ன!

'நான் எதற்கும் பொருந்தாதவன்'- தன்னைப்பற்றி அவர் சொன்னது. அவரது ஆழமான தலித் பார்வை தி.மு.க. மட்டுமல்ல, திராவிட இயக் கங்களுக்கும் பொருந்தாமல், தலித் இயக்கங்களிடமும் ஏன் அங்கீகார மின்றிப் போனார். வறுமையில் மறைந்தாலும், ஆச்சரியம் தோன்ற வில்லை. உண்மையான தேடல் உள்ள ஒரு அறிஞனுக்கு உலகம் அளிக்கும் வெகுமதி இவருக்கும் வாய்த்தது.

நன்மை தீமைக்கு அப்பால் ஒன் றைத் தேடிய குடியரசு குறித்து அவர் மகன் இசைவாணன், ''அவர் எங்க ளுக்கு குரு, பிறகு தான் அப்பா. அவா எங்களுக்கு அறிவைதான் தந்தார். ஏழ்மை ஒரு பொருட்டல்ல, படி என்ற சொல்தான் எங்களுக்கு அவர் தந்த செல்வம்.''

அவரின் தத்துவத் தடத்தினை ஜென் துறவியான மட்சியோ பாஷோ - மறுபடியும் பிறந்ததாக இசைவா ணன் கருதுகிறார். இதை குடியரசு ஏற் றுக் கொண்டிருப்பாரா என்று தெரிய வில்லை. எந்தப் பாத்திரத்தின் வடிவை எடுத்தாலும் ஓடிப் பிரவகிக்கும் ஆறாக அவர் இருந்தார்.''. எல்லாவற்றுக்கும் 'அப்பால்' ஒன்றைத் தேடிய குடியரசு இறப்பதற்கு முன்பு கண்பார்வை இழந் தார். ஓயாத அவரது படிப்பின் முடிவை அது அறிவித்தது.

எந்த முடிவிற்குள்ளும் அடையா ளத்திற்குள்ளும் அவரைப் பொருத்து வது கடினமாக இருக்கிறது. வாச னையை கருவில் சுமந்து திரிந்து தன் மரணத்திற்குப் பிறகு கவனத்தை ஈர்க் கும் கஸ்தூரி போல அவர் மறைந்தார்.

இறக்கும் போது அவர் கடைசி யாகப் பேசியது -'உங்கள் பெயர் என்ன?' என்று மருத்துவர் கேட்க,

அவரிடமிருந்து ஆளுமையின் வெளிப்பாடாக உயிரோடு வெளிப்பட்ட வார்த்தை: '**கவிஞர் குடியரசு**'.

**"'நான் எதற்கும் பொருந்தாதவன்' - தன்னைப்பற்றி அவர் சொன்னது. அவரது ஆழமான தலித் பார்வை, திராவிட இயக்கங்களுக்கும் பொருந்தாமல், தலித் இயக்கங்களிடமும் ஏன் அங்கீகாரமின்றிப் போனார்!"**





படிப்பகம்

www.padippakam.com



குழந்தைகள் மீதான
வன்முறைகளைத் தடுத்திட

# பொது விசாரணை

அக்கறையுள்ளவர்கள் பங்கேற்கலாம்

- **நாள் : 27 - 28 மார்ச் 2002**
- **இடம் : உலகப் பல்கலைக் கழக சேவை மய்யம், 18, மேயர் ராமநாதன் சாலை, சேத்துப்பட்டு சென்னை - 31**

மனித உரிமை மீறல்களால் குழந்தைகளே மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் இளம் வயது, சுரண்டலுக்கும் வன்முறைக்கும் ஆளாக்கப்பட ஏதுவாக அமைந்து விடுகிறது. இந்திய அரசு, குழந்தைகள் உரிமைகளை சட்டரீதியாகவும், எழுத்து மூலமாகவும் அங்கீகரித்துள்ளது என்றாலும் நடைமுறையில் குழந்தைகளின் வாழ்நிலை மிகவும் கீழ்த்தரமாக உள்ளது.

குழந்தைகள் சித்ரவதைக்கும் பாலியல் வன்முறைக்கும் ஆளாக்கப் படும் நிகழ்வுகள் - குடும்பங்களில், வீட்டிற்கு அருகில், பள்ளிகளில், மத நிறுவனங்களில், காவல் அமைப்புகளில், பணித்தளத்தில் மற்றும் சுற்றுலாத் தளங்களில் நடைபெற்று வந்தாலும் - அவை வெளிச்சத்திற்கு வராமல் மறைக்கப்பட்டு விடுகின்றன.

இத்தகைய குழந்தை உரிமை மீறல்களில் தொழிலுக்காக கடத் தப்படுதலும், விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவதும் அடங்கும். வேலைகளுக்கென்றும் விபச்சாரத்தில் ஈடுபடுத்தவும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பல்வேறு நகரங்களுக்கும் கடத்தப்படுகின்றனர். தமிழகம் மற்றும் புதுவையிலுள்ள குழந்தைகள் மீதான அனைத்து வன்முறைகள் பற்றி பொது விசாரணை நடத்த பல தொண்டு நிறுவனங்களும், அமைப்புகளும் முன் வந்துள்ளன.

இப் பொதுவிசாரணையில், நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், நீதிபதி எச். சுரேஷ், டாக்டர் வசந்தி தேவி, வழக்கறிஞர் சுதா ராமலிங்கம் மற்றும் பெண்கள் ஆணையம், தலித் ஆணையம் மற்றும் தேசிய மனித உரிமை ஆணையத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர். பொது விசாரணை நடுவர்கள் முன்பு வழக்குகளைக் கொண்டுவர விரும்புபவர்கள், உடனடியாக கீழ்க் கண்ட முகவரிக்குத் தெரிவிக்கவும்.

**பொது விசாரணை நடுவர் முன்பு குழந்தை உரிமை மீறல் குறித்த ஒரு வழக்குடன் பாதிக்கப்பட்ட குழந்தையுடன் நீங்களும் பங்கேற்கலாம்.**

**உங்கள் பகுதியில் உரிமை மீறல் குறித்த விவரங்களை முன் கூட்டியே இவர்களிடம் தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் ஒரு அறிக்கை தயார் செய்து பொது விசாரணை நடுவர்களிடம் அளிக்க முடியும்.**

இப்பொது விசாரணையில் பங்கேற்க விரும்புபவர்கள், கீழ்க் கண்ட முகவரியில் அதை உறுதிப்படுத்திட வேண்டும். பங்கேற்பாளர் களுக்கு 27 மார்ச் 2002 அன்று தங்குமிடம் மற்றும் உணவிற்கான ஏற்பாடுகளை இப்பொது விசாரணையை ஏற்பாடு செய்யும் அமைப்புகள் ஏற்றுக் கொள்கின்றன. ■

தொடர்புக்கு : **மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**
**எண். 10, தாமஸ் நகர், சின்ன மலை, சைதாப்பேட்டை,**
**சென்னை - 600 015 தொலைபேசி : 235 35 03**



படிப்பகம்

# இந்துத்துவக் காவலர்களின் இலக்கியச் சந்தை

■ யாக்கன்

பளபளப்பாகயிருந்த அந்தப் பொருளைப் பார்க்கவே கண் கூசியது. கையில் எடுக்க முயற்சித்தேன். அப்போது அது நழுவி கீழே விழுந்தபோதிலும் அதில் மண் ஒட்டவில்லை. அந்தப் பொருளுக்கு மலர் என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. நாலைந்தாண்டுகளுக்கு முன்பு, இதே போன்று ஒரு மலர் - சிலபேருக்கு மலம் துடைக்கப் பயன் பட்டது பற்றி இப்போது பேசினாலும் அது நியாயமற்ற தாகி விடாது. 'மலம் துடைக்க மட்டுமே உதவும்' என்ற தரத் திலிருந்து, அது இன்று வரை மீளவில்லை; மீளும் நோக் கமும் அதற்கில்லை.

> “வேர்பிடித்து வளர்ந்து வரும் தலித் படைப்புகளின் மேல் சேற்றை வாரியிறைக்கும் கிறுக்குத் தனங்களுக்குப் பதில் தரவேண்டிய அவசியமிருக்கிறது. இலக்கியத் தரகர்களின்/ கோமாளிகளின் சதி நிறைந்த தாக்குதல்களை நாம் முறியடிக்க வேண்டியிருக்கிறது.”

அதை விடுங்கள். அந்த மலரை உற்பத்தி செய்தவர் களைப் பற்றி முதலில் உங்களுக்குச் சொல்லி விடுவது நல் லது. செல்வந்தர்களாகயிருந்தும், தரகுத் தொழில் செய்து பிழைத்து வரும் இவர்களைப் பற்றிச் சொல்ல நிறைய செய்தி யிருக்கிறது. இவர்கள் வெவ்வேறு மொழிகளில் செய்தி களை விற்றுப் பிழைப்பவர்கள். உலகச் சந்தையில், ஏழை கள் உதைபடும் செய்திகள்தான் அதிக விலைபோகும் என்ப தால் அவ்வப்போது அவற்றை வெளியிட்டு பரிதாபப்படு வர். கபடம் கொண்ட அவர்களது சிந்தனை ஒருபோதும் மாறாது. எவ்வித முதலீடும் இல்லாமல் கிடைக்கும் செய்தி கள் என்னும் மூலப் பொருட்களுக்கு, சனாதன தர்மத்தின் சாயத்தைப் பூசி விற்பனை செய்வார்கள்.

இலக்கியச் சந்தையில் இவர்கள் கால் வைத்ததற்கும் கார ணங்கள் உண்டு. இப்போதெல்லாம் இலக்கியச் சந்தையில் பணம் கொட்டுகிறது. வட்டிக்கடை நடத்துவதை விட கொள்ளை லாபம் கிடைக்கிறது என்கிறார்கள். அழியத்து வங்கியிருக்கும் இதிகாசத் தத்துவங்களை புனரமைப்புச் செய்வது இவர்களுக்கு மற்றொரு வேலையாகும். அரச பயங்கரவாதத்திற்கும், பெருமுதலாளிகளின் ஏகபோகத்திற் கும் எப்போதும் துணை நிற்கும் இந்தத் தரகர்கள், இலக்கி யம் பற்றி பேசுவதில் உள்ள கபடத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உற்பத்திப் பொருட்கள், உற்பத்தி எந்திரங்கள், உற்பத்தி மனிதர்களுக்கும் கூட தரகர்கள் இருப்பதில் நமக்கு வியப்பேதுமில்லை. ஆனால் எழுத்துக்கும், கவிதைக்கும், இலக்கியத்திற்கும் தரகர்கள்! 'இலக்கியத் தரகர்கள்'.

மாறிவரும் காலங்களுக்கேற்ப கடவுள்களை வடி வமைத்தவர்கள் இவர்கள். கடவுளிடம் தரகு வேலை பார்த்துக் கொண்டிருந்தாலும் அவ்வப்போது கடவுளையே விற்றுக் கொண்டிருப்பவர்கள். வரலாற்றுத் திரிபுகளை எழுதுவதில் வல்லவர்களான இவர்களது முன்னோர்கள், எழுதிக் குவித்த இதிகாசப் புராண குப்பைகளில் நிறுவப்பட்டிருக்கும் சனா தனம்தான், இந்த நவீன இலக்கியத் தரகர்கள் - இன்று வரை கட்டிக் காப்பாற்றி வரும் தத்துவம். சனாதனத் தத்துவம்.

இப்படியெல்லாம் தங்களைப் பற்றி வெளியில் பேச்சு அடிபடுவதை, இந்த சனாதனவாதிகள் ஒருபோதும் விரும்பு வதில்லை. மாற்றங்களை நேசிப்பவர்களாகக் காட்டிக் கொள் வார்கள். அதனால்தான் தீண்டப்படாத நந்தனை தீ வைத்துக் கொளுத்தி ஆழ்வாராக்கினார்கள்; ஏகலைவனை கட்டை விரலை வெட்டிக் கொள்ளச் செய்தார்கள்; கண்ணப்பனை

ஓவியம் : யாக்கன்



தன் கண்ணையே தோண்டியெடுக்க வைத்தார்கள்; வாலியைக் கொன்றார்கள்; குறவனையும், பாணப்புலையனையும் பற்றி எழுதி, தங்களை தலித் ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டார்கள்.

இப்போதெல்லாம் அந்த இதிகாசச் சரக்குகள் விலைபோவதில்லை என்பதால், இந்த சனாதனக் காவலர்கள் 'மனித நேய மிக்கவர்களாக' உருமாறியிருக்கிறார்கள். மனிதக் குப்பைகள் என்று தங்களால் சபிக்கப்பட்டிருந்த ஒரு கூட்டம், அதை மறுத்து, நாங்களும் மனிதர்கள்தான் என்று சொல்ல ஆரம்பித்த நாளிலிருந்து, அப்படி உருமாறத் தொடங்கியிருக்கின்றனர்.




எழுத்துச் சந்தையில் வீரதீரங்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கும் அறிவுப்புலிகள், இலக்கியக் கோமாளிகள், வாழ்க்கையின் கோரங்களை பேனா நுனிகளில் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் எல்லோரையும் சுண்டியிழுக்கும் சக்தி படைத்தவர்கள் இவர்கள். அவரவருக்கேற்றபடி விலைகள். சிலருக்கு மதுபுட்டிகள்; சிலருக்கு பாராட்டுப் பத்திரங்கள்.

**அரச பயங்கரவாதத்திற்கும் பெருமுதலாளிகளின் ஏகபோகத்திற்கும் கலாச்சார சீரழிவிற்கும் எப்போதும் துணை நிற்கும் இந்தத் தரகர்கள், இலக்கியம் பற்றி பேசுவதில் உள்ள கபடத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

பருவகாலம் தொடங்கியதும் வேக வேகமாக வேலைகள் நடக்கும். எல்லாம் ரகசியமாக. இலக்கியக் காடுகள் விதவிதமாக உருவாக்கப்படும். இரவு நேரங்களில் மங்கிய ஒளி விடுதிகளில் விவாதங்கள் நடக்கும். வண்ணம் பூசுவோருக்கு ஓலைகள் அனுப்பி வைக்கப்படும். தூரிகைகளின் மேல் படுத்துறங்கிக் கொண்டிருக்கும் அவர்கள், ஓலைகளைப் பெற்றுக் கொண்டு உற்சாகமடைவார்கள். வண்ணப்பூச்சு நடக்கும். காடுகள் பூத்துக் குலுங்கும். எல்லாம் முடிந்ததும், ஏற்கனவே தயார் நிலையிலிருக்கும் சந்தைகளில் விற்பனை துவங்கும்.

இலக்கியப் பசியோடு ஊர்சுற்றித் திரிபவர்கள், இந்த இந்துத்துவக் காவலர்கள் கட்டியெழுப்பிய இலக்கியக் காடுகளுக்குள் நுழைந்து ஆச்சரியப்பட்டுக் கொள்வார்கள். சிலர் வண்ணமயமான அதன் அழகில் மயங்கி நிற்பார்கள். அதிகமாக உட்கொண்டதால், செரிமானம் குறைந்து பேதியில் சக்தியற்று வீழ்ந்து கிடப்பார்கள் சிலர். ஒவ்வாமையால் வாந்தி எடுப்பவர்கள் கொஞ்சம். மலம் துடைக்கும் ஆவேசத்தில் மலரின் இதழ்களைக் கிழித்துக் கொண்டிருப்பவர்கள் கொஞ்சம். என்னைப் போல் வேலை மெனக்கெட்டுப் பேசிக் கொண்டிருப்பவர்கள் கொஞ்சம். இங்கே கதை இப்படியிருக்க, அங்கே தரகர்களின் பைகள் நிரம்பித் ததும்பும்.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் இத்தத் தரகுத் தொழிலில் கொடிகட்டிப் பறக்கும் இலக்கியச் சண்டியர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். அவர்களுள் சிலர், செய்யும் தொழிலில் தூய்மை வேண்டும் என்பவர்கள். இவர்கள் எந்நேரமும் இலக்கியச் சட்டங்களைப் பிறப்பித்த வண்ணமிருப்பர். அதற்கான அதிகாரத்தை மேற்கத்திய சித்தாந்தங்களிலிருந்து எடுத்துக் கொண்டதாக எழுதியும், பேசியும் வருபவர்கள். இலக்கியமே காலத்தின் சுவடுகள்தான் என்றும், மனிதர்களுக்கும் அதற்கும் தொடர்பில்லையென்றும் புத்தி ஜீவிகள் தர்க்கம் செய்துகொண்டே இருப்பர். அடிக்கடி இவர்கள் நடத்தும் இலக்கியப் பெருவிழாக்களில், சனாதனத்தின் வாரிசுகள், அதற்கான அடையாளகயிறுகளுடன் நிரம்பி வழிவர். கூடிக்கூடிப் பேசுவர். புதிய புதிய இலக்கியச் சதிகளைத் தீட்டுவர். பெருவிழாவாதிகளோ உண்டியலை தலைகீழாகக் கவிழ்த்தி சில்லறைகளை எண்ணிக் கொண்டே ஆனந்தக் கூத்தாடுவர்.

மலரில் சவடால் அடித்திருக்கும் ஓர் இலக்கியக் கோமாளியைப் பற்றிச் சொல்ல வேண்டும். இலக்கியத்திற்கும் கோமாளிகளுக்கும் என்ன உறவு என்று தவறுதலாக நீங்கள் நினைத்து விடாதீர்கள். பல சகாப்தங்கள் கோமாளிகளால்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் கோமாளியினால் உளரத்தான் முடியுமே தவிர வேறெதுவுமில்லை. இலக்கியத் தரகர்களின் மத்தியில் இந்த இலக்கியக் கோமாளியின் உளறல் மிகப் பிரபலமானது. இவரது தொழில், ஆடைகள் மறைத்துக் கொண்டிருக்கும் மனித உறுப்புகளை கனவுக் கண்களால் பார்த்து பரவசமடைவதும், உலகெங்கிலும் அலைந்து திரிந்து ஓரினச் சேர்க்கையாளர்களை அடையாளம் கண்டு அவர்களிடம் உண்டு, உறங்கி தற்கையெழுத்து வாங்கிக் கொள்வதுமாகும்.

இடையிடையே இன்னும் சில வேலைகளும் இவருக்குண்டு. அழகானதும் அடர்த்தி நிறைந்ததுமான பின்னிரவுகளில், உயர்வகை மது தரும் போதையும், சிகரெட்டின் நெடியும் மூளையில் உக்கிரத்தை கிளப்பும் சமயங்களில்தான் அந்த வேலை துவங்கும். மத்திய கிழக்கு நாடுகளில் பனி நிறைந்த பகுதியில் மலிவு விலையில் வாங்கிய பிரதிகளை பிரதி எடுக்கும் பணி துவங்கும். பேனா நுனி வேகமாக இயங்கும். பாலியல் வக்கிரங்களால் பக்கங்கள் நிறையும். உளவியலோடு கூடிய சுய தேவையாகவும் அது இருக்கலாம். அவரை அவரே பிரதியெடுத்துக் கொள்வார். மேலிருந்து கீழ்நோக்கியும் வலமிருந்து இடமாகவும் எழுதிக் குவிப்பதை - இலக்கியப் புரட்சியெனவும், பின்னை நவீனமெனவும் தனக்குத் தானே பேசிக் கொள்வார்.

ஏதேனும் ஒரு எழுத்து வியாபாரி முன்னுரை எழுதுவார். முகப்பு வண்ணம் பூசப்பட்டு 0° என அடையாளக் குறியிடப்பட்டு விற்பனை துவங்கும். பாலியல் பிரதிகளின் விற்பனைக்கு பஞ்சமிருக்குமா என்ன. இலக்கியக் கோமாளியோ மறுபடியும் வேறு கிரகங்களுக்குச் சென்று விடுவார். இலக்கியத் தரகர்களோ பாராட்டி, பரவசப்படுவார்கள்.

www.padippakam.com

மேற்கத்திய அல்தூசர், காம்யூ, டொனால்டு பார்த்தலேம், சார்த்தார், ஃபூக்கோ, கார்சியா, மார்க்ஸ்வெல், தெரிதா, போத்ரியா, லெவிஸ்ட்ராஸ் போன்றவர்களின் தத்துவங்களை இலக்கியக் கோமாளி பேசித்திரிவதை பார்த்துத்தான் இலக்கியத் தரகர்கள் புல்லரித்துப் போகிறார்கள். தன் கையேடுகளை 'நான் லீனியர்', 'மெட்டா பிக்ஷன்' வகை படைப்புகள் என்றெல்லாம் இலக்கியக் கோமாளி பிதற்றித் திரிவதை ஆமோதிப்பார்கள். இதையெல்லாம் கூட நாம் விட்டுவிட வேண்டும். தரகர்களும், சண்டியர்களும் கோலோச்சும் இடத்தில் கோமாளிகளும், கிறுக்கர்களும் ஏன் இருக்கக் கூடாது.

ஆனால், வேர்பிடித்து வளர்ந்து வரும் தலித் படைப்புகளின் மேல் சேற்றை வாரி யிறைக்கும் கிறுக்குத் தனங்களுக்குப் பதில் தரவேண்டிய அவசியமிருக்கிறது. இலக்கியத் தரகர்களின்/ கோமாளிகளின் சதி நிறைந்த தாக்குதல்களை நாம் முறியடிக்க வேண்டியிருக்கிறது.

பொதுவில் வைக்கப்படும் எதுவும் விமர்சனத்திற்குட்பட்டதுதான். அதில் நாம் அக்கறையோடிருக்கிறோம். ஆனால், 'தலித் இலக்கியம், தமிழில் நடைமுறையிலிருந்து வந்த அழகியலைக் கடன் வாங்கி, தனது அழகியலாக்கிக் கொண்டது' என்கிறார் கோமாளி.

ஓர் இலக்கியப் படைப்பு ஏதேனும் ஒரு பொது மொழியைப் பயன்படுத்தி, அந்த மொழி அமைப்பின் மூலம், தனது சாத்தியப்பாடுகளால் மற்றொரு மொழியை உருவாக்கிக் கொள்கிறது. படைப்பு ஒரு மொழியில் உருவாக்கப்பட்டிருப்பினும் அது மற்றொரு மொழி. அதற்கென தனி உளவியல் உண்டு. வரலாற்றில் தனக்கு மறுக்கப்பட்டவற்றை, தன்னால் தீண்டப்படக் கூடாதவை என்று தடை செய்யப்பட்டவற்றை உடைத்து, தலித் தியல், தனது மேம்பாட்டிற்காக, சாதி ஒழிப்பிற்காக மாற்றியமைத்து புதிய அறிவுச் சொல்லாடல்களை உருவாக்கிக் கொள்கிறது. இதுதான் தலித் அழகியல். இதை வேறொரு இடத்திலிருந்து தலித் படைப்புக்கள் கடன் வாங்கியிருக்கிறது எனில், சாதி ஒழிப்பிற்காக தமிழில் படைக்கப்பட்ட கதையாடல்களை அந்த இலக்கியக் கோமாளி சுட்டிக் காட்டியிருக்க வேண்டாமா? 'எக்ஸிஸ்டென்சலிச'த்தைப் பற்றியும் மார்பகங்களை மறைக்கும் 'பேன்சி பனியன்'களைப் பற்றியும் எழுதத்தெரிந்த இவருக்கு இந்தப் புரிதலுமா இல்லாமற் போய்விட்டது.

தலித் இலக்கிய வெளியில், புனித பீடங்களுக்கு இடமேயில்லை. அறிவு மமதையில் தனிநபர்களால் கட்டி எழுப்பப்படும் பீடங்கள், புற்று நோய்க் கட்டிகளென அறுத்தெறியப்படும். வளரும் தலைமுறை அதை உறுதிசெய்யும்.

> **"தலித் இலக்கிய வெளியில், புனித பீடங்களுக்கு இடமேயில்லை. அறிவு மமதையில் தனிநபர்களால் கட்டி எழுப்பப்படும் பீடங்கள், புற்று நோய்க் கட்டிகளென அறுத்தெறியப்படும். வளரும் தலைமுறை அதை உறுதிசெய்யும்."**

தமிழ்ச் சூழலில், வஞ்சிக்கப்பட்ட ஒரு மொழியைத் தனது மொழியாக்கிக் கொண்டு, வரலாற்றில் கட்டமைக்கப்பட்ட வாசிப்பு முறையை/மொழியின் வலிமையை, அதன் உள்ளீடை உடைத்தெறிந்த பாமாவின் படைப்புகளை - 'அழுகுனிக் கதைகள்' என்றும் 'நியூஸ் ரீல்' என்றும் சவடால் அடிக்கும் இந்தக் கோமாளியால் மட்டுமல்ல, பீடங்களில் அமர்ந்து கொண்டிருக்கும் அறிவுப் புலிகளாலும் மறைத்துவிட முடியாது.

இன்னும் ஒன்றையும் சொல்ல வேண்டும். இந்தக் கோமாளி பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் மேற்கத்திய சித்தாந்தங்களிடமிருந்து எந்தவொரு கொள்கை நெறிகளையோ, அரசியல் சித்தாந்தங்களையோ பெற வேண்டிய அவசியம் தலித்தியலுக்கு இல்லை. இதிகாசப் புராணங்களினாலும், அரசியல் வழிமுறைகளினாலும், சமூக வழக்கங்களினாலும் உருவாக்கப்பட்ட கட்டமைப்பை, அதன் படிநிலையை அடியோடு தகர்க்கும் முயற்சியில், தலித் கோட்பாட்டுடன் அவை ஒத்துப் போகின்றன.

எதைப் பேச வேண்டும், எதை எழுத வேண்டும், எத்தகைய மாற்றுச் சொல்லாடல்களை நிறுவ வேண்டும் என்பதை தலித் படைப்பாளிகள் தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர இந்தக் கோமாளியல்ல.

ஓவியம் : யாக்கன்



ஆதிக்கத் தொன்மையை உடைத்து, முறைமீறலான எதார்த்தங்களை வீழ்த்தி, புதிய படிமங்களை நிர்மாணம் செய்யும் அழகிய பெரியவனின் படைப்புகளிலும், புகழ், சாணக்கியா போன்றவர்களின் சிறுகதைகளிலும் இந்த 0° கோமாளி மேற்கோள் காட்டும் பகுதிகள், தலித் இலக்கியத்தின் மீது வெறுப்புணர்வையும் முகச் சுழிப்பையும் உருவாக்க முனையும் சூழ்ச்சி. இத்தகு இலக்கிய விரோதிகளை வளர்த்தெடுக்கும் சனாதனக் காவலர்கள் ஆபத்தானவர்கள்.

மலரின் கடைசிப் பக்கங்களில் நிறைந்து கிடக்கும் நடிகர், கடந்த 20 ஆண்டுகளாக இளைஞர்களின் மூளையை 'பிலிம் ரோல்' மூலம் உறிஞ்சிக் குடித்தவர். அவருக்கு சிவப்புக் கம்பளம் விரித்திருப்பதன் நோக்கம் நமக்கு பளிச்சென புலப்படுகிறது.

இனிமேலும் பருவகாலம் வரும். ரகசியமாக வேலைகள் நடக்கும். மலம் துடைக்க மலர்கள் தயாராகும். நமக்கும் தலித் முரசில் மூன்று பக்கம் கிடைக்கும். •



படிப்பகம்

www.padippakam.com




# தகப்பன் கொடி

**அழகிய பெரியவனின் புதிய நாவல்**

''ஒரு மனிதன் தன் வேர்களைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை என்றால் அவன் எப்படி தன் கிளைகளைக் குறித்து அக்கறை கொள்வான்' என்ற எம்.டேவிசின் வார்த்தைகள் என்னை நெடுநாள் யோசிக்கச் செய்தன. மெல்ல என் குடும்பத்து வயசாளிகளைப் பற்றிய செய்திகளை நான் திரட்டத் தொடங்கியபோது அவர்கள் கொஞ்சம் நிலங்களை வைத்திருந்ததும், அவர்கள் காலத்திலேயே அதைப் பறிகொடுத்ததும் தெரிந்தது. இந்தியாவில் தலித்துகளுக்கு நிலம் இல்லை. ஆனால், அவர்கள் நிலமே இல்லாமல் இருந்ததில்லை.

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சாதியினரிடம் தம் நிலங்களை அவர்கள் பறிகொடுத்திருக்கின்றனர். அன்று, ஆங்கில அரசாங்கம் தமிழ் நாட்டில் தலித்துகளுக்கென்று ஒதுக்கிய 12 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்களில் ஏறக்குறைய எதுவுமே தலித்துகளிடம் இன்று இல்லை.

நிலத்தோடு மனிதனுக்கு இருக்கிற உறவு அருகிவரும் இந்தக் காலத்தில், ஒரு தலித்துக்கும் நிலத்துக்குமான உறவும் வாழ்க்கையும் என்னவாக இருந்திருக்கும் என்று நான் எழுப்பிக் கொண்ட கேள்வியின் சிறுவிடையாக இந்நாவல் உருவானது. ஒரு தனி மனித அனுபவத்திலிருந்து, பல தலித்துகளின் கதையாக மாறி எம் மூதாதையரின் கதையாக இந்நாவல் உருமாறியிருக்கிறது.''

● விலை : ரூ. 65 ● பக்கங்கள் : 175 ● நூல் கிடைக்குமிடம்: தமிழினி, 342,டி.டி.கே. சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14

---

# தலித் கலை விழா



**பங்குனி 23 (2002 ஏப்ரல் 6)**
**வி டி ய .... வி டி ய ......**

தலித் மக்கள் தங்கள் வரலாற்றையும் நினைவுகளையும் தாங்களே நிகழ்த்திப் பார்க்கவும்... அரசியல், பொருளாதார, சமூகத் தளங்களில் ஒடுக்கப்பட்டோர் விடுதலை அடைவதற்கு முன்தேவையாக மக்கள் பண்பாட்டில் விடுதலைக்கான கூறுகளை உருவாக்கவும்... எம் மக்களின் மறைக்கப்பட்ட வரலாற்றையும் மறுக்கப்பட்ட அடையாளங்களையும் வெளிக் கொண்டு வரவும்... ஒன்பதாவது ஆண்டை நோக்கி...

''தலித் விடுதலைக்கு கலைகளையும் கருவிகளாக்குவோம்''

**மதுரை அரசரடி யூ.சி. பள்ளித் திடலில்**

- பெரிய மேளம்
- மாடாட்டம்
- கட்டைக்குழல்
- உரை வீச்சு
- ஜிம்ப்ளா மேளம்
- தேவராட்டம்
- செகண்டி
- தலித் குரலிசை
- நய்யாண்டி மேளம்
- கணியான்கூத்து
- கொம்பிசை
- காணிக்காரர் கோலாட்டம்
- பறையாட்டம்
- மகுடாட்டம்
- நாடகம்

அனைவரும் வருக :
தலித் ஆதார மய்யம் தமிழ் நாடு இறையியல் கல்லூரி, அரசரடி, மதுரை -16

(வீ-ம்)



படிப்பகம்

www.padippakam.com



# இணைப்பு விழா

தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் பேரவையும் புதிரை வண்ணார் சமுதாய நலச் சங்கமும் 18.1.2002 அன்று இணைந்தது. மேலும், சமுதாய மேம்பாட்டிற்கான கலந்துரையாடல் கூட்டம் பேரவையின் மாநில அமைப்புச் செயலாளர் சொ.சு. தமிழினியன் தலைமையில் நடைபெற்றது. பேரவையின் மாவட்டத் தலைவர் ராசி. பாலசுப் பிரமணியன், மாவட்ட ஆலோசகர் டி.ஆர். சந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.



சொ.சு. தமிழினியன், மாற்கு, பரதன்

புதிரை வண்ணார் சமுதாய நலச் சங்கம் பேரவையுடன் இணைந்து செயல்படுவதெனவும், ஆதிக்கச் சாதியினரால் சொத்துகள் சூறையாடப்பட்ட சங்கரலிங்கபுரம் மக்களுக்கு புதிரை வண்ணார் நலச் சங்கம் சார்பில் 5 மூட்டை அரிசி வழங்குவதெனவும், புதிரை வண்ணார் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் தடங்கலின்றிக் கிடைக்கவும், சமுதாய மண்டபம் அமைக்க அரசிடம் முறையிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆதிக்கச் சாதியினரால் சொத்துகள் சூறையாடப்பட்ட சங்கரலிங் கபுரம் தலித் மக்களுக்கு 27.1.2002 அன்று நிவாரண உதவியாக ரூ. 25 ஆயிரம் மதிப்புள்ள 33 மூட்டை அரிசி, அருட்தந்தை மாற்கு அவர்கள் முன்னிலையில் தூத்துக்குடி மாவட்ட தாத்தா ரெட்டமலை சீனிவாச னார் பேரவை சார்பில் வழங்கப்பட்டது.

அருட்தந்தை மாற்கு, பேரவை பொறுப்பாளர்கள் அனைவரையும் சங்கரலிங்கபுரம் தலித் மக்களுக்கு அறிமுகம் செய்து - பாராட்டும் தெரிவித்தார். பேரவை சார்பில் சேகரிக்கப்பட்ட 33 மூட்டை அரிசி, பேரவை பொறுப்பாளர் சார்பிலும், தனிப்பட்ட நபர்கள் சார்பிலும், தலித் மக்கள் சார்பிலும் சேகரிக்கப்பட்டதாகும். சங்கரலிங்கபுரம் தலித் மக்களுக்கு 'மனித உரிமைக்களம்' சார்பில் பரதன் 20 மூட்டை அரிசியை வழங்கினார். இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 15 மூட்டை அரிசி வழங்கப்பட்டது.

- நம் செய்தியாளர்

## திரு. ஆர்.கே. சுவாமிநாதன் முதலாம் ஆண்டு நினைவாக...



''புரட்சியாளர்கள்தான் மறைகிறார்கள்
புரட்சிக்கு என்றுமே மறைவில்லை''

- தலித் முரசு, தலித் தகவல் ஒருங்கிணைப்பு,
சமூக செயல்பாட்டு இயக்கம்,
சதர்ன் ரயில்வே கேட்டரிங் கிளீனர்ஸ்
யூனியன் சதர்ன் ரயில்வே கேட்டரிங்
எம்ப்ளாயிஸ் யூனியன்


'வடநாட்டுப் பெரியார் -
தென்னாட்டு அம்பேத்கர்' நூல்
விலை : ரூ. 35

The Dalit - bimonthly
தனி இதழ் : ரூ. 20
ஆண்டுக் கட்டணம் : ரூ. 150

'தலித் முரசு' 2001ஆம் ஆண்டு
12 இதழ்கள் பவுண்ட் செய்யப்பட்டது
தொகுப்பு விலை : ரூ. 100

'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர்
எழுத்தும், பேச்சும்' (Writings and
Speeches) (மராட்டிய மாநில அரசால்
வெளியிடப்பட்டது)

நீதிச் சக்கரம்
சமூக நீதி இதழ் - மாதம் இருமுறை
தனி இதழ் ரூ: 2
ஆண்டுக் கட்டணம்: ரூ. 50

அனைத்தும் 'தலித் முரசு'
அலுவலகத்தில் கிடைக்கும்




படிப்பகம்

www.padippakam.com

பரிசு ரூ. 1000

# தலித் முரசு சமூக நீதிப் போட்டி - 4

1. உலகத்தின் மிகப் பெரிய பாலைவனம் எது?
அ) சகாரா ஆ) தார் இ) அரேபியன் ஈ) கோபி

2. 'வேத வைரி' அல்லது 'வேதங்களின் எதிரி' என்பது யாருடைய சிறப்புப் பெயர்?
அ) புத்தர் ஆ) மகாவீரர் இ) பிளாட்டோ ஈ) அரிஸ்டாட்டில்

3. மரணக் கடல் அல்லது சாக்கடல் பற்றிய குறிப்பு எந்த மத நூலில் காணப் படுகிறது.
அ) பைபிள் ஆ) ரிக்வேதம் இ) ஆதிகிருந்தம் ஈ) குரான்

4. குயிலின் பூர்வீக நாடு எது?
அ) இந்தியா ஆ) அய்ரோப்பா இ) அரேபியா ஈ) சீனா

5. சித்தார்த்தன் மெய்யறிவு பெற்ற இடமான 'புத்த கயா' எங்குள்ளது?
அ) உத்திரப் பிரதேசம் ஆ) லும்பினி
இ) பீகார் ஈ) காட்மண்டு

6. Hurricane (அரிகேன்) என்பது என்ன?
அ) கடலில் உருவாகும் புயல் ஆ) மிக அதிக அளவு வெளிச்சம்
இ) தீவு ஈ) ஒருவகை பாலைவனம்

7. ''இந்த நாட்டில் தான் படிப்புக்கு ஒரு சாமி, செல்வத்துக்கு ஒரு தனி சாமி உள்ளது. ஆனால், அறிவுக்கும் பணத்திற்கும் வெளிநாடுகளைக் கையேந்தும் நிலை உள்ளது.'' இதைக் கூறியவர் யார்?
அ) டாக்டர் அம்பேத்கர் ஆ) பெரியார்
இ) கபீர் தாசர் ஈ) ராஜாராம் மோகன்ராய்

8. 1952ஆம் ஆண்டு உத்திரப் பிரதேச அரசின் ஜமீன் நிலங்களை அரசுடைமையாக்கும் சட்டத்திற்கு எதிராக ஜமீன்தார்களின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் யார்?
அ) ராஜாஜி ஆ) சி.ஆர். தாஸ்
இ) அம்பேத்கர் ஈ) வல்லபாய் பட்டேல்

9. குழல் விளக்குகளில் பயன்படுத்தப்படும் வேதிப் பொருளின் பெயர் என்ன?
அ) நியான் என்ற மந்த வாயு ஆ) ஆக்சிஜன்
இ) வெள்ளி ஈ) குரோமியம்

10. காகிதம் எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?
அ) மூங்கில் ஆ) பருத்தி இ) கரும்பு கழி ஈ) பாஸ்பரஸ்

..................................................

**சென்ற போட்டிக்கான விடைகள் :**

1. சதி 2. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 3. கரி 4. ஒரு வகை உப்பு 5. சீனா 6. தஸ்லிமா நஸ்ரின் 7. வாடிகன் நகரம் 8. அரிஸ்டாட்டில் 9. அருண்சோரி 10. பெரியார்

வெற்றி பெற்றோர்:

1. ஜி.எம். ஜவகர், 26/21, பந்தர் கார்டன், 3ஆவது தெரு பெரம்பூர், சென்னை - 600 011
2. ப. செல்வகுமாரி, 40, காந்தி சாலை மேற்கு தாம்பரம், சென்னை - 600 045

- இந்தப் பகுதியின் விடைத்தாளில் கேள்வி எண்களும் அதற்கான விடைத் தொகுதியும் தரப்பட்டுள்ளன. (காண்க - படம் : 4)
- விடையைத் தேர்ந்தெடுத்த பிறகு, வினாவிற்குத் தகுந்த விடையை ☒ குறியிட்டு நிரப்பவும்.
- ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடை எழுதியிருந் தால் அது பரிசீலிக்கப்பட மாட்டாது.
- கண்டிப்பாக 'தலித் முரசு' இதழில் வெளியாகும் படிவத் தில்தான் விடையளிக்க வேண்டும். (இப்பக்கத்தை கிழித்து அனுப்பவும்)
- ஒருவர் எத்தனைப் படிவங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- இப்படிவத்தை நகல் எடுத்து விடையளிப்பது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.
- சரியான விடையை எழுதியவருக்கு ரூ.1,000 பரிசுத் தொகை அளிக்கப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதி யிருந்தால், பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
- வெற்றி பெறும் வாசகரின் பெயர், அடுத்து வரும் இதழில் வெளியிடப்படும்.

போட்டியின் நிபந்தனைகளை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்.

கையொப்பம்..............................

முகவரி..............................

..............................

..............................

**விடைத்தாள் - 4**

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |
| 8 | | | | |
| 9 | | | | |
| 10 | | | | |

படம் 4



படிப்பகம்

www.padippakam.com

# நீங்களே சொல்லுங்கள் !

தலித் முரசு

1. கடந்த 5 ஆண்டுகளில் 'தலித் முரசு' இதழை
   - ☐ தொடர்ந்து படித்து வருகிறேன்
   - ☐ பிரச்சினை தொடர்பாக ஒரு சில இதழ்களைப் படிக்கிறேன்
   - ☐ கிடைக்கும்போது படிக்கிறேன்
   - ☐ கேள்விப்பட்டிருக்கிறேன்; படித்ததில்லை.

2. தலித் முரசு பற்றிய தங்களின் கருத்து
   - ☐ முழு நிறைவைத் தருகிறது
   - ☐ சுமார்
   - ☐ பரவாயில்லை
   - ☐ மோசம்

3. தலித் முரசில் வெளியாகும் பகுதிகளில் உங்களுக்குப் பிடித்தது
   - ☐ கட்டுரை - செய்திகள்
   - ☐ கவிதை
   - ☐ புகைப்படங்கள்
   - ☐ பிற ______________

4. உங்கள் பகுதியில் தலித் முரசு எப்படி கிடைக்கிறது?
   - ☐ சந்தா மூலம்
   - ☐ நண்பர்கள் மூலம்
   - ☐ கடைகளில்
   - ☐ நூலகத்தில்

5. உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்வுகளை எப்படி செய்தியாக்க விரும்புகிறீர்கள்?
   - ☐ செய்தியாளர்கள் தங்கள் பகுதிக்கு நேரடியாக வருவதன் மூலம்
   - ☐ அஞ்சல் மூலம் தகவல் அனுப்புதல்
   - ☐ பிற வழிகளில்

6. தலித் முரசு விற்பனையை அதிகரிக்க நீங்கள் முன் வைக்கும் திட்டங்கள் என்ன?
   - ☐ எழுதி அனுப்புவேன்
   - ☐ தகவல் தருவேன்

7. மற்ற தலித் பத்திரிகைகளில் இருந்து தலித் முரசு எவ்வகையில் வேறுபடுகிறது? அவை என்ன?

   ................................................................................................

   ................................................................................................

   ................................................................................................

8. தலித் முரசில் நீங்கள் விரும்பும் மாற்றங்கள் என்ன?

   ................................................................................................

   ................................................................................................

   ................................................................................................

பெயர் : ................................................................

முகவரி : ................................................................

................................................................

................................................................

**பாரபட்சமற்ற விமர்சனங்களை எழுதுபவர்களுக்கு பரிசு உண்டு.**



படிப்பகம்

www.padippakam.com



# அழகுக்கு அழகு சேர்க்கிறது!




■ அழகுக்கு அழகு சேர்ப்பதுபோல் வெளிவந்துள்ளது - 'தலித் முரசு' இலக்கியச் சிறப்பிதழ். புயலின் வீச்சாகக் கிளர்ந்து போராடத் தூண்டும் அட்டைப்படம். ராஜ்கவுதமனின் நெத்தியடியான நேர்காணல். சிறப்பான சிறுகதைகள். கவிதைகளும் அதற்கான ஓவியங்களும் காவியமாய் மின்னுகின்றன. அனைத்து வகையிலும் ஒப்பற்ற இதழாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ள இதழைச் சேயை எடுத்து அணைத்துக் கொள்ளும் தாய்போல நெஞ்சில் சேர்த்தணைத்துக் கொள்ளத் தோன்றுகிறது.

**தமிழேந்தி,** *அரக்கோணம்*

■ தலித் மக்களின் விடுதலைக்காக கள ஆய்வுப் பணிகளை இதழியலின் வழியே ஐந்து ஆண்டுகளாக மேற்கொள்கிற தங்களுக்கு வாழ்த்துகள்.

**திருவைக்குமரன்,** *'கவிக்காவிரி' மாத இதழ், திருச்சி*

■ எனது நீண்ட நாள் எண்ணத்தை 'தலித் முரசு' நிறைவேற்றியிருப்பது கண்டு எல்லையற்ற ஆனந்தம் கொண்டேன். தலித் மக்களின் பிரச்சினைகளை பொது மக்கள் அறிந்திடும் வகையில் 5 ஆண்டுகளாக பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்திவரும் தலித் முரசு, இன்னும் பல ஆண்டுகள் தனது தொண்டை தொடர விரும்புகிறேன்.

**கண்ணையன்,** *சாலவாக்கம்*

■ 'தலித் முரசு'-அடித்தள மக்களின் விடுதலைக்காகப் போராடுவதில் முதன்மை பெற்று விளங்குகிறது. இந்தியாவில் வேரூன்றிக் கிடக்கும் சாதிக் கொடுமையை பல கோணங்களில் எழுதிவரும் தலித் முரசு, தொடர்ந்து களப் பணியாற்ற வாழ்த்துகள்.

**மலரவன்,** *வேலூர்*

■ தலித் மக்கள் பிரச்சினைகளை பதிவு செய்வதைப் போன்றே, அடுத்த கட்ட நகர்வான மண், மொழி விடுதலையையும் - நமது இதழில் பதிவு செய்திடல் வேண்டும். தமிழிய, தலித்திய எழுச்சியை மழுங்கடிக்கும் மிப்பெரிய ஊடகம் திரைப்படம். இதை அழுக்கு என்று புறந்தள்ளி நிற்பதைவிட, மக்கள் என்னவாக இருக்கிறார்களோ அதனுள் ஊடுருவிதான் நமக்கான விடுதலையை வென்றெடுக்க முடியும். அதன் வழி, அவ்வப்போது வருகிற சில நல்ல திரைப்படங்களை நமது இதழில் விமர்சனம் செய்து கருத்தியலை விதைக்கலாம்.

**ப. இசையரசு,** *மயிலை*

■ தலித் மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஆயுதமாகவே தலித் முரசு விளங்குகிறது. தலித் மக்களின் விடுதலைக்குப் போர் ஆயுதமாக விளங்கும் தலித் முரசைப் படித்து இளைஞர்கள் போராளிகளாக மாறவேண்டும்.

**ஏ. கலியமூர்த்தி,** *நாங்கூர்*

■ இலக்கியச் சிறப்பிதழின் அனைத்துக் கட்டுரைகளும் அருமை. அழகிய பெரியவனின் 'கலகம் செய்யும் எழுத்து' கட்டுரை - ஒட்டுமொத்த தலித் இலக்கியம் பற்றிய ஆய்வாக அமைந்திருந்தது. 'அம்பேத்கர் ஏன் பதவி விலகினார்' என்னும் கட்டுரை, எழுச்சி ஊட்டும் வகையில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. எளிமையான மொழி பெயர்ப்பினை வழங்கிய சங்கமித்திரைக்கு வாழ்த்துகள்.

**பேரா. பத்மாவதி,** *சென்னை*

■ தலித் விடுதலையில் அக்கறை கொண்ட தலித் அல்லாதவர்களின் கலை இலக்கியத்தையும் போராட்டத்தையும் பொருட்படுத்தத் தேவையில்லை என்கிற 'தொனி' ராஜ்கவுதமன் பேட்டியில் ஒலிக்கிறது. குறுங்குழுவாதம், கோட்பாடுகளின் தோல்விக்கே வழிவகுக்கும் என்பது அனுபவ உண்மை. தலித்திசத்திற்கும் இது பொருந்தும்.

**ருத்ரன்,** *காவேரிப்பட்டினம்*

■ புதூர் அன்பழகன் தமது கதையில் ''இனிமேல் உங்களுக்கு அடிமை வேலை செய்ய மாட்டோம், நீங்களே செஞ்சிக்கங்க...'' என்று தலித் மக்கள் உறுதிபட கூறுவதுபோல் கதையின் இறுதிவரை கொண்டு சென்றுள்ளார். மிகச் சரியான முடிவு இது.

**இ.சி. ராமச்சந்திரன்,** *பெரிய சேமூர்*

■ தலித் முரசு இலக்கியச் சிறப்பிதழ், எதிர்பாராத அளவுக்கு சிறப்பாக வெளிவந்துள்ளது. அழகிய வடிவமைப்பும் உள்ளடக்கங்களும் மாற்றுக் கலாச்சாரத்தை முன்மொழிபவை. குறிப்பாக, ஓவியங்கள், படைப்பை மெருகேற்றுகின்றன. சமூக சூழலைப் புதிய எழுச்சியுடன் கொண்டு செல்லும் தலித் இலக்கியங்கள், புதிய வீச்சோடு உயர்ந்து நிற்பதைப் பெருமையாக அறிவிக்க முடிகிறது.

**விழி.பா. இதயவேந்தன்,** *கண்டமாநாடி*

## இதற்குத் தீர்வுதான் என்ன?

சேலம் மாவட்டத்தில் இரு பெரும்பான்மையான சமூகங்கள் வாழ்ந்து வருகின்றன. ஒன்று தலித் சமூகம், மற்றொன்று வன்னியர் சமூகம். ஆனால், ஒரு சமூகத்திற்கு மட்டும் அரசு ஒத்துழைப்பும், அரசியல்வாதிகளின் அரவணைப்பும் இருந்து வருவதால் சேலம் மாவட்டத்தில் தினந்தோறும் தலித் மக்கள் பல்வேறு வன்கொடுமைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

பிணம் புதைக்க சுடுகாடு கேட்டதினால், கொண்டப்ப நாயக்கன் பட்டியில் குடிநீரில் விஷம் கலந்தனர். கூலி உயர்வு கேட்டதினால் ஓமலூர் வட்டம் செம்மண் கூடலில் கர்ப்பிணிப் பெண் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். வழக்குப் பதிவானதே தவிர, குற்றவாளிகள் எதிலும் கைது செய்யப்படவில்லை. இதைவிட மிகக் கொடுமை, சேலம் மாநகரில் ஒரே வாரத்தில் தலித் சமூகத்தைச் சார்ந்த இரண்டு பெண்கள் பாலியல் வன்முறைக்கு வன்னியர்களால் உள்ளாக்கப்பட்டதுதான்.

சேலம் மாநகர குடியியல் உரிமைகள் பாதுகாப்புப் பிரிவு குற்ற எண் : 1/2002 U/S 3(1) (XII) of SC / ST (PA) ACT 1989 ஆகும். ஆனால், இன்றைக்கு இரு வழக்குகளை ரத்து செய்திட காவல் துறையே முயன்று வருவது தான் வேதனைக்குரியது. மனித உரிமையில் அக்கறை கொண்டோர் இதில் விரைந்து தலையிட வேண்டும்.

– **ஆர். சக்திவேல்,** *மாநில அமைப்புச் செயலாளர், இந்தியக் குடியரசுக் கட்சி, ராசிபுரம்*



படிப்பகம்

www.padippakam.com



# பெயரற்றவர்கள்

■ ஜோதி லஞ்செவர்

அனுதாபமோ, அன்போ
கெஞ்சிக் கேட்பதால் இங்கு ஏதும் கிடைக்காது
நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்தால்
கிடைப்பது அநீதிதான்
கண்ணீருக்கு மதிப்பேதும் இல்லை,
தண்ணீர் பிடிப்பதே ஒரு போராட்டம்
அணைந்து போன நெருப்பிலிருந்து வரும் புகைக்குள்
உன்னைச் சுருட்டி வைத்துக் கொள்வதில் பயனில்லை
உன் உடலுக்குள்ளேயே கலகத்தின் எரிதழலை
நீ விதைக்க வேண்டும்.

சில சமயம் ஒரு கலகம் மின் மினிப் பூச்சி போல்
மின்னலாம் -
அது அசலானதாய் இல்லாமல் இருக்கலாம் -
ஆனாலும் அப்போது அதற்கு வெளிக்காற்றைக் கொடு
அதனை ஒளிரச் செய்ய.

''கவிதையின் மூலமாகப் புரட்சி வரும்''
ஒரு காலத்தில் நானும்தான் அப்படி நினைத்தேன்
ஆனால் புரட்சி செய்தால்தான் வாழ்வதில்லை கவிதை
விசுவாசமற்ற அதே நேற்றைய முகங்கள்
நட்புக் கரத்தை நீட்டுகின்றன
ஒரு வாளினைக் கொண்டு காயத்தை ஏற்படுத்தியவாறே...
பகைவனுடன் நடத்திய போராட்டத்தில்
அவர்கள் வீரியமற்றவர்களாக்கப்பட்டனர்
வார்த்தைகளைக் கொண்டு வீடுகளை எரித்தனர்
ஆனால், வீடுகள் எரிந்தபின் வார்த்தைகள் இறந்தன
மானுடத்தின் கவிதைக்காக
நாம் மனிதர்களாக இருக்க வேண்டும்
ஆனால் அவர்கள் காற்று வீசும் திசையில் பறக்கிறார்கள்.

வறட்சியான இந்தப் பாலைவனத்துப்
பசுங்கிளிகள்
வெறும் கானல் நீரெனத் தெரிந்து விட்டது.
அவர்கள் தமது வசதிக்கேற்ப
தாங்கள் விரும்பும் இடத்திற்குப் பார்வையைத் திருப்புகின்றனர்
தங்களது இறக்கைகளில் வலு இல்லாதபோது
மற்றவர்களின் இறக்கைகளை வெட்டுவதற்கு
வசதியான வார்த்தைகளைக் கண்டெடுக்கிறார்கள்.
அவர்கள் வார்த்தை மாளிகைகள் கட்டுகின்றனர்!
ஆனால், நான் பார்த்திருக்கிறேன் அவை தகர்ந்து விழுவதை

'காலாராமும்' 'சாவ்தார் குளமும்' -
துன்பத்தின் வரலாறு
நம் இதயங்கள் ஒவ்வொன்றிலும் செதுக்கப்பட்டுள்ளது
ஆனால், நீரின் மீது அவர்களால்
சொற்களைச் செதுக்க முடிந்தாலும்
இந்திரயாணி அவற்றைக் காப்பாற்றாது.

குறிப்பு : 'காலாராம்', 1930-35ஆம் ஆண்டுகளில் அண்ணல் அம்பேத்கர் தலைமையின் கீழ் நாசிக் நகரத்தில் உள்ள காலாராம் கோயிலில் தலித்துகள் நுழைவதற்காக நடத்தப்பட்ட சத்தியாகிரகப் போராட்டத்தையும் 'சவ்தார் குளம்', 1927-30இல் அவரது தலைமையில் மஹாட் நகரில் பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் உரிமைக்காக நடத்தப்பட்ட போராட்டத்தையும் குறிக்கின்றன. அவை அம்பேத்கரின் தலைமைக்கிருந்த வலுவின் குறியீடுகள்.

கடைசி வரி, 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவரும் அண்ணலின் போற்றுதலுக்குரியவருமாயிருந்த துக்காராமின் பக்திக் கவிதைகளைக் குறிக்கிறது. பார்ப்பனர்களின் ஆணையின் பேரில் அவரது கவிதைகள் இந்திரயாணி ஆற்றில் தூக்கியெறியப்பட்டதாகவும், ஆனால் அதிசயிக்கத்தக்க முறையில் அந்த ஆறு அவற்றைப் பாதுகாத்து துக்காராமிடமும் மகாராட்டிர மக்களிடமும் ஒப்படைத்ததாகவும் ஒரு அய்தீகம் நிலவுகிறது.

அம்பேத்கரின் தலைமையில் கீழிருந்த வலுவான, லட்சிய அர்ப்பணிப்பு மிக்க போராட்டங்களை அடித்தளமாகக் கொண்ட தலித் இயக்கத்துடன் அதற்கு நேர்மாறான இன்றைய தலித் தலைவர்கள், கவிஞர்கள், அறிவுஜீவிகள் ஆகியோரை ('வார்த்தை மாளிகைகள் கட்டுபவர்கள்', 'கானல் நீரான பசுங்கிளிகள்') ஒப்பிடுகிறார் மராத்தியப் பெண் கவிஞர் ஜோதி லஞ்செவர்.

இக்கவிதையை மராத்தியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்கள் எஸ்.கே., விமல் தோரட், எலியனார் செல்வியோட் ஆகியோர். குறிப்பும் (ஆங்கிலம் வழி) தமிழாக்கமும்: எஸ்.வி.ராஜதுரை

நன்றி : *Culture Religion and Society - Essays in honour of Richard W. Taylor, Bangalore 1996*



படிப்பகம்

www.padippakam.com



# கலையும் இலக்கியமும் யாருடைய நன்மைக்காக?

சுயமரியாதை இயக்கத்தார் மத சம்பந்தமான ஆபாசங்களை எடுத்து வெளிப்படுத்துகின்ற காலத்தில் அதற்குச் சரியான சமாதானம் சொல்ல யோக்கியதை இல்லாத நமது பண்டிதர்கள், தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காகப் பழைய கலைகள் என்னும் சாக்கின் பேரில் - அதன் நிழலில் போய் மறைந்து கொண்டு, 'சுயமரியாதை இயக்கத்தார் பழைய கலைகளை நாசம் செய்கின்றார்கள்' என்று பழி சுமத்துவதன் மூலமே அவைகளைக் காப்பாற்றப் பார்க்கிறார்கள்.

கோயில்களைக் குற்றம் சொல்லி, அவற்றில் உள்ள விக்ரகங்களின் ஆபாசங்களை எடுத்துக்காட்டி, இம்மாதிரிக் காட்டுமிராண்டித்தனமான உணர்ச்சியை மக்களுக்கு வளர்க்கலாமா என்றும், இந்த ஆபாசத்திற்காக இவ்வளவு பணச் செலவும் நேரச் செலவும் செய்யலாமா என்றும் கேட்டால் - ஓவியம் என்னும் நிழலில் புகுந்து கொண்டு 'அவைகள் அவசியம் இருக்க வேண்டும்' என்றும் 'அவைகள் அழிந்தால் இந்திய ஓவியக் கலை அழிந்துவிடும்' என்றும், 'சாமி பக்திக்காகத் தாங்கள் கோயில்களைக் காப்பாற்றுவதில்லை' என்றும் 'ஓவியக் கலை அறிவுக்காகக் கோயில்கள் காப்பாற்றப்பட வேண்டும்' என்றும் சொல்லுகின்றார்கள்.

நமது பண்டிதர்களின் ஓவியக் கலையும், காவியக் கலையும் போகின்ற போக்கைப் பார்த்தால், அவர்களுக்கு உள்ள பகுத்தறிவுக் கலை எவ்வளவில் இருக்கின்றது என்பது ஒருவாறு தானாகவே விளங்கும். மக்களுக்கு ஓவியம் வேண்டுமானால், இந்தியக் கோயில் ஓவியமும் இந்துக் கடவுள்கள் ஓவியமும் கடுகளவு அறிவுள்ள மனிதனும் ஒப்ப முடியாத, மதிக்க முடியாத ஓவியங்கள் என்பதோடு, அவை மனிதத் தன்மையும் பகுத்தறிவும் உள்ள மக்களால் உண்டாக்கப்பட்ட ஓவியம் என்று சொல்ல முடியாததான நிலையில் இருப்பதையும் காணலாம்.

எப்படியெனில், இந்திய ஓவியம் என்பது இந்து மத சம்பந்தமான கடவுள், புராணம் ஆகியவைகளைப் பற்றியதைத் தவிர, தனிப்பட்ட இயற்கை அறிவைப் பற்றியது மிக மிக அரிது என்றே சொல்ல வேண்டும். அது மாத்திரமல்லாமல், அவைகளில் இயற்கைக்கு முரண்பட்டவையே 100க்கு 99 ஓவியங்கள் என்றும் சொல்ல வேண்டும்.

சாதாரணமாக மனிதனும் மிருகமும் புணர்வதும், மிருக முகத்துடன் மனிதன் இருப்பதும், மிருகங்கள் பறப்பதும், மிருகங்களின் மீது அளவுக்கு மீறின மக்கள் இருப்பதும், பட்சிகளின் மீது மக்கள் இருப்பதும், மக்கள் பறப்பதும்; 4 கைகளும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, அய்ந்து, ஆறு முகங்களும்; சிறிய உருவத்தின் மீது பெரிய உருவங்கள் இருப்பதும், தாமரைப் பூவின் மீது ஒரு பெண் நிற்பதும், இன்னமும் இதைவிட எத்தனையோ பொருத்தமற்ற, சாத்தியமற்றதான உருவங்களே இன்று ஓவியமாகக் கருதப்படுகின்றன.

சாதாரணமாக, மேல் நாட்டு ஓவியங்களைப் பார்த்தால் இது ஓவியமா, உண்மைத் தோற்றமா என்று மருளும்படியாகவும், அவைகளுடைய சாயல் முதலியவைகளிலிருந்தே குணம், காலம், இடம், நடவடிக்கை முதலியவைகள் தெரிந்து கொள்ளும்படியாகவும், அவைகள் பிரத்தியட்சமாக இயங்கிக் கொண்டிருப்பது போலவும், எவ்வளவோ அருமையான காரியங்கள் வெகு எளிதில் மிகச் சாதாரண தன்மையில் அறியும்படியாகவும், நாமே பார்த்த மாத்திரத்தில் சுலபத்தில் பழகிக் கொள்ளும்படியாகவும் இருப்பதைக் காணலாம்.



ஆகவே, அப்படிப்பட்ட அருமையான ஓவியங்களையும், சித்திரங்களையும், புதுமைகளையும் விட்டு விட்டு - அநாகரிகமும், காட்டுமிராண்டித்தனமுமான, மிருகப் பிராயமும் கொண்டதான உருவங்களை வைத்துக் கொண்டு கொஞ்சமும் வெட்கமில்லாமல் அவைகளுக்குப் பணம், காசு, நேரம் ஆகியவை செலவு செய்து, கீழே விழுந்து அவைகளிடம் பக்தியையும் காட்டிக் கொண்டு, 'ஓவியக் கலைக்காக - அக்கலையைக் காப்பாற்றுவதற்காக அவைகளிடம் இப்படிச் செய்கின்றோம்' என்றால், இது பகுத்தறிவும் யோக்கியக் குணமும் அடைந்த மனிதர் என்பவர்களின் செய்கையாகுமா - பேச்சாகுமா என்று கேட்கின்றோம்.

இந்த இடத்தில் நாம் முக்கியமாய்க் குறிப்பிடுவது என்னவென்றால், நமது பண்டிதர்கள் என்பவர்களின் வயிற்றுப் பிழைப்புக்கும், புத்தக வியாபாரத்திற்கும், வாழ்க்கை நிலைமைக்கும் இம்மாதிரிக் காட்டுமிராண்டித்தனமான அநாகரீகமான காவியங்களும் ஓவியங்களுமல்லாமல் வேறுவகை ஒன்றில்லாமல் போனதால், அவர்கள் இத்தனை மோசமான பொய்யையும், புரட்டையும் வஞ்சகத்தையும் சொல்லிக் கொண்டு, இவைகளைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் வந்துவிட்டது.

ஆகவே, இம்மாதிரி ஆபாசமும் அநாகரீகமுமான காவியமும், ஓவியமும் அழிக்கப்பட வேண்டுமானால், முதலாவதாக நமது பண்டிதர்கள் என்பவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு - வாழ்க்கை நலத்திற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டியது, பகுத்தறிவையும் நாகரீகத்தையும் விரும்பும் பொதுமக்கள் கடமையேயாகும்.


*'குடி அரசு' கட்டுரை - 26.4.1931*

> "இந்த நிலையில் புராணங்கள், காவியங்கள் ஆகியவைகள் இலக்கியத்திற்கும், இலக்கணத்திற்கும் பயன்படுகின்றனவா - பயன்படுத்தப்படுகின்றனவா அல்லது மக்களை இலக்கண இலக்கிய அறிவற்ற மக்களாக்கப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதைச் சிந்தியுங்கள்."

படிப்பகம்

www.padippakam.com

EZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN / CPMG-151 / 2001 Posted at Patrika Channel Egmore RMS / 1 Periodicals
Registered with the Registrar of Newspapers for India Under No. 71325 / 97 Licensed to Post without Prepayment Licence No. 47




Owned and Published by P. Chandragesan from No. 6, 37th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 an
printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandragesa

படிப்பகம்